விலை ரூபா: 15.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது

Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 பங்குனி 12 சனிக்கிழமை (26.03.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 097

ராம்கோ MADRAS CEMENTS LTD RAMCO CEMENT
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து
RAMCO

# தமிழ்க் கட்சிகளின் யோசனைப்படி

# அரசியல் தீர்வு முன்னெடுக்கப்படும்

## அலரி மாளிகையில் ஜனாதிபதி அறிவிப்பு



(கொழும்பு)

தமிழ் அரசியல் கட்சிகளின் யோசனைத் திட்டத்தின் அடிப் படையில் அரசியல் தீர்வு முன்வைக்கப்படும். இவ்வாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஊடக நிறுவனங்களின் பிரதானிகளுடன் நேற்று அலரி மாளி கையில் நடைபெற்ற சந்திப்பின் போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இணக்கப்பாட்டின் அடிப்படையிலான அரசியல் தீர்வுத் திட்டம் ஒன்று முன்வைக்கப்படவுள்ளதாக குறிப்பிட்ட ஜனாதிபதி மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னரான நல்லிணக்க நடவடிக் கைகள் குறித்து தமிழ் அரசியல் கட்சிகளுடன் ஆரம்பக்கட்ட (20ஆம் பக்கம் பார்க்க)

## புலனாய்வுத்துறை லண்டன் விரைவு

(கொழும்பு)

நாடுகடந்த தமிழீழ அரசாங்கத்தின் செயற் பாடுகள் அதிகரித்துவரும் நிலையில் அதனை சீர்குலைக்கும் நோக்கில் இலங்கைப் புல னாய்வுப் பிரிவினர் லண்டனுக்கு சென்றுள் ளதாக கொழும்பு ஊடகமொன்று செய்தி வெளி யிட்டுள்ளது.

தமிழ் மக்கள் தங்களுடைய இலட்சிய மான தமிழீழ கோட்பாட்டை கைவிட்டு ஒன்று பட்ட இலங்கைக்குள் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஆஸியில் 900 அகதிகள் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்

(சிட்னி)

அவுஸ்திரேலியாவில் அரசியல் புகலிடம் கோரியுள்ள ஆயிரத்து 500 அகதிகளில் 900 பேர் தற்போது தடுத்துவைக்கப்பட்டுள்ளதாக அவுஸ்திரேலிய குடிவரவுத் திணைக்களம் முதல் தடவையாக தகவல் வெளியிட்டுள்ளது.

அதிகாரிகளின் தகவல்படி குறித்த 900 பேரில் 481 பேர் வரை ஒரு வருட காலத்திற்கு மேலாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்த நிலையில் (20ஆம் பக்கம் பார்க்க)

## ஒபாமாவின் உருவப்படம் எரிப்பு; அமைச்சர்களும் பங்கேற்பு

# அமெரிக்காவைக் கண்டித்து கொழும்பில் ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடு கள் லிபியா மீது நடத்திவரும் தாக்குதல்க ளைக் கண்டித்து கொள்ளுப்பிட்டி ஜும்மா பள்ளி வாசலுக்கு முன்பாக நேற்று வெள்ளிக் கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று நடைபெற்றது.

நேற்று நண்பகல் ஜும்மாத் தொழுகைக் குப் பின்னர் முஸ்லிம் அமைப்புக்களால் முன்னெடுக்கப்பட்ட இந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கலந்துகொண்டு லிபியா மீதான தாக்குதலைக் கண்டித்து பதா கைகளைத் தாங்கியவாறு கோஷங்களை எழுப்பியுள்ளனர்.

அத்துடன் அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபா மாவின் உருவப் பொம்மை மற்றும் பராக் ஒபா மாவின் கார்ட்டூன் சித்திரங்கள் வரையப்பட்ட பதாகைகளை ஆர்ப்பாட்டக்காரர்கள் தீயிட் டுக் கொளுத்தினர். (20ஆம் பக்கம் பார்க்க)

# தேர்தல் முழுமை பெற்ற பின் சுயாதீன தேர்தல் ஆணையகம்

## ஜனாதிபதி அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் அனைத்து உள்ளூராட்சி சபைக ளுக்கான தேர்தல்கள் நடைபெற்று முடிந்த பின்னரே சுயாதீன தேர்தல் ஆணையகத்தை அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள் ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ அலரி மாளி கையில் நேற்று ஊடக நிறுவனங்களின் செய்திப் பிரிவின் பிரதானிகளைச் சந்தித்துக் கலந்துரையாடியபோதே இவ்வாறு கூறியுள் ளார்.

அத்துடன் தேர்தல் முறையில் மாற்றத் தை ஏற்படுத்துவது, இந்தத் தேர்தல்கள் நிறை வுற்ற பின்பே எனவும் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ (20ஆம் பக்கம் பார்க்க)

# வவுனியாவையும் கைவிட்டு வெளியேறுகிறது ஐ.சி.ஆர்.சி

(வவுனியா)

வவுனியாவில் செயற்பட்டு வந்த சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கக் குழுவின் அலுவல கம் மூடப்படுவதாக அறிவிக்கப்படுகின்றது.

இதன் மூலம் வடபகுதியிலிருந்து சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் முழுமையாக வெளி யேறியுள்ளது. எனினும் அந்தக் குழு கொழும் பிலிருந்து தொடர்ந்து தனது மனிதாபிமான பணிகளை முன்னெடுக்கும் என்று சர்வதேச செஞ்சிலுவைக் குழுவின் பேச்சாளராகிய சரசி விஜேரத்ன தெரிவித்திருக்கின்றார்.

கொழும்பிலிருந்து செயற்படுமாறு இலங் கை அரசாங்கம் சர்வதேச செஞ்சிலுவைக் குழுவை கேட்டுக்கொண்டதற்கு அமைவாக வவுனியா அலுவலகம் மூடப்படுகின்றது. எனினும் அதன் மனிதாபிமான பணிகள் தடைப்படமாட்டாது என்று அவர் தெரிவித் தார்.

(ந-5)

# நல்லிணக்க ஆணைக்குழு முன் ரணில் சாட்சியமளிக்கமாட்டார்

## ஐ.தே.க. அறிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் ஐக்கிய தேசியக் கட்சி யின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் முன் னிலையில் சாட்சியமளிக்கமாட்டார் என ஐக்கிய தேசியக் கட்சி கூறியுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சி, (20ஆம் பக்கம் பார்க்க)



## முஸ்லிம்களின் அபிலாசைகள் தீர்வு வேண்டும்- மாவை

(கொழும்பு)

தேசியப் பிரச்சினைக்கான எந்தவொரு தீர்வையும் முஸ்லிம்களின் அபிலாசைக ளையும் பூர்த்திசெய்யவேண்டும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் மாவை சேனாதிராஜா நேற்று நாடாளு மன்றில் வலியுறுத்தியுள்ளார்.

தமது கட்சி அரசாங்கத்துடனான பேச்சு வார்த்தையின்போது இதை வலியுறுத்தியுள் ளதாக அவர் கூறியுள்ளார்.

அவர் மேலும் (20ஆம் பக்கம் பார்க்க)

சித்திரைப் புதுவருடத்தை முன்னிட்டு
இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அனைவருக்குமான நவீன அழகிய தெரிவுகளுக்கு...
நல்லூர்,
சரவணா ரெக்ஸ்
இல. 526, 529, பருத்தித்துறை வீதி, நல்லூர். (பின்வீதி) யாழ்ப்பாணம்.
இல. 770, 772, கே.கே.எஸ் வீதி, தட்டாதெருச் சந்தி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**Study & Work in UK and Canada**

Intake Get Register Now
Collecting the application until March 31st 2011
start the academic on August 2011
இறுதிச் சந்தர்ப்பம் IELTS தேவையில்லை
Administration & Documentation
என்பன வெற்றிகரமான முறையில் எங்களால் செய்து தரப்படும்.
ஐரோப்பிய நாடுகளுக்கான வீசா பெறுவதற்கான Sponsorship பிரச்சினையா? உடனடியாக ஏற்பாடு செய்து தரப்படும்.
சகல தொடர்புகளுக்கும்: 0729994777
London City College
No.01, Deanston House, Deanston Place, Colombo-03
(C-2291)

# பாடசாலை நூலகங்களுக்கு நாளை புத்தகம் கையளிப்பு

வட மாகாணத்திலுள்ள பாடசாலைகளின் நூலகங்களுக்கான புத்தகங்கள் கையளிக்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 மணிக்கு வேம்படி மகளிர் உயர் தரப் பாடசாலை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

வட மாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறியினால் இந்தப் புத்தகங்கள் பாடசாலை அதிபர்களிடம் கையளிக்கப்படவுள்ளன.

எனவே சகல பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொண்டு பாடசாலை நூலகங்களுக்கான புத்தகங்களைப் பெற்றுக் கொள்ளுமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ந-6)

**வர்த்தகப் பெருமக்களே...**

பெறுமதிமிக்க உங்கள் வியாபார நிறுவனங்களை இலகுவாகப் பதிவு செய்து, அதற்குரிய கௌரவத்தையும் உத்தரவாதத்தையும் பெற்றுக் கொள்ளுங்கள்.
தொடர்புகளுக்கு:-0729994777
(C-2290)



கிளிநொச்சி தர்மபுரம் வித்தியாலயத்தின் புதிய கட்டிடம் நேற்று திறந்து வைக்கப்பட்டது. இந்நிகழ்வில் விருந்தினர்கள் அழைத்துவரப்படுவதையும், புதிய கட்டடத்தை நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும், துவிச்சக்கர வண்டிகளை மாணவர்களிடம் நாமல் ராஜபக்ஷ வழங்குவதையும் படங்களில் காணலாம். (படங்கள்: என்.குமார்)

# சுனாமிக்குப் பின்பான உதவிகளை புலிகளிடம் வழங்க இந்தியா விரும்பவில்லை

## விக்கிலீக்ஸ் தகவல் தெரிவிப்பு

(நியூயோர்க்)

**2004ஆம் ஆண்டு சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் இந்தியாவின் உதவிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நேரடியாக கையளிக்கப்படுவதற்கு புதுடில்லி விரும்பவில்லை என விக்கிலீக்ஸ் இணையத்தளம் வெளியிட்டுள்ள தகவல் குறிப்பில் இருந்து தெரிய வருகின்றது.**

இந்தியாவின் உதவிகள் தமிழீழ விடுதலைப் புலிகளிடம் நேரடியாகக் கையளிக்கப்பட்டால் அது விடுதலைப் புலிகளை அங்கீகரிப்பதாக அமைந்துவிடுமென மத்திய அரசு கருதியதாக இத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களுக்கு இந்தியாவின் உதவிகள் அரசாங்கத்தின் மூலம் செல்வதையிட்டு தனக்கு ஆட்சேபனை இல்லை என 2004 ஆம் ஆண்டின் இறுதியில் இடம்பெற்ற சுனாமி ஆழிப்பேரலையின் பின்னர் இந்தியா கூறியதாக விக்கிலீக்ஸ் வெளியிட்டுள்ள இந்தியாவுக்கான அமெரிக்க தூதரகதகவல் குறிப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்விடயம் குறித்து மேலும் தெரியவருவதாவது,

வடபகுதி மக்களுக்கான உதவிகளை நேரடியாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் ஊடாக வழங்கப்பட வேண்டும் என விடுதலைப் புலிகள் விடுத்த கோரிக்கையை ஏற்கத் தயாராகவில்லை என இந்தியா வெளிவிவகார அமைச்சின் பணிப்பாளர் தரண்ஜித்சிங் சந்து கூறினார்.

இந்தியாவின் நிலைப்பாட்டையே அமெரிக்க அரசாங்கமும் கொண்டிருப்பதாக இந்தியாவுக்கான அமெரிக்க தூதுவர் டேவிட் மல்பீல்ட் தனது தகவல் குறிப்பில் தெரிவித்திருந்தார்.

சுனாமி ஆழிப்பேரலை உதவிகள் பற்றிய கருத்துக்கள் அமெரிக்காவுக்கும், இந்தியாவுக்கும் இடையில் பிளவுகள் ஏற்படுத்தப் பயன்படும் என விடுதலைப் புலிகள் கருதுவது நப்பாசையாகும் என தரண்ஜித்சிங் சந்து தெரிவித்தார்.

சுனாமி பேரலையின் பின் ஏற்பட்ட நிலைமைகளால் அரசாங்கமும், விடுதலைப் புலிகளும் மோதலிடும் வலுவை இழந்த பின்னர் ஏதோவொருவகையில் இருதரப்பினருக்கும் இடையில் ஒற்றுமையை ஏற்படுத்துவதற்கான வாய்ப்புக் குறித்து தரண்ஜித்சிங் சந்து ஆராய்ந்தார் என இத்தகவல் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

## 6 கோடி ரூபாய் தங்கத்தை காணவில்லை

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலுள்ள சுங்கப்பிரிவு களஞ்சிய அறையிலிருந்து 6கோடி ரூபாய் பெறுமதியான தங்கம் காணாமல் போனமை குறித்து விசாரணை நடத்துவதற்கு சுங்கத் திணைக்களத்தின் சிரேஷ்ட அதிகாரிகள் இருவரை சுங்கப் பணிப்பாளர் நாயகம் சுதர்ம கருணாரட்ன நியமித்துள்ளார்.

நகையகம் ஒன்றின் உரிமையாளர் ஒருவர் இறக்குமதி செய்த 50மில்லியனுக்கு மேல் பெறுமதியான தங்கம் காணாமல் போயுள்ளது. கடந்த புதன் கிழமை ஊழியர்கள் சிலரின் உதவியுடன் ஒரு குழுவினர் களஞ்சியசாலையை உடைத்து தங்கத்தை திருடி இருக்கலாம் என நம்பப்படுகிறது. (ந-5)

## விபத்தில் படுகாயம்

ஆட்டோ- மோட்டார் சைக்கிள் விபத்தில் இருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இச்சம்பவம் நேற்று மாலை 4மணியளவில் ஆனைப்பந்தியில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விபத்தில் நெடுந்தீவைச் சேர்ந்த க.கணாதீபன் (வயது-27), யாழ்ப் பாணத்தைச் சேர்ந்த ம.தர்மகுலராசா ( வயது - 45) ஆகிய இருவருமே படுகாய மடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

* * *

துவிச்சக்கர வண்டியில் பயணித்த வேளை பின்னால் வந்த கன்ரர் வாகனம் மோதியதில் ஒருவர் படுகாயமடைந்தார். ஆனைப்பந்தியில் நேற்று பிற்பகல் 2மணியளவில் இடம்பெற்ற இச்சம்பவத்தில் யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் திணைக்களத்தில் கடமையாற்றிவரும் கோவில் வீதி நல்லூரை வசிப்பிடமாகக் கொண்டவருமான ஆ.ஏகானந்தசிவம் (வயது 58) என்பவரே படுகாயமடைந்தவராவார். இதன்போது சம்பந்தப்பட்ட ஹன்ரர் வாகனம் நிறுத்தாமல் தப்பிச் சென்றுள்ளது. படுகாயமடைந்தவர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். (ந-5)

**காணி, வீடு விற்பனைக்கு**

யாழ்.கச்சேரிக்கு அருகாமையில் (500 m) 2 1/4 பரப்பு காணி, வீடு (நல்ல தண்ணீர் கிணற்றுடன்) உடன் விற்பனைக்கு. விலை நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு: 0776333142
(4227)

**மனோதத்துவ வைத்தியம்**
(General Psychotheraphy)
பிரபல மனோதத்துவ நிபுணர்
Dr.P.ஆறுமுகம்
T.P.: 0719315664 , 0777569205
மீண்டும் யாழில்
27.03.2011 முதல் 05.04.2011 வரை உடன் பதிவுகளை மேற்கொள்ளவும். பதிவுக் கட்டணம் ரூபா: 300/-
பதிவு செய்தவர்களுக்கு மட்டும் பார்வையிடப்படும்.

ஆரம்பநிலை மனநோய் விரைவில் சுகமாக்கலாம். நீரிழிவு நோய்க்கு திறமான மூலிகை மருந்து உண்டு. ஆஸ்துமா, மாதவிடாய்க் கோளாறுகள், வெள்ளைபடுதல், குழந்தைப் பேறின்மை, வாதநோய், தலையிடி, பல் முரசு கரைதல் போன்ற நோய்களுக்கு வைத்தியம் உண்டு.

இளைஞர்கள் ஞாபகத்திறன் குறைவு ,கல்வியில் நாட்டம் குன்றிப் பயம், நடுக்கம், நரம்புத் தளர்ச்சி உண்டாகி ஆளுமை குறைந்து தாழ்வு மனப்பான்மை உண்டாகக் காரணமான இளமையில் ஏற்படும் தவிர்க்க முடியாத தவறுகளைத் திருத்தி வாழ்வில் வெற்றிபெற பிரபல மனோதத்துவ நிபுணர் Dr.P.ஆறுமுகம் அவர்களைச் சந்தியுங்கள்.

தாம்பத்திய பாதிப்புக்கள் (பிறவியில் ஆண்மையற்றவர்களைத் தவிர) எந்தவித மோசமான தாம்பத்திய கோளாறுகளையும் மனோ தத்துவரீதியில் திறமான மூலிகை மருந்துகளாலும் 45 நாட்களில் சுகமாக்கலாம். பலர் சுகமாகியுள்ளனர்.

கமால் ரூரிஸ் இன்(சிவதர்சன் எலெக்ரிக்கல்ஸ் அருகில்)
வெலிங்டன் சந்திக்கும் பெருமாள் கோவிலுக்குமிடையில்,
392, மணிக்கூட்டு கோபுர வீதி, யாழ்ப்பாணம்.
(C-2798)



ரன் வன் உங்கள் தங்க நகைகளை இலவசமாக மீட்பதற்கு இப்பொழுது பொன்னான வாய்ப்பு!
மாதாந்தம் ரூ.10,000 வரை வெல்லுங்கள்
3 மாதங்களுக்கு ஒரு தடவை ரூ.100,000 வரை வெல்லுங்கள்
உங்கள் தங்க நகைகளுக்கு ஆகக் கூடிய கடனும் ஆகக் குறைந்த வட்டியும்!
24 K ரூ.34,500/=
மாதாந்த வட்டி 1.16%
(011) 2374100
யூனியன் வங்கி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைக்கு அரையிறுதி உறுதியா?

# இங்கிலாந்துடன் இன்று மோதல்

உலகக்கிண்ண காலிறுதியில் இன்று இலங்கை-இங்கிலாந்து அணிகள் மோதுகின்றன. இதில் முரளிதரன், மென்டிஸ் உள்ளிட்ட இலங்கை சுழல் வீரர்களின் பிடியில் இருந்து இங்கிலாந்து தப்புவது மிகவும் கடினம்.

இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் மண்ணில் பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் நடக்கிறது. இன்று கொழும்பு பிரேமதாச மைதானத்தில் நடக்கும் கடைசி காலிறுதியில் (பகலிரவு) இலங்கை அணி, இங்கிலாந்தை எதிர்கொள்கிறது.

**முதல் வரிசை பலம்**

இலங்கை அணியின் ஆரம்ப வரிசை துடுப்பாட்டத்தில் பலமாக உள்ளது. டில்சான் (266 ஓட்டங்கள்), உப்புல் தரங்க (261 ஓட்டங்கள்) ஜோடி நல்ல போர்மில் இருப்பதால் சிறப்பான ஆரம்பம் அளிக்கலாம்.

ஆறு லீக் போட்டியில் ஒரு சதம், இரண்டு அரைசதம் உட்பட 363 ஓட்டங்களை எடுத்துள்ள சங்கக்கார தனது ஓட்டங்கள் குவிப்பதை தொடரலாம். இது வரை 200 ஓட்டங்கள் மட்டும் எடுத்துள்ள அனுபவ வீரர் மஹேல ஜெயவர்த்தனா எழுச்சி பெற வேண்டிய கட்டாயத்தில் உள்ளார்.

இலங்கை அணியின் நடுத்தர வரிசை பலவீனமாக உள்ளது. மத்யூஸ், சமரவீரா, சாமரசில்வா, பெரேரா உள்ளிட்டோர் பொறுப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தும் பட்சத்தில் வலுவான இலக்கை அடையலாம்.

**மலிங்க மிரட்டல்**

இலங்கை அணியின் வேகப் பந்து வீச்சு அசுர பலத்துடன் உள்ளது. உலகக்கிண்ண அரங்கில் இரண்டு முறை ஹட்ரிக்சாதனை படைத்த மலிங்க மீண்டும் சாதிக்கலாம். இவருக்கு குலசேகர, பெரேரா, மத்யூஸ் உள்ளிட்ட வேகங்கள் ஒத்துழைப்பு அளிக்கும் பட்சத்தில் இங்கிலாந்து துடுப்பாட்ட வீரர்களுக்கு சிக்கலாகிவிடும்.

சுழலில் அனுபவ முரளிதரன் இருப்பது கூடுதல் பலம். இதுவரை 11 விக்கெட்டுக்கள் வீழ்த்தியுள்ள இவர், இன்றும் தனது சுழல் வேட்டையை தொடரலாம். அஜந்த மென்டிஸ், ஹேரத், டில்சான் உள்ளிட்டோர் இங்கிலாந்து அணியின் ஓட்ட குவிப்பை தடுக்கலாம்.

**ஸ்ரொரஸ் நம்பிக்கை**

இங்கிலாந்து அணியில் காயம் காரணமாக கெவின் பீற்றர்சன் வெளியேறியது பின்னடைவான விடயம்.

இருப்பினும் அணித் தலைவர் ஸ்ரொரஸ் (329 ஓட்டங்கள்) ஆறுதல் அளிக்கிறார். இவருடன் மட்டும் பிறில் இணைந்து நல்ல ஆரம்பம் அளிக்க வேண்டும்.

திரோட் (336 ஓட்டங்கள்), இயன் பெல் (220 ஓட்டங்கள்) நல்ல போர்மில் இருப்பதால் ஓட்ட வேட்டை நடத்த வாய்ப்பு உள்ளது.

நடுத்தர வரிசையில் களமிறங்கும் மார்கன், போபரா, கோலிங்வூட் அதிரடியாக ஓட்டங்கள் குவிக்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளனர்.

**பலவீனமான பந்துவீச்சு**


இங்கிலாந்து அணியின் பந்து வீச்சு பலவீனமாக உள்ளது. ஆஷஸ் நாயகன் அன்டர்சன், ஓட்டங்களை மட்டும் வாரி வழங்குகிறார். இவர் விக்கெட் வீழ்த்துவதில் கவனம் செலுத்தினால் நல்லது. டிம் பிரேஸ்னன் (9 விக்கெட்), கிறிஸ் டிரம்லட், லூக் ரைட் உள்ளிட்டோர் வேகப் பந்துவீச்சில் வெளிப்படுத்தவேண்டும். இங்கிலாந்து அணியின் சுழற் பந்து வீச்சு எதிர்பார்த்த அளவு இல்லை.

இதுவரை 12 விக்கெட் வீழ்த்தியுள்ள சுவான் மீது அதிக எதிர்பார்ப்பு உள்ளது. இவருக்கு டிரட்வெல் ஒத்துழைப்பு அளிக்கும்பட்சத்தில், சுழலின் பலம் அதிகமாகும்.

**இங்கிலாந்து ஆதிக்கம்**

உலக அரங்கில், இலங்கை-இங்கிலாந்து அணிகள் எட்டுப் போட்டிகளில் மோதியுள்ளன. இதில் இங்கிலாந்து 6, இலங்கை 2 வெற்றி கண்டன.

சர்வதேச ஒருநாள் போட்டி அரங்கில், இங்கிலாந்து-இலங்கை அணிகள் 44 முறைமோதியுள்ளன. இதில் இங்கிலாந்து 23, இலங்கை 21 போட்டிகளில் வெற்றி கண்டன.



## ஆடுகளம் எமக்கு சாதகமாக அமையும்

கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டரங்கில் இன்று நடைபெறவுள்ள இங்கிலாந்துக்கு எதிரான போட்டியில் ஆடுகளம் எமக்கு சாதகமாக அமையும் என இலங்கை அணியின் தலைவர் குமார் சங்கக்கார தெரிவித்தார்.

கொழும்பு ஆர்.பிரேமதாச விளையாட்டு அரங்கில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே இலங்கை அணித் தலைவர் குமார் சங்கக்கார மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து கருத்துத் தெரிவித்த அவர், இன்று நடைபெறவுள்ள போட்டியில் எமது வீரர்கள் முழுத் திறமையுடன் விளையாட மிகுந்த எதிர்பார்ப்புடன் காத்திருக் கிறார்கள். மேலும் ஆடுகளம் எமக்கு சாதகமாக அமையும் என எதிர்பார்க்கிறோம்.

பலம் வாய்ந்த அணிகளில் ஒன்றாக இங்கிலாந்து விளங்குவதால் சவாலான போட்டியாக இது காணப்படும். எனவே இப் போட்டியில் முரளிதரனின் பங்களிப்பு மிகவும் முக்கியமானதாகும்.

இந் நிலையில் எமது மத்திய தர வரிசையில் துடுப்பாட்ட வீரர்கள் தன்னம்பிக்கையுடன் விளையாடிவருகிறார்கள். எனவே இப் போட்டியிலும் தமது திறமையை வெளிப்படுத்துவார்கள் என சங்கக்கார தெரிவித்தார்.

## இலங்கையுடன் விளையாடுவதால் பாரிய சவாலாக கருதுகிறோம்

இலங்கை அணியுடன் விளையாடுவதை பாரிய சவாலாகக் கருதுகிறோம் என இங்கிலாந்து அணியின் தலைவர் அன்ரு ஸ்ரொரஸ் தெரிவித்தார்.

கொழும்பு ஆர்.பிரேமதாச மைதானத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஸ்ரொரஸ் மேற்கண்டவாறு தெரிவித்தார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர்,

இலங்கை அணியுடன் விளையாடுவதை உண்மையில் பாரிய சவாலாகக் கருதுகிறோம்.

இந்தப் போட்டி இலங்கையில் நடைபெறுவதால் எமது அணியினர் அர்ப்பணிப்புடன் விளையாடுவதற்கு ஏற்ற மன நிலையில் இருக்கிறார்கள்.

துடுப்பாட்டத்திலும் பந்துவீச்சிலும் ஆரம்ப நிலைகளை சரியாகப் பயன்படுத்திக் கொள்வதால் போட்டியை எமது வசப்படுத்தலாம் என நினைக்கிறேன் என்றார் ஸ்ரொரஸ்

**கடந்து வந்த பாதை**

**இலங்கை**

லீக்சுற்று

- 210 ஓட்டங்கள் வித்தியாசத்தில் கனடாவுடன் வெற்றி
- பாகிஸ்தானிடம் 11 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வி
- கென்யாவை 9 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது
- அவுஸ்திரேலியாவுக்கு எதிரான போட்டி கைவிடப்பட்டது
- 139 ஓட்டங்கள் வித்தியாசத்தில் சிம்பாவேயை வீழ்த்தியது
- 112 ஓட்டங்கள் வித்தியாசத்தில் நியூசிலாந்தை தோற்கடித்தது

**இங்கிலாந்து**

லீக்சுற்று

- நெதர்லாந்தை 6 விக்கெட் வித்தியாசத்தில் வீழ்த்தியது
- இந்தியாவுக்கு எதிராக சமனிலை செய்தது
- அயர்லாந்திடம் 3 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி
- தென்னாபிரிக்காவை 6 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வீழ்த்தியது.
- பங்களாதேஷ் அணியிடம் 2 விக்கெட் வித்தியாசத்தில் தோல்வி
- மேற்கிந்தியத்தீவுகளுடன் 18 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றி

கிரிக்கெட் ரசிகர்களுக்கு ஓர் நற்செய்தி!
MCS இன் ஒரு மில்லியன் ரூபா பரிசை வெற்றிகொள்ள உங்களுக்கு அரிய சந்தர்ப்பம்
தினமும் 5 பேருக்கு
50ஆயிரம் ரூபா வீதம் 100 பேருக்கு
ஒரு மில்லியன் வெற்றிகொள்ளும் வாய்ப்பு
வலம்புரியில் கேட்கப்படும்
உலகக்கிண்ண கேள்விகளுக்கு
சரியான பதிலை அனுப்பி உங்கள் உயர்கல்வி வாய்ப்பை பெற்றுக்கொள்ளுங்கள்
கூப்பனை வெல்பவர் அல்லது அவரால் வழங்கப்படும் ஒருவர் பின்வரும் கற்கை நெறிகளுக்கு இப் பரிசுக் கூப்பனை பயன்படுத்த முடியும்
1. கொழும்பு பல்கலைக்கழக தகவல் தொழில்நுட்ப பட்டக் கற்கை நெறி
2. சீமா (லண்டன்) CIMA_UK
3. மைக்கிரோசொப்ற் நிறுவன கணினிப் பொறியியலாளர் கற்கை நெறி
4. அடோப் நிறுவனத்தின் மல்ரிமீடியா கற்கை நெறி

இறுதிச் சுற்றுக்கு தெரிவாகும் அணிகள்
1. ..............................
2. ..............................
பெயர்: ..............................
முகவரி: ..............................
..............................
தொ.பே: ..............................
தே.அ.அ.இல: ..............................
சரியான விடையை எழுதி கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர் ஒருவருக்கு ஒலிம்பியா ஸ்போட்ஸ் வழங்கும் பெறுமதியான பரிசு காத்திருக்கிறது.
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.
ஒலிம்பியா ஸ்போட்ஸ் இல06,ஜும்மா பள்ளிவாசல் லேன் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். தொ.பே: 222 3490

இன்றைய கேள்வி ?
இந்திய அணி உலகக்கிண்ணத்தை கைப்பற்றியபோது அவ் அணியின் தலைவர் யார்?
..............................
சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 30.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு M.C.S வழங்கும் பரிசுக் கூப்பன்.
பெயர்:- ..............................
முகவரி:- ..............................
..............................
தொ.பே:- ..............................
தே.அ.அ.இல:- ..............................
அனுப்ப வேண்டிய முகவரி
'உலகக் கிண்ணம்' வலம்புரி இல.3,2 -ம் ஒழுங்கை, பிறவுண்வீதி, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ்.மாநகரசபையின் மாதாந்த பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் இவ்வாண்டுக்கான 3ஆவது மாதாந்தப் பொதுக்கூட்டம் எதிர்வரும் 31ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணிக்கு முதல்வரின் அலுவலக மாநாட்டு மண்டபத்தில் மாநகர முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாநகரசபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்து கொள்ளுமாறு யாழ்.மாநகரசபைச் செயலாளர் ரு.சத்தியானந்தன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3)

## பொதுக்கூட்டமும் நிர்வாகசபைத் தெரிவும்

வரணி கரம்பன் வீரகத்தி விநாயகர் ஆலய புதிய நிர்வாக சபைத் தெரிவும் விசேட பொதுக்கூட்டமும் எதிர்வரும் 30ஆம் திகதி புதன்கிழமை மாலை 3 மணிக்கு யாப்பின் பிரகாரம் ஆலய மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி கூட்டத்தில் முக்கியமான பல விடயங்கள் கலந்துரையாடப்பட வேண்டியிருப்பதாலும் புதிய நிர்வாக சபையினைத் தெரிவு செய்ய வேண்டியிருப்பதாலும் பொதுச்சபை உறுப்பினர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு செயலாளர் கலாநிதி சி.ஜெயசங்கர் தெரிவித்துள்ளார். (ஶ்ரீ-3)

## அகராதி வழங்கும் நிகழ்வு

யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளுக்கு அகராதி வழங்கும் நிகழ்வு நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு யா/வேம்படி மகளிர் உயர்தர பெண்கள் பாடசாலையில் வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவன் தலைமையில் நடைபெறவுள்ளது.

மேற்படி அகராதியை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி வழங்கவுள்ளார்.

இந்நிகழ்விற்கு அனைத்து பாடசாலை அதிபர்களையும் தவறாது கலந்து கொள்மாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3-19)

## டெங்கு விழிப்புணர்வு செயற்றிட்டம்

(கொழும்புத்துறை)

யாழ்.மாநகரசபை சுகாதார வைத்தியப் பிரிவினரால் டெங்கு ஒழிப்புத் தொடர்பாக ஒலிபெருக்கி மூலம் அறிவூட்டும் நிகழ்வுகள் நடைபெற்று வருகின்றன.

குறிப்பாக வீதியோரங்களில் குப்பைகள், பிளாஸ்ரிக் பொருட்களைக் கொட்டுவதால் நகரின் சுத்தம் பாதிக்கப்படுவதாகவும் குப்பைகள் மற்றும் கழிவுப் பொருட்களை எரிப்போம், புதைப்போம், பசளையாக்குவோம் என்று யாழ்.மாநகரசபை எல்லைக்குள் ஒலிபெருக்கி மூலம் அறிவுறுத்தப்பட்டு வருகின்றது. (ஶ்ரீ-3-51)

## ஆவணங்களின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவருக்கு ரூ. 4 ஆயிரம் அபராதம்

ஆவணங்கள் எதுவுமின்றி மோட்டார் சைக்கிள் செலுத்தியவரை சாவகச்சேரி பொலிஸார் நேற்றைய தினம் கைதுசெய்து சாவகச்சேரி நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த சாவகச்சேரி நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் செல்லையா கணபதிப்பிள்ளை, சந்தேக நபர் குற்றத்தை ஒப்புக் கொண்டமையால் குற்றவாளியாகக் கண்டு 4 ஆயிரம் ரூபாய் அபராதம் விதித்ததுடன் செலுத்தத் தவறின் ஒரு மாதகால சாதாரண சிறைத்தண்டனையும் வழங்கித் தீர்ப்பளித்தார். (ஶ்ரீ-3-29-24)

## நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா

நல்லூர் பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட கழகங்களுக்கிடையிலான விளையாட்டு விழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 1.30 மணிக்கு யாழ்.இந்துக் கல்லூரி மைதானத்தில் நல்லூர் பிரதேச செயலரும் விளையாட்டு அவைத் தலைவருமான பா.செந்தில்நந்தனன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருநெல்வேலி மக்கள் வங்கி முகாமையாளர் ஆ.சத்தியமூர்த்தி, சிறப்பு விருந்தினர்களாக வடக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களப் பணிப்பாளர் சி.அண்ணாத்துரை, யாழ்.மாவட்ட செயலக விளையாட்டு அதிகாரி திருமதி ஏ.எப்.ஜே.ரூபசிங்கம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

கௌரவ விருந்தினர்களாக யாழ்.இந்துக் கல்லூரி அதிபர் வீ.கணேசராஜா, யாழ்.மாவட்ட துடுப்பாட்ட பயிற்றுநர் கா.சுதாகரன் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (ஶ்ரீ-3)

## யாழ்.மறை மாவட்ட ரீதியாக பாடலாக்கப் போட்டி

(கொழும்புத்துறை)

றொசாறியன் கலையகத்தின் ஏற்பாட்டில் உயிர்ப்பு ஞாயிறை முன்னிட்டு யாழ்.மறை மாவட்ட ரீதியில் பாடலாக்கப் போட்டி நடைபெறவுள்ளது.

மேற்படி போட்டியில் பங்குபற்ற விரும்புவோர் மனித வாழ்விற்கு உயிர்ப்பூட்டும் கருத்துக்களை உள்ளடக்கியதாகப் பாடல்களை எழுதி இசையமைத்து அனுப்புதல் வேண்டும்.

தெரிவுசெய்யப்படும் சிறந்த பாடலாசிரிருக்கும் பாடக, பாடகியர்களுக்கும் இசையமைப்பாளர்களுக்கும் தனித்தனியே பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஏப்ரல் மாதம் 18ஆம் திகதிக்கு முன்னர் ஒரு பாடலையோ ஒன்றுக்கு மேற்பட்ட பாடல்களையோ இல.28, ஏவி வீதி, கொழும்புத்துறை என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது தபாலிலோ அனுப்பிவைக்குமாறு றொசாறியன் கலையக இணைப்பாளர் திருமதி ஜி.பேனடேட் தெரிவித்தார். (ஶ்ரீ-3-51)

## தேசிய நாடக விழாவுக்கான படைப்பாக்கங்கள் கோரல்

கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் தேசிய நாடக விழாவுக்காக சிறுவர் நாடகம், தேசிய நாடகம், குறுநாடகம் ஆகியவற்றுக்கான படைப்பாக்கங்கள் கோரப்பட்டுள்ளன.

மேற்படி போட்டிக்கான விண்ணப்பப் படிவத்தினை பூரணப்படுத்தி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 7ஆம் திகதிக்கு முன்னர் சண்டிலிப்பாய் பிரதேச செயலக கலாசாரப் பிரிவில் ஒப்படைக்குமாறு சண்டிலிப்பாய் பிரதேச செயலர் இ.அன்ரன் யோகநாயகம் அறிவித்துள்ளார்.

விண்ணப்பப் படிவம் மற்றும் விபரங்கள் அடங்கிய சட்டக்கோவையினை பிரதேச செயலக கலாசார பிரிவில் பார்வையிட முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3)

## நல்லை ஆதீனத்தில் நாளை இலக்கிய நிகழ்வுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இலக்கிய வட்டத்தினால் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு நல்லூர் திருஞானசம்பந்தர் ஆதீனத்தில் இரு இலக்கிய நிகழ்வுகள் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதில் சம்பந்தர் விருது-2009 பேராசிரியர் கிருஷ்ணபிள்ளை விசாகரூபன் எழுதிய "ஈழத்தின் தமிழ் நாவல்கள் நாட்டார் பண்பாட்டுக் கூறுகள் பயில்நிலையும் பண்பாடும்" எனும் நூலிற்கு வழங்கப்படவுள்ளது.

இந்நிகழ்வில் வரவேற்புரையை செங்கை ஆழியான் நிகழ்த்தவுள்ளார்.

அத்தோடு இரண்டாவது நிகழ்ச்சியாக நினைவுச் சிறுகதைகள் வெளியீடு இடம்பெறவுள்ளது. திருமதி அமரர் பூரணபாக்கியம் சங்கரின் முதலாம் ஆண்டு நினைவாக சுதந்திரனில் பிரசுரமான பத்துச் சிறுகதைகளின் தொகுப்பு வெளியிடப்படவுள்ளது.

இந்நிகழ்வில் அறிமுகவுரையை கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் வழங்கவுள்ளார். (ஶ்ரீ-3)

## விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் - சைக்கிள் விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவம் நேற்றிரவு முல்லைத்தீவு மாம்புல என்னும் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இதில் முல்லைத்தீவு முறிபேடியைச் சேர்ந்த கே.அமரராஜா (வயது 45) என்பவரே படுகாயமடைந்தவராவார். (ஶ்ரீ-6)

## பெருவிளையாட்டு விழா

(கரவெட்டி)

வடமராட்சி கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான பெருவிளையாட்டு விழாவின் தடகளப் போட்டிகள் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 9, 10, 11ஆம் திகதிகளில் பருத்தித்துறை ஹாட்லி கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதென வடமராட்சி கல்வி வலய உடற்கல்விப் பணிப்பாளர் எஸ்.செல்வக்குமரன் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-3-24)

## பொதுக்கூட்டம்

(பொலிகண்டி)

பொலிகண்டி கமக்கார அமைப்பின் வருடாந்த பொதுக்கூட்டம் எதிர்வரும் 29ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு பொலிகண்டி பொதுநோக்கு மண்டபத்தில் தலைவர் வீ.சிவஞானசேகரம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் கடந்த ஆண்டறிக்கை சமர்ப்பித்தலும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் இடம்பெறவுள்ளது.

கமநல சேவை நிலைய பெரும்போக உத்தியோகத்தர், பொலிகண்டி கிழக்கு கிராம அலுவலர் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

அனைத்து விவசாயிகளையும் தவறாது சமுகமளிக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3-48)

## கலந்துரையாடலும் ஒன்றுகூடலும்

(யாழ்ப்பாணம்)

கலைஞர்கள், கலை ஆர்வலர்கள், ஆதரவாளர்கள் ஒன்று கூடலும் கலந்துரையாடலும் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு கோண்டாவில் வேத பாராயண கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் ஆர்வலர்களை தவறாது கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஶ்ரீ-3)

யாழ்.செய்திகள்



நோர்வே அனுசரணையுடனும் சேவாலங்கா நிறுவனத்தின் ஒத்துழைப்புடனும் நேற்று யாழ்ப்பாணம் இசைவிழா வெகுவிமர்சையாக ஆரம்பமானது. இந் நிகழ்வில் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் இலங்கைக்கான நோர்வே தூதுவர் திருமதி எம்.ஹைடன் உரையாற்றுவதனையும் நாட்டுப்புற இசைநிகழ்வுகள் இடம்பெறுவதையும் படங்களில் காணலாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகம்

## ஜூன் மாதம் முதல் ஆரம்பம்

அம்பாந்தோட்டை மாகம்புர துறைமுகத்திலிருந்து சர்வதேச வர்த்தக கப்பல்களுக்கு எரிபொருள் விநியோகம் செய்யும் நடவடிக்கைகள் எதிர்வரும் ஜூன் மாதம் முதல் ஆரம்பமாகும் என துறைமுக நெடுஞ்சாலைகள் பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நேற்று முன்தினம் நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இவ்வருட இறுதியில் கொழும்பு துறைமுகத்துக்கு ஈடாக சர்வதேச கப்பற் போக்குவரத்துடன் இணைந்து வர்த்தக நடவடிக்கைகளும் அம்பாந்தோட்டை துறைமுகத்திலிருந்து ஆரம்பிக்கப்படும்.

அம்பாந்தோட்டை மாகம்புர மகிந்த ராஜ பக்ஷ துறைமுகத்துக்கு கப்பல்கள் வரு வதில்லை என்று கூறுவார்கள். அங்கு மணல் மட்டும்தான் அகழப்படுகிறது. துறைமுகத் தினுள் கப்பல்கள் வரமுடியாமல் பாரிய கற்கள் இருப்பதாக கூறினார்கள். அம்பாந் தோட்டை துறைமுகத்தினுள் உலகத்தினுள் உள்ள பாரிய வர்த்தக கப்பல்களும் வரக் கூடிய வகையில் ஆழப்படுத்தப்பட்டுள்ளன. பாறைகற்கள் அங்கு இல்லை என பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன நாடாளுமன்றத்தில் தெரிவித்தார்.

இத் துறைமுகத்தின் நிர்மாண பணிகளுக்கு 360 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகியுள்ளது. இதேவேளை இத்துறைமுகத்தில் தொழிற்சாலை அமைக்க வென 975 மில்லியன் டொலர்கள் 27 முதலீட்டார்களால் முதலீடு செய்யப்பட்டுள்ளது என தெரிவிக்கப்படுகின்றது.

இதன்பின் இத்தொழிற்சாலைகளின் வர்த்தக நடவடிக்கைகள் ஆரம்பமாகும் போது இத்துறைமுகத்தினூடாகவே ஏற்றுமதி இறக்குமதிகளும் நடைபெறும் என பிரதி அமைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-2)

## விலங்கு விசர்நோய் தடுப்பூசி ஏற்றல்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் மாநகர சபை எல்லைக்குட்பட்ட குருநகர் பொதுச்சுகாதாரப் பரிசோதகர் பிரிவுக்குட்பட்ட வளர்ப்பு நாய்களுக்கு விலங்கு விசர்நாய் தடுப்பூசி ஏற்றப்படவுள்ளது.

இதற்கமைய நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி தொடக்கம் மதியம் 12.30 மணிவரை புதுமை மாதா கோயில் கிழக்கு வீதிச் சந்தியில் வைத்து வழங்கப்படவுள்ளது.

எனவே, இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி தமது வளர்ப்பு நாய்களுக்கு மேற்படி ஊசியினை ஏற்றிக்கொள்ளுமாறு யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி ம.மரியதாசன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# எமது சமூகத்தை மேம்படுத்துவதில் கலைகள் முக்கிய பங்காற்றுகின்றன

## யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

கலைகள் ஊடாக சமூகத்தை மேம்படுத்த முடியும் என யாழ். பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என். சண்முகலிங்கன் தெரிவித்துள்ளார்.

நோர்வே அனுசரணையுடன் சேவாலங்கா நிறுவனத்தினால் ஒழுங்கு செய்யப்பட்ட யாழ்ப்பாணம் இசைவிழா நேற்று இடம்பெற்றது. இதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவிக்கையில்,

யாழ்ப்பாண இசைவிழா மூலம் பாரம்பரியம்மிக்க கலை கலாசார நிகழ்வுகளை கண்டுகளிக்க கூடிய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

தலைமுறை தலைமுறையாக பேணப்பட்டு வந்த இந்த கலை மரபுகளை ஒரே இடத்தில் காணக்கூடியதாகவுள்ளது.

தென்னிலங்கையிலிருந்தும் ஏனைய நாடுகளிலிருந்தும் வருகை தந்த கலைஞர்களின் இசை நிகழ்வுகள் இங்கு இடம்பெறுவதையிட்டு மனமகிழ்ச்சியடைகின்றேன்.

சமூகத்தின் பண்பாட்டினை அந்தப் பிரதேச கலைகள் வெளிப்படுத்தக் கூடியதாக இருப்பதோடு அவற்றின் மூலம் சமூகத்தையும் மேம்படுத்த முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# விசேட நிகழ்வுகளுக்காக பாடசாலை மாணவர்களிடம் நிதி சேகரிக்க முடியும்

## பிரதிக் கல்வி அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

சில காரணங்களைக் காட்டி பாடசாலை மாணவர்களிடமும் பெற்றோரிடமும் நிதி வசூலிப்பது தடை செய்யப்பட்டிருந்தாலும் சில விசேட நிகழ்வுக்காக நிதி சேகரிக்க முடியும் என பிரதிக் கல்வியமைச்சர் விஜித்த முனி சொய்சா தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற வாய்மூல விடைக்கான நேரத்தின் போது சுனில் கந்துன் நெத்தி எம்.பி. கேட்டிருந்த கேள்விகளுக்கு பதிலளிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பாடசாலை பழைய மாணவர் சங்கம் மற்றும் பல்வேறு சங்கங்களினால் மாண வர்களிடமும் பெற்றோரிடமும் பல்வேறு காரணங்களைக் காண்பித்து நிதி வசூலிப்பது கல்வியமைச்சினால் தடை செய்யப்பட்டிருந்த போதிலும் 2010 ரோயல் பரேட் என்னும் பெயரில் கொழும்பு றோயல் கல்லூரி பழைய மாணவர் சங்கத்தினால் 600 ரூபா பெறுமதியான கட்டமிடப்பட்ட அட்டைகள் மாணவர்களுக்கு கொடுக்கப்பட்டு நிதி வசூலிக்கப்பட்டுள்ளதே என சுனில் கந்துன் நெத்தி எம்.பி. சுட்டிக்காட்டினார்.

இதுகுறித்து பிரதிக் கல்வி அமைச்சர் கூறுகையில்,

பாடசாலைகளில் கட்டாய நிதி வசூலிப்பதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. அது உண்மைதான். ஆனால், பாடசாலைகளில் சகல விடயங்களுக்கும் கல்வியமைச்சினால் நிதி வழங்க முடியாது. அதனால் சில விசேட நிகழ்வுகளுக்கு நிதி வசூலிக்க முடியும். ஆனால், கட்டாயமாக வசூலிக்க முடியாது. பெற்றோர்கள், மாணவர்கள் மனமுவந்து கொடுக்கும் நிதியை தமது சந்தோசத்திற்காக நிதியைப் பெற்றுக் கொள்ள முடியும். அப்படித்தான் மேற்படி நிகழ்வுக்கும் நிதி சேகரிக்கப்பட்டது.

நிதி வசூலிக்க தடைவிதிக்கப்பட்டிருக்கும் நிலையில் அதனையும் மீறி வசூலிப்பது சட்டத்தை மீறிய செயல் என நீங்கள் கேட்கலாம். அனைத்துக்கும் சட்டத்தைப் பின்பற்றினால் நாம் வீதியில் வாகனத்தைக் கூட செலுத்த முடியாது.

மக்கள் விடுதலை முன்னணியினர் வீதிகளில் உண்டியல்களைக் குலுக்கி, வீடுகளின் கதவுகளைத் தட்டித் தட்டி நிதி வசூலிக்கின்றனர். அட்டையில் இருக்கும் கட்டங்களை நிரப்புவதில் என்ன பிரச்சினை இருக்கின்றது. பிள்ளைகளை பாடசாலைக்கு அனுப்பினால் மட்டும் போதாது. செயற்பாடுகளிலும் அக்கறை காட்ட வேண்டும் என்றார். (ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யா/வடமராட்சி இந்துக் கல்லூரியின் வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை காலை 9 மணிக்கு பாடசாலை பிரதான மண்டபத்தில் நடை பெறும்.

எனவே, பெற்றோர்கள், ஆசிரியர்கள் அனைவரையும் தவறாது கலந்துகொள்ளுமாறு கேட்கப்படுகிறார்கள். (ஸ்ரீ-2)


# UNIVERSITY OF JAFFNA, SRILANKA

## MEDIA RESOURCE AND TRAINING CENTRE

(Joint venture of the University of Jaffna and the institute of Further Education (FOJO),Sweden)

### Post of Director(On contract)

Applications are invited from suitable condidates for the post of Director (Full-Time)on contact basis in the Media Resource and Training Centre, University of Jaffna upto **30th April 2011.**

**Qualifications:**

i. A Degree of a recognized University and a postgraduate degree with publications of high quality. priority will be given to applicants with publications related to **Media Studies.**

ii. Minimum of **15 Years experience in academic administration** and/ or in an **Executive position** in a government Department,State corporation, Higher Educational Institution/Institute or in a recognized N.G.O.

- Preference will be given to those who have experience in leadership from both media and academic world and have vital and upto date knowledge with in Media Literacy and engagement with media and civil Society.
- Senior Academics of Universities who are willing to undertake this position during their sabbatical leave could also apply.

**Applications are expected from suitable condidates below 55 Years.**

**Salary:** Salary is negotiable and shall be determined based on the qualifications and experience of the selected candidate.

- The Candidates are required to submit **a statement of vision for the development of the MRTC**

Selection by interview

**General Conditions:**

This is a Full-time assignment, initially for a period of **one year** from the date of commencement of the assignment and renewable if the services rendered and work performances during the tenure of assignment are satisfactory.

The appointee will become a contributor to the Employees Provident Fund (EPF). Media Resources and Training Centre will contribute the EPF and the Employees Trust Fund (ETF).

Application Forms and other details may be obtained from the office of the **Senior Assistant Registrar/Academic Establishments,** University of Jaffna,Sri Lanka. either in person or by post, on a payment of **Rs.100/-** Per Application form. Those who wish to obtain application forms by post are requested to send a Money Order/postal Order drawn in favour of the Bursar,University of Jaffna together with a self-addressed stamped envelope 23x10 c.m. in size.

Applications for the above posts shall be sent to the **Senior Assistant Registrar/ Academic Establishments, University of Jaffna.**

Applicants from the University System/ government Departments/ Corporations and Statutory Board Should channel their applications through the Head of the respective institutions. Incomplete, illegible applications received after the closing date will be rejected without intimation.

Registrar
2011.03.25

*(C-2799)*


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்று ஒரு தகவல்

# பதவி மோகம்

பதவிக்காக சண்டை பிடிக்கும் பழக்கம் மனிதர்களிடம் மட்டுமல்ல; மிருகங்களிடமும் உண்டு. இதை ஏதோ விளையாட்டுக்காக சொல்லவில்லை. உளவியல் அறிஞர்கள், உயிரியில் அறிஞர்களெல்லாம் ஆராய்ச்சி செய்து பார்த்து விட்டு சொன்ன உண்மை.

1938 இல் கார்பென்ரால் என்ற உயிரியல் நிபுணர் இந்தியாவிலிருந்து நிறைய குரங்குகளை பிடித்து கப்பலில் ஏற்றி 'சாண்டியாகோ'' என்ற தீவில் கொண்டு போய் விட்டார். அதன்பின் என்ன ஆயிற்று தெரியுமா?

உடனே அவையெல்லாம் மரங்களில் ஏறி சண்டை போட ஆரம்பித்தன.

கடைசியில் ஒரு ஆண்குரங்கு மற்ற குரங்குகளையெல்லாம் ஜெயித்துவிட்டு தலைமைப் பதவியை ஏற்றுக் கொண்டதாம்.

அதன் பின் மற்ற குரங்கெல்லாம் அதற்கு கீழ் இருந்ததாம். பெண் குரங்குகளெல்லாம் குட்டிகளை கவனிக்க ஆரம்பித்ததாம். அதன்பின்தான் கூட்டத்தில் ஒழுங்கு நிலைமை வந்ததாம். வயதான குரங்கு, வலுவில்லாத குரங்குகளுக்கெல்லாம் மற்றக் குரங்குகள் உதவி செய்ய ஆரம்பித்ததாம். மாட்டு மந்தையில் கூட இப்படியான சம்பவங்கள் நிகழ்வதுண்டு. திடீரென்று இரண்டு மாடுகள் ஒன்றையொன்று முட்டிக்கொள்ளும். மாடுமேய்ப்பவர்கள் அதைக் கண்டுகொள்ளமாட்டார்கள். அப்படியே விட்டு விடுவார்கள்.

ஒரு மாடு மற்றதை முட்டித்தள்ளி அந்தக்கூட்டத்துக்கு தான் தான் தலைவன் என்பதை நிலைநாட்டிய பின் மந்தையில் அமைதி வந்துவிடும். அதன்பின் அவை தன்பாட்டுக்கு மேய்ந்து கொண்டிருக்கும்.

ஜான் பால் ஸ்காட் என்ற ஒரு உளவியல் பேராசிரியர் இருந்தார். அவர் சுண்டெலிகள் சண்டையிடும் பொழுது வலி ஒரு முக்கிய அம்சமென்று கண்டுபிடித்தார்.

ஒரு ஆண் சுண்டெலியின் வாலை இலேசாக கிள்ளினாராம். அது உடனே சீறிக்கொண்டு அடுத்ததாக இருந்த சுண்டெலியை கடிக்க ஆரம்பித்ததாம்.

பல வன விலங்குகள் அவற்றின் மனதில் ஒரு ஆதிக்க எல்லையை நிர்ணயம் செய்து கொள்கிறதாம்.

அந்த எல்லைக்குள் யாராவது அத்துமீறி வந்துவிட்டால் இரண்டில் ஒன்று முடிவு செய்யும். அதாவது நின்று சண்டைபோடுவதா? அல்லது ஓடிப்போய்விடுவதா இப்படி தீர்மானம் பண்ணவேண்டிய கட்டாயம் அதற்கு ஏற்படுகிறது.

ஒரு காட்டுப்பூனையை ஒரு சின்ன கூண்டுக்குள் அடைத்தார்கள். அதை வேடிக்கை பார்ப்பதற்காக கூண்டை நெருங்கும். எல்லோருமே அதன் ஆதிக்க எல்லைக்குள் அத்துமீறி வந்துவிட்டதாக நினைத்துவிடுகிறது. சண்டையிடவும் முடியாமல் ஓடிப்போகவும் முடியாமல் தவித்த அந்த காட்டுப் பூனைக்கு சிறிது நாட்களில் பைத்தியமே பிடித்துவிட்டதாம்.

மிருகக்காட்சி சாலையில் கூண்டுக்குள் அமைக்கும் போது இதை கவனித்துதான் கட்டுவார்கள்.

பிராணிகளுக்கு கோபம் வந்தால் என்ன செய்யும் தெரியுமா? பறவைகளெல்லாம் பாட்டுப் பாட ஆரம்பித்து விடும். தவளையெல்லாம் அத்துமீறி வந்துவிட்ட தவளையின் முதுகில் எம்பி எம்பி குதித்து அழுத்தும்.

ஆட்டுக் கிடா தலையை தாழ்த்தி ஆட்டும்.

உங்கள்வீட்டு நாய் சாதுவா இருக்கலாம். உங்கள் மீது விழுந்து விளையாடலாம். ஆனால் அதற்குத் தெரியாமல் பின்பக்கமாக போய் அதன் தோளில் திடீரென்று கையை வையுங்கள்.

வள்ளென்று திரும்பி விழுந்து கடித்துவிடும்.

அதன் பரம்பரைக்குணம் அப்படி. பின்பக்கமக சத்தம் போடாமல் வருவது– முதுகில் கையைவைப்பது தன்னுடைய தலையைவிட உயரமான தலை–இதுவெல்லாம் எதிரிகளின் பண்பென்று அதன் உள்ளுணர்விலேயே பதிந்திருக்கிறது.

ஒரு மிருகத்துக்குகோபம் வந்து விட்டால் என்ன ஆகிறது தெரியுமா?

அதன் தசைக்குள் இரத்தம் அதிகமாகிறது. இதயம் படபடக் கிறது. அட்ரினலின் பாய்கிறது உடனே எதிர்த்து தீவிரமாக சண்டை போடுவது. இல்லையென்றால் தலை தெறிக்க ஓடிப் போவது என்று முடிவு செய்கிறது.

இவையிரண்டில் ஒன்று நடந்த பின்தான் அது சாந்தமாகிறது. அப்படி இரண்டிலும் ஒன்று நடக்கவில்லையானால் அதற்கு மனக்கோளாறு வந்துவிடும். மனிதனுக்கும் அப்படித்தான்...

உணர்ச்சிகளை அடக்கினால் இரத்தஅழுத்தம், வயிற்றுப்புண் ஆஸ்துமா எல்லாம் வந்து விடுகிறது.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# விண்ணப்பம் கோரல்கள்

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் உள்ள அலுவலர்களை வகுப்பு I இற்கு தரமுயர்த்துவதற்கான பரீட்சை எதிர்வரும் யூலைமாதம் நடாத்தப் படவுள்ளதாக பரீட்சை ஆணையாளர் நாயகம் அறிவித்துள்ளார்.

மேற்படி பரீட்சை கொழும்பு, கண்டி, காலி, மாத்தறை, யாழ்ப்பாணம், மன்னார், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்பு, குருநாகல், அநுராதபுரம், பதுளை, இரத்தினபுரி மற்றும் கிளிநொச்சி ஆகிய இடங்களில் நடாத்தப்படவுள்ளது.

இப்பரீட்சைக்கு தோற்று பவர்களின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் இறுதித் திகதியில் அரசமுகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு II இல் பத்து வருட முனைப்பான சேவைக் காலத்தையும் அத்திகதியிலிருந்து ஐந்து வருட திருப்திகரமான சேவைக் காலத்தையும் பூர்த்தி செய்துள்ள அலுவலர் ஒருவராகவும் அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு IIஇல் உள்ள அலுவலர்களுக்காக நடாத்தப்படு கின்ற வினைத்திறன்காண் தடைப் பரீட்சையில் சித்தி பெற்றவராகவும் இருத்தல் வேண்டும்.

விண்ணப்பப் படிவங்களைத் தயாரித்து தமது திணைக்களத் தலைவர் ஊடாக எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்கக் கூடி யவாறு பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளி நாட்டு பரீட்சைக் கிளை, இலங்கை பரீட்சைதிணைக் களம், பெலவத்தை பத்தரமுல் லை எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பவேண்டும்.

★★★★★

அரச முகாமை உதவியாளர் சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந்த அலுவலர்களை வகுப்பு II இற்கு தரமுயர்த்தும் தகவுத்திறன் பரீட்சை மும்மொழிகளிலும் பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் எதிர்வரும் யூலை மாதம் நடத்தப்பட வுள்ளது.

சேவையில் வகுப்பு III ஐச் சேர்ந் தவர்களும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் நியமனங்களில் உறுதிப்படுத்தப் பட்டுள்ளவர்களும் 4 வருட முனைப்பான அத்துடன் திருப் திகரமான சேவையைப் பூர்த்தி செய்தவர்களுமான அலுவலர்கள் இப்பரீட்சைக்குத் தோற்றலாம்.

விண்ணப்பதாரிகள் விண்ணப்பப்படிவங்களை பரீட்சை ஆணையாளர் நாயகம், ஒழுங்கமைப்பு மற்றும் வெளி நாட்டு பரீட்சைக்கிளை, இலங்கைபரீட்சைதிணைக்களம், பெலவத்தை, பத்தரமுல்ல என்னும் முகவரிக்கு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 25 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பப்பட வேண்டும்.

★★★★★

தேசிய கல்வி நிறுவனத்தினுடாக பிராந்திய நிலையங்களில் வார இறுதி நாட்களில் நடாத்தப்படும் ஆசிரியர் கல்வி பாடநெறிக்கு தகைமைகளைக் கொண்ட ஆசிரியர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

விண்ணப்பப் படிவங்கள் வர்த்தமானி அறிவித்தலுக்கிணங்க தயாரிக்கப்படல் வேண்டும். ஆசிரியர் கல்வி பாட நெறியைத் தொடரும் மொழி மூலத்திலேயே விண்ணப்பத்தைச் சமர்ப்பிக்க வேண்டும்.

விண்ண ப்பப்படிவங்களை பணிப்பாளர், ஆசிரிய கல்வி நிறுவகம், கல்வியமைச்சு, இசுறுபாய, பத்தரமுல்ல எனும் முகவரிக்கு பதிவுத்தபாலில் ஏப்ரல் மாதம் 8 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பான மேலதிக விபரங் களை நேற்றையதினம் வெளியான வர்த்தமானியிலோ அல்லது வலம்புரிக் காரியாலயத்திற்கு நேரில் வந்தோ பார்வையிடலாம்.

(ஸ்ரீ-4)

## குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | யாழ்ப்பாணம் | சாவகச்சேரி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 50 | 60 | 70 | 70 |
| உருளைக்கிழங்கு | 65 | 70 | 80 | 60 |
| பச்சைமிளகாய் | 90 | 100 | 100 | 100 |
| தக்காளி | 70 | 100 | 100 | 50 |
| மரவள்ளிக்கிழங்கு | 60 | 50 | 60 | 60 |
| கோவா | 50 | 50 | 90 | 80 |
| கரட் | 150 | 200 | 180 | 200 |
| பூசணி | 50 | 60 | 70 | 60 |
| புடோல் | 50 | 80 | 100 | 50 |
| வாழைக்காய் | 50 | 60 | 70 | 40 |
| சின்ன வெங்காயம் | 100 | 100 | 80 | 90 |
| பெரிய வெங்காயம் | 70 | 70 | 70 | 70 |
| பாகற்காய் | 70 | 100 | 100 | 120 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 100 | 60 |
| கருணைக் கிழங்கு | - | 80 | 100 | - |
| பயற்றங்காய் | 70 | 120 | 140 | 130 |
| லீக்ஸ் | 120 | 140 | 140 | 120 |
| பீற்றூட் | 50 | 50 | 90 | 50 |
| கறிமிளகாய் | 150 | 150 | 180 | 170 |
| முருங்கைக்காய் | 400 | 600 | 500 | 500 |
| போஞ்சி | - | 100 | 140 | 100 |
| கத்தரிதம்புள்ள | 30 | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 5-10 | 20 | 20 | 20 |
| தேசிக்காய் | 50 | 50 | 80 | 50 |
| தேங்காய் (ஒன்று) | 30-60 | 50 | 60 | 50 |

## இராசி பலன்

*26.03.2011*
*(பங்குனி 12 சனிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.13 மணிக்கு*
*சப்தமி முற்பகல் 11.59 மணிவரை*
*மூலம் பின்னிரவு 2.25 மணிவரை*
*இராகுகாலம் 9.15-10.45 மணிவரை*
*சுப நேரம் 3.15-4.45 மணிவரை*

**மேடம்** மனக்குறை அகன்று மகிழ்ச்சி கூடும் நாள், பொல்லாதவர்கள் உங்களை விட்டு விலகுவர், தொழிலில் முன்னேற்றத்திற்கு பெண் வழி ஒத்துழைப்பு கிடைக்கும்.

**இடபம்** குடும்பபெரியவர்களின் ஆலோசனைகளை கேட்டு நடப்பது நல்லது, உடல்நலனில் கவனம் தேவை, பிரயாணங்களில் அவதானமாக இருக்கவேண்டியநிலை.

**மிதுனம்** நல்லவர்களின் தொடர்பால் நலம் காணும் நாள், குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும், கடந்தகால நண்பர்களின் சந்திப்பால் பரவசமடைவீர்கள்.

**கடகம்** பகைவிலகி பாசம் கூடும் நாள், உடல் நலம் சீராகும், பயணத்தால் பலன் கிடைக்கும், செய்தொழில் விருத்தியுண்டு, போசனசுகமுண்டு.

**சிங்கம்** சிறப்பான நாள், பிள்ளைகள் வழியில் பெருமையடைவீர்கள், புதிய நபர்களின் சந்திப்புண்டு, பூமியால் இலாபம் கிடைக்கலாம், விருந்து விழாக்களில் கலந்துகொள்ளும் வாய்ப்புண்டு.

**கன்னி** விருந்தினர்களை வரவேற்று வியப்படையும் நாள், சுப செய்திகள் வந்து சேரலாம், பிரச்சனைகளிலிருந்து விடுதலை கிடைக்கும், பொருட்சேர்கையுண்டு.

**துலாம்** பழையபாக்கிகள் திடீரென வசூலாகலாம், பாராட்டும்புகழும் அதிகரிக்கும் நாள், பிரயாணத்தால்நன்மையுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** குடும்பதினரின் எண்ணங்களை நிறைவேற்றுவீர்கள், திடீர் பயணங்களால் சந்தோசமடைவீர்கள், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம் பெறலாம்.

**தனுசு** சொன்ன சொல்லை காப்பாற்ற துடிப்புடன் செயற்படுவீர் கள், தொழிலில்புதிய கூட் டாளிகள் வந்து இணைவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்,

**மகரம்** உறவினர் வீட்டு சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, சுபவிரயம் ஏற்படும்நாள், காரிய அலைச்சல்கள் ஏற்படலாம்.

**கும்பம்** அந்நியதேசப் பயணங்களால் நன்மையுண்டு, சமயோசித புத்தியால் பலரையும் கவர்வீர்கள், தொலைபேசிச் செய்திகள் மனச்சரிவைத்தரும்.

**மீனம்** தொழில் ரீதியான திட்டங்கள் வகுப்பீர்கள், எடுத்த முயற்சிகள் வெற்றியளிக்கும். பிறர் உதவிகள் கிடைக்கும், போசன நன்மையுண்டு.

வளவன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தீவிரவாத தாக்குதலை முறியடிக்க இலங்கை ஒத்துழைப்பு வழங்கியது

## இன்டர்போல் தெரிவிப்பு

(கொழும்பு)

உலகக்கிண்ணப் போட்டித் தொடரை இலக்கு வைத்து நடத்தப்படவிருந்த தீவிர வாதத் தாக்குதலை முறியடிப்பதற்கு இலங்கை ஒத்துழைப்பு வழங்கியுள்ளதாக இன்டர்போல் தெரிவித்துள்ளது.

தெற்காசிய நாடுகளில் நடைபெற்று வரும் 10 ஆவது உலகக்கிண்ணப் போட்டி களை இலக்கு வைத்து தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த திட்டமிட்டிருப்பதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

பாகிஸ்தான், இலங்கை மற்றும் மாலை தீவு ஆகிய நாடுகளின் பாதுகாப்பு துறை யினரின் ஒத்துழைப்பு காரணமாக முக்கிய தீவிரவாத சட்டதிட்டமொன்று முறியடிக் கப்பட்டதாகக் குறிப்பிடப்படுகிறது.

பாகிஸ்தானிலிருந்து மாலைதீவு சென்ற தீவிரவாதி ஒருவர் கைது செய்யப்பட்டுள் ளதாக இன்டர்போல் உயரதிகாரி ரொனால்ட் கே நோபல் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# நீதிமன்ற தீர்ப்புக்களின் பின்னர் 101 உள்ளூராட்சி சபைகளுக்கும் தேர்தல்

தேர்தல் நடாத்தப்படாமல் இருக்கும் எஞ்சிய 101 உள்ளூராட்சி சபைகளுக்கும் நீதிமன்ற தீர்ப்புக்களின் பின்னர் தேர்தலை நடாத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக் கப்படும் என்று தேர்தல் திணைக்கள உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 101 சபைகளுக்கு தேர்தலை நடத்துவது தொடர்பில் விபரிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்விடயம் குறித்து அவர் மேலும் கூறு கையில், நாட்டில் 234 உள்ளூராட்சி சபைக ளுக்கு தேர்தல் நடந்து முடிந்துள்ளது. இந் நிலையில் வேட்புமனு நிராகரிப்பு தொடர்பில் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளசபைகள் உள்ளிட்ட 101 உள்ளூராட்சி சபைகளுக்கு தேர்தலை நடத்த வேண்டியுள்ளது.

இந்நிலையில் வழக்கு விசாரணைகள் முடிவுற்று தீர்ப்புக்கள் வெளியிடப்பட்டவுடன் எஞ்சியுள்ள 101 சபைகளுக்கு தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானங்கள் எடுக்கப்படும் என்றார்.

கடந்த 17 ஆம் திகதி 234 உள்ளூராட்சி மன்றங்களுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்யும் நோக்கில் நடைபெற்ற தேர்தலில் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி 205 சபைகளையும் தமிழ்த் தேசிய கூட் டமைப்பு 12 சபைகளையும் ஐக்கிய தேசிய கட்சி 9 சபைகளையும் கைப்பற்றியி ந்தன.

யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களில் எந்தவொரு சபைக்கும் தேர்தல் நடத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது (ஸ்ரீ-2)

# மக்களின் உரிமைகளை அரசு அடக்குமுறைக்குட்படுத்தகூடாது

## ஜோன் அமரதுங்க எம்-பி தெரிவிப்பு

(கொழும்பு)

மக்களின் உரிமைகளை அரசாங்கம் அடக்கு முறைக்கு உட்படுத்தக்கூடாது என ஐக்கிய தேசியக்கட்சி பாராளுமன்ற உறுப் பினர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள் ளார்.

மக்களின் உரிமைகளை அடக்கு முறைக்கு உட்படுத்துவதன் மூலம் மத்திய கிழக்கு பாணியிலான கிளர்ச்சிகள் வெடிக்க அரசாங்கம் வழியமைக்கக் கூடாது என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் இடம் பெற்ற முறைகேடுகள் தொடர்பில் பாரா ளுமன்றில் உரையாற்றும் போது அவர் அதனைக் குறிப்பிட்டுள்ளார்.

மக்களின் ஜனநாயக உரிமைகள் தொடர்ச்சியாக அடக்கு முறைக்கு உட்ப டுத்தப்பட்டால் மத்திய கிழக்கு நாடுகளில் ஏற்பட்டதனைப் போன்று இலங்கையிலும் கிளர்ச்சிகள் வெடிக்கும் என அவர் தெரிவித் துள்ளார்.

இவ்வாறான நிலைமைக்கு வழியமைக்க கூடாது என அவர் அரசாங்கத்தை வலியுறுத் தியுள்ளார். (ஸ்ரீ-2)

# இலங்கை தொடர்பான விசாரணைகளில் பங்கேற்க தென்னாபிரிக்காவிற்கு அழைப்பில்லை

## அந்த நாட்டு துணை ஜனாதிபதி தெரிவிப்பு

இலங்கை குறித்த ஐக்கிய நாடுகளின் நிபுணர் குழு அறிக்கை வெளியிடப்படும் வரையில் காத்திருப்பதாக தென்ஆபிரிக்கா அறிவித்துள்ளது.

இலங்கை தொடர்பான விசாரணை களில் பங்கேற்குமாறு தென் ஆபிரிக்கா விற்கு அழைப்பு விடுக்கப்படவில்லை என அந்நாட்டு துணை ஜனாதிபதி கெல்மா மோத்லந்தே தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் நிபுணர்குழு இலங்கையை யுத்தக் குற்றச் செயல்கள் தொடர்பில் விசாரணை நடத்தவில்லை எனக் கருதுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கையில் இடம்பெற்ற இறுதிக் கட்ட யுத்தத்தின் போது சர்வதேச மனிதாபிமான சட்டங்கள் மீறப்பட்டுள்ளனவா என விசாரணை நடத்தி தமக்கு ஆலோசனை வழங்கும் நோக்கில் ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளர் பான் கீ மூன் இந்த நிபுணர் குழுவினை நியமித்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

இன்னும் ஒரு சில வாரங்களில் குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளதாக குறிப் பிட்டுள்ளார்.

எவ்வாறெனினும் யுத்தக் குற்றச் செயல்கள் பற்றி விசாரணை நடத்தப் படுகிறதா என்பது குறித்து தமக்கு தெரியாது என அவர் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# தலைநகர கூட்டுத்தாபன அதிகாரப்பிரிவை நிர்வகிக்க புதிய ஆளுநர் நியமனம்

கொழும்பு மாவட்டத்தின் ஐந்து முக்கிய உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளை உள் ளடக்கிய கூட்டுத்தாபன அதிகாரப் பிரிவை நிர்வகிக்க புதிதாக ஆளுநர் ஒருவர் அரசாங்கத்தால் நியமிக்கப்படவுள்ளார்.

பாதுகாப்பமைச்சின் செயலாளர் கோத்த பாய ராஜபக்ஷவின் தீர்மானத்துக்கு இணங்க கொழும்பின் ஐந்து முக்கிய உள்ளூராட்சி மன்றங்களை உள்வாங்கி யதாக தலைநகர கூட்டுத்தாபன அதிகாரப் பிரிவொன்று அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

அப்பிரதேசங்களில் எதிர்வரும் காலங் களில் உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள் நடாத்தப்படாது என்பதுடன் மக்கள் பிரதி நிதிகளும் தெரிவு செய்யப்படமாட்டார்கள்.

அரசாங்கம் நியமிக்கும் ஆளுநர் மூல மாகவே அனைத்து நிர்வாக நடவடிக் கைளும் மேற்கொள்ளப்படும்.

கொழும்பு மாநகரசபை, தெஹிவளை-கல்கிஸை மாநகரசபை, ஸ்ரீஜெயவர்த்தன புர கோட்டே மாநகரசபை, கொலன்னாவை நகரசபை, கொடிகாவத்தை பிரதேசசபை என்பனவே தலைநகரக் கூட்டுத்தாபன அதி காரப் பிரிவுகள்குள் உள்ளடக்கப்பட்டிருக்கும் உள்ளூராட்சி மன்றப் பிரிவுகளாகும்.(ஸ்ரீ-2)

## தொண்டர் ஆசிரியர்களுக்கான கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட தொண்டர் ஆசிரியர்க ளுக்கான கலந்துரையாடல் நாளை மறு தினம் திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தடியில் அமைந்துள்ள புதிய உயர்கலைக்கல்லூரியில் நடைபெறும்.

எனவே, அனைத்து தொண்டர் ஆசிரி யர்களையும் தவறாது கலந்து கொள் ளுமாறு சங்கத்தலைவர் கேட்டுள்ளார் (ஸ்ரீ-2)

# முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவு தலைவருக்கு 2 வருட சிறைத்தண்டனை


(யாழ்ப்பாணம்)

கடந்த 2000 ஆம் ஆண்டில் பொலிஸ் அதிகாரி ஒருவரை கடமை செய்யவிடாது தடுத்தமைக்காக முன்னாள் ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் தலைவரான சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் கருணாரத் னவுக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 10 வருடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்ட இரண்டு வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள் ளது.

அத்துடன் 25 ஆயிரம் ரூபா குற்றப் பணம் செலுத்த வேண்டும் எனவும் பாதிக் கப்பட்ட பொலிஸ் அதிகாரிக்கு ஹெட்டியா ராச்சி சமத்திரஜீவாவுக்கு 3 இலட்சம் ரூபா செலுத்த வேண்டுமெனவும் கொழும்பு மேல்நீதிமன்ற நீதிபதி குமுதினி விக்கிரம சிங்க தீர்ப்பளித்துள்ளார்.

சந்திரிகா குமாரதுங்க ஜனாதிபதியாக இருந்த காலத்தில் சிரேஷ்ட பொலிஸ் அத் தியட்சகர் கருணாரட்ன ஜனாதிபதி பாதுகாப்பு பிரிவின் தலைவராக கடமையாற்றினார்.

கடந்த 2000 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 2 ஆம் திகதி குற்றச் செயலில் ஈடுபட்ட சிலரை கைது செய்ய உதவி பொலிஸ் பரிசோதகரான ஹெட்டியாராச்சி சமத்திர ஜீவ முயன்றபோது அவரை கடமை செய்ய விடாது பிரதிவாதி தடுத்ததாக குற்றம் சுமத்தப்பட்டு இவ்வழக்கு தொடரப்ப ட்டிருந்தது. (ஸ்ரீ-2)

வல்வெட்டித்துறை அருள்மிகு ஆதிவைரவர் தேவஸ்தான புனருத்தாரன மகா கும்பாபிஷேக சிறப்புமலர் வெளியீட்டு விழா அண்மையில் நடைபெற்றது இந்த நிகழ்வில் ஜெசஞ்ஜன், கட்டிட நிறுவன உரிமையாளர் க.சண்முகநாதன்,வல்லை முத்துமாரி அம்மன்கோவில் பிரதம குருவிடம் முதற்பிரதியை பெற்றுக் கொள்வதையும் மலர் தொகுப்பாசிரியர் ந.சிவரத்தினம் அருகில் நிற்பதையும் ஆதி வைரவ பெருமானுக்குரிய திருவூஞ்சல் பாட்டை பல தசாப்தங்களுக்கு முன்பு இயற்றி வழங்கிய உடுப்பிட்டி சிவசம்புப் புலவரின் வழி தோன்றலான புலவர் மணி காங்கேசு நீலகண்டனிற்கு கோவில் பரி பாலன சபையின் தலைவர் மு.சாமிவேல் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்படுவதையும் படங்களில் காணலாம்.

# நூல்அறிமுகவிழா

கவிஞர் துரையரின் 8 ஆக்கங்களின் அறிமுகவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 5 மணிக்கு வெள்ளவத்தை கொழும் புத் தமிழ்ச் சங்கத்தில் பேராசிரியர் சோ.சந் திரசேகரன் தலைமையில் நடைபெற வுள்ளது.

ஆசியுரையை வாழ்நாள் பேராசிரியர் சி.தில்லைநாதன் வழங்கவுள்ளார்.

வாழ்த்துரையை ஓய்வுநிலை இலங் கை வங்கி பிரதம சட்ட அலுவலர் மு.கிரி தரன், கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (ஸ்ரீ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரணிலுக்கும் சஜித்துக்குமிடையில் சமரசத்தை ஏற்படுத்த முயற்சி



(கொழும்பு)

**ரணில் விக்ரமசிங்கவுக்கும் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையில் சமரசத்தை ஏற்படுத்த கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க பாரிய அளவில் முயற்சித்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.**

**கட்சியின் தவிசாளர் காமின ஜெயவிக்ரம பெரேரா, கபீர் ஹசீம் மற்றும் மாலிக் சமரவிக்ரம ஆகியோரும் அவருடன் இணைந்து சமரச பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளனர்.**



கடந்த சில நாட்களுக்கு முன்னர் செயற்குழு கூட்டத்தில் தலைவர் தெரிவு இடம்பெற்ற வேளையில் சஜித் பிரேமதாஸவின் குழுவினர், தலைவர் தெரிவுக்கு வாக்கெடுப்பு ஒன்றை நடத்தவே இறுதி நிமிடம் வரையில் முயற்சித்தனர்.

கட்சியின் செயற்குழு கூட்டம் கடந்த 23 ஆம் திகதி 4 மணிக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதும் 3 மணிக்கே வந்த அவர்கள் தேர்தல் வாக்கெடுப்புக்கு தயாராகினர்.

எனினும் திஸ்ஸ அத்தநாயக்க மற்றும் காமினி ஜெயவிக்ரம ஆகியோர் சஜித்திடம் பேச்சு நடத்தியதன் அடிப்படையில் கட்சித் தலைமைதுவத்துக்கான தேர்தலில் போட்டியிடப் போவதில்லை என சஜித் தீர்மானித்தார்.

எனினும் செயற்குழு கூட்டத்தின் போது மேல்மாகாண சபை உறுப்பினர் ரஞ்சித் மத்தும பண்டார சஜித்தை தலைவராக்குவதாக முன்மொழிந்து தேர்தலுக்கு கோரிக்கை விடுத்தார். போட்டியாளர்கள் தயாராகும் படியும் ரணில் விக்ரமசிங்க தெரிவித்தார்.

இதனையடுத்து கபீர் ஹசீம், மாலிக் மற்றும் சஜித் ஆகியோர் தனியாகச் சென்று 5 நிமிடங்கள் கலந்துரையாடியதன் பின்னர் தாம் தலைமைத்துவத்துக்கு போட்டியிடவில்லை என சஜித் அறிவித்தார். (ஸ்ரீ-2)

## பொதுக்கூட்டம்

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பூவேந்தன் பாலர் பகல் பராமரிப்பு நிலைய 17 ஆவது வருடாந்த பொதுக்கூட்டம் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2 மணிக்கு நிலைய மண்டபத்தில் நிலையத் தலைவர் வை. இராசரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்திற்கு மாணவர்களின் பெற்றோர்களையும் நலன் விரும்பிகளையும் தவறாது கலந்து கொள்ளுமாறு நிலையச் செயலாளர் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-29)

## அலங்கார உற்சவம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை -தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகி அம்மன் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் ஏப்ரல் மாதம் 2 ஆம் திகதி ஆரம்பமாகி தொடர்ந்து பத்து தினங்கள் உற்சவம் நடைபெறவுள்ளது.

இதில் எதிர்வரும் 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சர்ப்ப வாகனக் காட்சியும் 9 ஆம் திகதி சனிக்கிழமை மாலை 5 மணிக்கு சப்பறத் திருவிழாவும் மறுநாள் ஞாயிற்றுக் கிழமை மாலை 4 மணிக்கு தேர் உற்சவமும் நடைபெறவுள்ளது. (ஸ்ரீ)

# கிழக்கில் 3 ஆயிரத்து 250 சிறுவர்கள் வீட்டுவேலைக்கு அமர்த்தப்பட்டுள்ளனர்

## மாகாண கல்வியமைச்சர் தெரிவிப்பு

கிழக்கிலங்கையில் வறுமை காரணமாக 3 ஆயிரத்து 250 சிறுவர்கள் வீடுகளில் வேலை செய்து தமது உணவுத் தேவையை பூர்த்தி செய்து வருவதாக மாகாண கல்வி அமைச்சர் விமல்வீரா திஸ்ஸநாயக்க தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

கிழக்கில் போரினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களைச் சேர்ந்த 3 ஆயிரத்து 250 சிறுவர்கள் வீடுகளில் பணிசெய்து தமது உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்து வருகின்றனர். அவர்கள் பாடசாலைகளுக்கு செல்வதில்லை.

கிழக்கிலங்கையில் இடம்பெற்ற போர் மற்றும் கைதுகளால் 49 ஆயிரம் பெண்கள் தமது கணவர்களை இழந்துள்ளனர்.

இவர்களில் 30 ஆயிரம் பெண்கள் 25 வயதிற்கும் குறைவானவர்கள் என அரச சார்பற்ற நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. கிழக்கில் அபிவிருத்தித் திட்டங்களுக்கு உதவி வருவதாக இந்தியாவும் ஐக்கிய நாடுகள் சபையும் தெரிவித்து வருகின்றன. ஆனால் அவர்கள் தமது செயற்றிட்டங்கள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்வதில்லை. ஐக்கிய நாடுகள் சபையின் உலக உணவுத்திட்ட அமைப்பினால் மாணவர்களுக்கு வழங்கப்பட்ட உலர் உணவு உதவிகளும் கடந்த நான்கு மாதங்களாக நிறுத்தப்பட்டுள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# மன்னாரில் மீள்குடியேறியோருக்கு உதவிகள் வழங்கப்படவில்லை

## மக்கள் அதிருப்தி

மன்னாரில் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு உதவிகள் வழங்கப்படவில்லை என முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்டத்தின் சில கிராமங்களில் மீள்குடியேற்றப்பட்டு ஒன்றரை வருடங்கள் கடந்துள்ள நிலையிலும் போதியளவு வசதிகள் வழங்கப்படவில்லை என மக்கள் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

அரசாங்கம் அடிப்படை வசதிகளைக் கூட இன்னமும் வழங்கவில்லை எனவும் மீள்குடியேற்றப்பட்ட மக்களுக்கு வழங்கப்படும் 16 கூரைத்தகடுகளும் 25 ஆயிரம் ரூபா பணமும் பல குடும்பங்களுக்கு வழங்கப்படவில்லை என்றும் குறிப்பிட்டுள்ளார்.

ஜீவனோபாயத்தை முன்னெடுப்பதில் பெரும் நெருக்கடி நிலைமை காணப்படுவதாகவும் ஒருவேளை உணவை பெற்றுக்கொள்வதற்கே திண்டாட்டமான நிலைமை காணப்படுவதாக மீள்குடியேற்றப்பட்ட மக்கள் குறிப்பிட்டுள்ளனர். (ஸ்ரீ-2)

# இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டும்

## ஐ.தே.க.வலியுறுத்து

(கொழும்பு)

இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென ஐக்கிய தேசியக் கட்சி வலியுறுத்தியுள்ளது.

இந்தியாவைப் போன்று இலங்கையிலும் தேர்தல்களில் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறை அறிமுகப்படுத்தப்பட வேண்டியது அவசியமானது என எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோன் அமரதுங்க குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவின் பிற்படுத்தப்பட்ட கிராமங்களிலும் இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.


இலத்திரனியல் வாக்கெடுப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டால் வாக்கெடுப்பு மோசடிகள் குறித்து எவரும் முறைப்பாடு செய்ய மாட்டார்கள் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

அடுத்து வரும் தேர்தல்களில் இந்த நவீன வாக்கெடுப்பு முறைமை அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென தெரிவித்துள்ளார்.

இதேவேளை தேர்தல் தினமன்று ஹெலிகொப்டர்கள் உள்ளிட்ட பல அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டதாக ஐக்கிய தேசியக் கட்சியின் இணைப் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

அரச சொத்துக்கள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டமை தொடர்பில் தேர்தல் ஆணையாளரும் அதிருப்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-2)







யா/ புத்தூர் ஸ்ரீ பஞ்சுசீக வித்தியாலயத்தின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் விருந்தினர்களாகக் கலந்து கொண்ட யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் திருமதி. அ.வேதநாயகம், அதிபர் கு.ரவீந்திரன், யாழ். வலய உத்தியோகத்தர் சி.தவராசா ஆகியோர் அழைத்து வரப்படுவதையும் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்ட கோப்பாய் கோட்டக் கல்விப் பணிப்பாளர் வே.பாலசுப்பிரமணியம் உரையாற்றுவதையும் மாணவர்களின் உடற்பயிற்சி நிகழ்வையும் படங்களில் காணலாம். (படங்கள்:-உடுப்பிட்டி செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காசநோய் சமூக அணுகுமுறை

## 17 காசநோயிற்கான சிகிச்சை

4. பொதுவான காசநோய் அறிகுறியாகத் தொடர்ச்சியான இருமல் 2 கிழமைகளுக்கு மேல் இருக்கும்.

5. ஏனைய அறிகுறிகளாக நிறை இழப்பு, களைப்பு, காய்ச்சல், இரவில் வியர்த்தல், நெஞ்சுநோ, மூச்செடுத்தல் கடினம், உணவில் நாட்டமின்மை, சளியுடன் இரத்தம் வெளியேறல் என்பன காணப்படும்.

6. எப்பொழுதும் இயலுமானவரை மூன்று சளிமாதிரிகளை இரண்டு நாட்களிற்குள் காசநோய் இருக்குமென ஐயுறுவோரில் எடுக்கவேண்டும்.

7. சளிப்படலத்தினைத் தயாரிக்க வேண்டும்.

8. சளிப்படலத்தினைத் தயாரிக்க முடியாதுவிடின் சளியினை நுணுக்குக்காட்டி நிலையத்திற்கு அனுப்புதல் வேண்டும்.

9. சளிப்பரிசோதனையின் முடிவுகள் பதிவுப் புத்தகத்தில் பதியப்படல் வேண்டும்.

10. நோய் அறிகுறிகள் உள்ளவர்களின் சளி மாதிரிகள் முறையாக எல்லோரிலும் எடுக்கப்பட்டனவா என்பதை ஆய்வுகூடத்தில் வேலை செய்பவர்கள் உறுதிப்படுத்தல் வேண்டும்.

**ஆ. ஆய்வுகூடச் சேவைகளுக்கான உதவிகள்**

மாவட்ட மார்புநோய்ச்சிகிச்சை நிலையத்திலும், ஏனைய வைத்தியசாலைகளிலும் நுணுக்குக்காட்டி வசதிகள் செய்து கொடுக்கப்படும். நுணுக்குக்காட்டி வசதி இல்லாத வைத்தியசாலைகளில் இருந்தும் சளிமாதிரிகள் அருகில் உள்ள நுணுக்குக் காட்டி நிலையத்திற்கு அனுப்பப்படும்.

மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரியின் குழு, ஒவ்வொரு நிலையத் தினையும் குறைந்தது காலாண்டிற்கு ஒரு தடவை பார்வையிட வேண்டும். ஒவ்வொரு ஆய்வுகூடத்திலும் பதிவுப் புத்தகம் இருத்தல் வேண்டும். அவை முழுமையாகவும், சரியாகவும் நிரப்பப்படல் வேண்டும்.

காசநோய் இருக்கும் என ஐயுறுவோரில் சரியான தடவைகள் சளிப்பரிசோதனை செய்யப்பட்டு உள்ளதா எனப் பார்த்தல் வேண்டும்.

**இ. காசநோயாளிகளைப் பதிவு செய்தல்**

காசநோயாளி எனக் கண்டறியப்பட்டவர்கள் மாவட்ட மார்பு நோய்ச்சிகிச்சை நிலையத்தில் பதிவு செய்யப்படுவர். காசநோயாளிகளைச் சளிப்பரிசோதனையில் கண்டறிதல்; பின் பதிவு செய்தல் மிகவும் முக்கியமானது. சில காசநோயாளர் இவ்வாறு பதியப்படாது; சிகிச்சை அளிக்கப்படாது இறந்து விடுவது மட்டுமல்ல; குடும்ப அங்கத்தவர்களுக்கும் நோயினைப் பரப்பி விடுவர். எனவே, எல்லா நோயாளர்களுக்கும் உடனே பதிவு செய்யப்பட்டுச் சிகிச்சை அளிக்கப்படல் அவசியம்.

பதிவுகள் சரியாகவும், கிரமமாகவும் இருத்தல்வேண்டும். ஒவ்வொரு காலாண்டிற்கும் உரிய அறிக்கைகள் எமது செயற்பாடுகளை மதிப்பிடுவதற்கான அடிப்படைகளாக அமையும்.

பதிவில் மேற்கொள்ளப்படுபவை, நோயின் வகைகள்:

1. புதியது
2. மீள ஏற்பட்டது.
3. முன்னைய சிகிச்சை பலனளிக்காமையின் பின் சிகிச்சை அளித்தல்
4. வேறு இடங்களில் இருந்து மாற்றப்பட்ட நோயாளிகள்
5. வேறு வகை

**ஈ. தொற்று நோயென அறிவிக்கப்படல்**

காசநோயாளிகள் தொற்றுநோய் உடையோர் என அறிவிக்கப்படுவார்கள். இதற்குரிய படிவம் மூன்று பிரதிகளில் ஒன்று மத்திய நிலையத்திற்கும் ஒன்று பிரதேச சுகாதார வைத்திய அதிகாரிக்கும் ஒன்று மார்புநோய்ச் சிகிச்சை நிலையத்திலும் பேணப்படும். பொதுச் சுகாதாரப் பரிசோதகர் நோயாளியின் குடும்பத்திற்குச் சென்று அங்கு நோய் அறிகுறி காணப்படுவோரை சளிப் பரிசோதனைக்கு அனுப்புவர்.

காசநோய்ச் சிகிச்சை அட்டை

இதில் பின்வருவன கவனிக்கப்படும்

1. நோயின் தன்மை
2. நோயின் வகை
3. சரியான மருந்துகளும் அளவுகளும்
4. சளிப்பரிசோதனைகள் ஒழுங்காகக் குறித்த காலத்தில் செய்யப்படுன்றமை
5. ஒழுங்காக இடைவிடாது மருந்துகளை நோயாளி பெறல்.
6. மருந்துகள் கொடுக்கப்பட்டனவா?
7. உரிய வேளையில் மருந்துகளைப் பெறுகின்றனரா?

மேற்கூறியவை நோயாளியின் குணமடையும் வீதம் 85% ஆகக் காரணமாக உள்ளன. மேலும் நோயாளியின் பொதுவான தகவல்கள் முக்கியமாகப் பதியப்படும்.

1. முழுமையான பெயர்
2. முகவரியும், அடையாள அட்டை இலக்கமும்
3. பிறந்த திகதி/வயது
4. பால்
5. உடல் நிறை
6. தொடர்பு கொள்ள வேண்டியவர்
   - பெயர்
   - முகவரி
   - தொலைபேசி இலக்கம்
7. நோயாளியின் மாவட்ட பதிவு இலக்கம்.
8. நேரடிக் கண்காணிப்பு நிலையம்
9. நேரடிக் கண்காணிப்பில் மருந்து கொடுப்பவரின் பெயரும் பதவியும்.

காசநோய்ச் சிகிச்சைத் தொடரல் அட்டை, நோயாளியிடம் இருக்கும். அதில் நோயாளி மீண்டும் வரவேண்டிய திகதி, சளிப்பரிசோதனைக்கு வரவேண்டிய திகதி என்பன பதியப்படும்.

**உ. காசநோயினைக் கட்டுப்படுத்துவதற்காகச் செயற்படுவதன் நோக்கங்கள்.**

*1. நோயாளி சார்பானது*

குணமடையச் செய்தல், அவர்கள் அன்றாட வேலைகளைச் செய்யக்கூடிய நிலைக்கு மாற்றல். அவர்களது குடும்பத்திலும், சமூகத்திலும் சுயாதீனமாகச் செயற்படல், சமூகப் பொருளாதாரப் பாதிப்பினைத் தடுத்தல்.

**2. சமூகம் சார்பானது**

நோயாளர்களை ஆரம்பத்திலேயே கண்டறிந்து சிகிச்சை அளித்துக் குணமடைய வைப்பதால் காசநோய் பரவுவது குறைவடையும்.

காசநோய் முற்றாகக் குணப்படுத்தக் கூடியது. சரியான நோய் நிர்ணயமும், முழுமையான சிகிச்சையும், நோயினைக் குணப்படுத்தும். இதுவே நோய் சமுதாயத்தில் பரவுவதைத் தடுப்பதற்கான மிகச்சிறந்த முறை. எனவே, நோய்க்கட்டுப்பாட்டில் மிகவும் கூடிய முன்னுரிமை நோயாளிகளை அடையாளம் காண்பதற்கும், நோய்க்குச் சிகிச்சை அளிப்பதற்கும் கொடுக்கப்பட்டுள்ளது.



Dr.சி.யமுனானந்தா, MBBS,DTCD
மாவட்ட காசநோய்க் கட்டுப்பாட்டு அதிகாரி,
மார்புநோய் சிகிச்சை நிலையம்,
பண்ணை,யாழ்ப்பாணம்.

நேரடிக் கண்காணிப்பின் கீழான சிகிச்சையில் சுகாதார உத்தியோகத்தர்கள், நோயாளி மருந்துகள் உள்ளெடுப்பதனை நேரடியாக அவதானிப்பர்; குணமடைவதனை உறுதிப்படுத்துவர்.

இது காசநோய் பரப்புவோரினைத் தடுக்கும் திறனாகும். சிறந்த தொடர்பாடல் நோயாளிக்கும், உத்தியோகத்தர்களுக்கும் இடையில் இருத்தல்வேண்டும்.

நோயினைக் கண்டறிதல் பற்றியும், நோயின் ஆபத்தான நன்மைகள் பற்றியும் அறிவூட்டல் வேண்டும். தெளிவாகவும், ஆதரவாகவும் கூறல்வேண்டும்.

நோய் கண்டறிதலில் இருந்து சிகிச்சை பற்றியும், நோயாளிக்கும் அவரது குடும்பத்திற்கும் தகவல்களும், அறிவுரைகளும், ஆதரவும் வழங்கல் வேண்டும். நோயினைக் கண்டறிந்த போது அடிப்படைத் தகவல்கள் வழங்கப்படல் வேண்டும். (தொடரும்)

# திருட்டுடன் தொடர்புடைய நபருக்கு விளக்கமறியல்

(கரவெட்டி)

பருத்தித்துறைப் பகுதியில் இரவு வேளையில் பலசரக்குக் கடையை உடைத்து அங்கிருந்த 2 ஆயிரத்து 600 ரூபா பணத்தைக களவாடிய சந்தேக நபரை பருத்தித்துறைப் பொலிஸார் கைது செய்துள்ளனர்.

இச்சம்பவத்துடன் தொடர்புடைய மேற்படி நபரை நேற்று முன்தினம் பொலிஸார் பருத்தித்துறை நீதவான் நீதிமன்ற நீதிபதி திருமதி ஶ்ரீநிதி -நந்தசேகரம் முன்னிலையில் ஆஜர் படுத்தினர். குறித்த வழக்கை விசாரணை செய்த நீதிபதி எதிர்வரும் 4 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார். (ஶ்ரீ-4-24)



கோப்பாய் கோட்ட பாடசாலைகளின் விளையாட்டுப் போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வில் விருந்தினர்கள் பாண்ட் வாத்திய சகிதம் அழைத்துவரப்படுவதைப் படத்தில் காணலாம்.

# பூமியதிர்ச்சியை முன்கூட்டியே எதிர்வுகூற முடியும்

## இலங்கை விஞ்ஞானிகள் தெரிவிப்பு

பூமியதிர்ச்சியை முன்கூட்டியே எதிர்வுகூற முடியுமென இலங்கை விஞ்ஞானிகள் தெரிவித்துள்ளனர். வானியல் சாஸ்திரத்தின் அடிப்படையில் பூமியதிர்ச்சி குறித்த தகவல்களை வெளியிட முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது. பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானிகள் இந்தத் தகவலை வெளியிட்டுள்ளனர்.

சூரிய குடும்பத்தின் சில கோள்களின் நிலையை அடிப்படையாகக் கொண்டு பூமியதிர்ச்சி பற்றி அறிவிக்கமுடியும் என பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் அத்துல செனவிரட்ன தெரிவித்துள்ளார்.

பூமியதிர்வு ஏற்பட்ட சந்தர்ப்பங்களில் குறித்த கோள்களின் நிலை ஒரே விதமாகக் காணப்பட்டதாகக் குறிப்பிட்டுள்ளனர்.

பூமியதிர்வு ஏற்படுவதற்கு முன்னர் எங்கு எப்போது பூமியதிர்வு ஏற்படும் என்பதனை எவராலும் இதுவரையில் துல்லியமாக அறிவிக்க முடியாத நிலைமை காணப்படுவதாக அவர் தெரிவித்துள்ளார்.

சூரியகுடும்பத்தின் சில கிரக நிலைகளினால் புவியோட்டில் அசைவு ஏற்படுவதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

எந்த இடத்தில் எப்போது நில அதிர்வு ஏற்படும் என்பதனை எதிர்வு கூறுவதற்கான முனைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகக் குறிப்பிட்டுள்ளார். அண்மையில் சிலி, ஜப்பான் மற்றும் நியூசிலாந்தில் இடம்பெற்ற பூமியதிர்வுகள் குறித்து துல்லியமாக தரவுகளை வெளியிட முடிந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ஶ்ரீ-2)

# மின்தடை பற்றிய அறிவித்தல்

மின்மார்க்கங்களில் கட்டமைப்பு வேலைகள் செய்யும் பொருட்டு இன்று சனிக்கிழமை காலை 8 மணியிலிருந்து மாலை 5 மணி வரை புத்தூர், வாதரவத்தை, வீரவாணி ஆவரங்கால், ஊறணி ஆகிய இடங்களிலும், நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8 தொடக்கம் மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கை- தீவு, சுன்னாகம், மல்லாகம், ஏழாலை, தெல்லிப்பளை, அளவெட்டி, பன்னாலை, சிறுவிளான், வடமராட்சி பிரதேசம் ஆகிய இடங்களிலும் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என யாழ்.பிரதேச மின்பொறியிலாளர் அறிவித்துள்ளார். (ஶ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழையில் பீடைகளும் அவற்றின் முகாமைத்துவமும்

13-XV



பேராசிரியர் கு.மிகுந்தன்
விவசாய உயிரியல்துறை
விவசாய பீடம்
யாழ்.பல்கலைக்கழகம்

## இனியொரு பசுமைப் புரட்சிக்கு...


### வாழையில் வைரசு நோய்கள்

நான்காவது வைரசு நோயான குருத்தடைப்பு அல்லது கழுத்தடைப்பு நோய் (banana bunchy top disease) பற்றி இதற்கு முந்தின வாரத்தில்விரிவாகத்தரப்பட்டுள்ளது. ஆதலினால் இங்கே அதுபற்றிய விளக்கம் தரப்படவில்லை.

கன்னொறுவவிலுள்ள பூங்கனியியல் பயிர்களில் ஆய்வு மற்றும் அபிவிருத்திக்கான நிறுவனத்தில் ஆய்வாளர்களாகப் பணிபுரியும் ஆரியரத்தின மற்றும் லியனகே அவர்களது 2002ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட ஆய்வறிக்கையின் பிரகாரமே மேற்கூறப்பட்ட தகவல்கள் தரப்பட்டுள்ளன.

மேலும் அவர்களது கூற்றுப்படி 1998 ஆம் ஆண்டில் மாத்தறை மாவட்டத்தில் நடுகை செய்யப்பட்ட எம்புல் எனப்படும் இழைய வளர்ப்பு வாழையில் வாழை கீறல்கள் வைரசு மற்றும் வாழைப் பொத்தி சித்திரவடிவு வைரசு ஆகியனவற்றின் அறிகுறிகள் அவதானிக்கப்பட்டுள்ளது. புத்தளம் மாவட்டத்தில் பயிரிடப்பட்ட கறி வாழையிலும் வாழைப் பொத்தி சித்திரவடிவு வைரசுவின் தாக்கம் அவதானிக்கப்பட்டுள்ளது. இதிலிருந்து வைரசு தொற்றினை முழுமையாகத் தவிர்க்க முடியாது என்ற போதிலும் வாழைத் தோட்டத்தை சுத்தமானதாகவும் காவிச்செல்லும் அழுக்கணவன் போன்ற காவிகளையும் கட்டுப்படுத்தினாலன்றி இவ்வைரசு நோய்களை கட்டுப்படுத்தல் சாத்தியமாகாது. எது எவ்வாறிருப்பினும் இவ்வைரசு நோய்களுக்கெதிராக எமது ஆய்வுகளை முடுக்கிவிடும் அதேவேளையில் வைரசு தொற்று உள்ள வாழைக்குட்டிகளை நடுகை செய்வதை தவிர்ப்பதும் இந் நோய்களை ஓரளவிற்கு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர உதவும்.

வாழைச்செய்கையாளர்கள் எதிர்நோக்குகின்ற பீடைப்பிரச்சினைகள் பற்றி இதற்கு முந்தின கிழமைகளில் விரிவாக அலசிப் பார்த்திருந்தோம் அல்லவா. இவ்வாறான பீடைகளின் பிரச்சினைகளை அவற்றைப் பற்றிய விரிவான விளக்கங்களுடனும் பீடைகளை விவசாயிகள் இனங்காணுதல், பூச்சி



New leaves are stunted and bunchy.
Leaf edges are deformed & yellow.

மற்றும் சிற்றுண்ணிப் பீடைகளினால் ஏற்படுத்தப்படும் சேதங்கள், நோய்களின் அறிகுறிகள் இவ்வாறான நோய்களினால் வாழையிலேற்படும் பாதிப்புகள் இவையனைத்தினாலும் வாழையின் விளைச்சலில் ஏற்படும் விழுக்காடு என்பனவற்றுடன் அந்தந்த பீடைகளை எவ்வாறு எம்மாலியன்றவரை முகாமைப் படுத்தலாம் எனவும் விரிவாகப் பார்த்தோம்.

இக்கட்டுரைத் தொடரினூடாக பல விவசாயப் பெருமக்கள் வாசித்து பயனடைவதையும் பலவேறு தொழில் புரிவோர், மாணவர்கள், பொதுமக்கள் எனப்பலரும் வாசித்தறியும் பகுதியாகவும் இருப்பதை எழுதும் இக்கைகளுக்கு நேரடியாகவும் கடிதம் மூலமும் என் இனிய உறவுகள் தந்திருக்கும் கருத்துக்களுக்கு நன்றி கூறும் அதே வேளையில் "வலம்புரி" பத்திரிகை நிர்வாகத்தினர், ஆசிரியரதும் முழுமையான ஒத்துழைப்பும் கிடைத்ததாலேயே இது சாத்தியமானது என்பதையும் இவ்விடத்தில் பதிவு செய்ய விரும்புகிறேன்.

மேலும் எங்களூர் வாழைச் செய்கையாளர்கள் எதிர்நோக்கும் பீடைப் பிரச்சினைகளுக்கு அனைவரும் இணைந்தே வழி கண்டிட வேண்டும் என்ற எதிர்பார்ப்பும் நியாயமானதே.

இப்பீடைகளை ஒருங்கிணைத்து முகாமைத்துவப்படுத்தல் அவசியமானது. இது வாழைக்கு மட்டுமல்ல அனைத்து பயிர்களுக்குமே பொருத்தமானது ஆகும். ஒருங்கிணைந்த வாழைப் பீடை முகாமைத்துவம் என்பது தனியனாக ஒரு பீடையை முகாமைத்துவப்படுத்துவதையோ அன்றி ஒரு விவசாயியினுடைய வாழையிலுள்ள பீடைகளை முகாமைத்துவப்படுத்துவதற்கோ அல்ல.

நாம் என்றுமே இருக்கும் அந்த குறுகிய வட்டத்திலிருந்து வெளியே வந்து அனைத்து வாழைச் செய் கையாளர்களுக்குமான அனைத்து வாழைப் பயிர் செய்யப்படும் விளைநிலத்துக்கான பீடை முகாமைத்துவமாக இருந்தால் மட்டுமே பீடை முகாமைத்துவம் முழுமையாக வெற்றியளிக்கும்.



வாழைச் செய்கையாளர்கள் ஒன்றிணைந்து சங்கம் அமைத்து ஓரணி யாக ஒரு குடையின் கீழ் வாழைச் செய்கையை செய்து வருவது பாராட்டுக் குரியதும் சமகால தேவையுங்கூட.

இவர்களது ஒருங்கிணைப்பினூடாக வாழையில் பிரச்சினையாயிருக்கும் பூச்சி, சிற்றுண்ணி பீடைகளையும் நோய்களையும் முகாமைத்துவப்படுத்துவது சாத்தியமே. சந்தையிலிருக்கும் பீடை நாசினிகளை முழுமையாக நம்பி பீடைகளை முகாமைத்துவமிட முடியாது என்பதனை நாம் கவனத்திற் கொள்ள வேண்டும்.

வாழைச்செய்கையில் தலையிடியாக இருந்து வரும் இப்பீடைகளினது வரவும் பெருக்கமும் விளைநிலத்தில் செய்யப்படும் பயிர்செய்கை நடவடிக்கைகளுடன் தொடர்புபட்டிருக்கின்றது என்பதனை நாம் நன்குணர்ந்து கொண்டால் எங்களது பயிர் செய்கை நடவடிக்கைகளை அவதானமாக திட்டமிட்டு செய்தால் இவற்றின் தேவையற்ற வரவையும் பரவலையும் மேலும் பெருக்கமடைவதையும் தவிர்த்துக் கொள்ளலாம்.

(தொடரும்)

# நாட்டில் இயங்கும் 6 ஆயிரத்து 971 மருத்துவமனைகள் பதிவு செய்யப்படாதவை

## தனியார் வைத்திய சேவைகள் ஆணைக்குழு தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையிலுள்ள 10 ஆயிரம் மருத்துவ மனைகள் மற்றும் மருத்துவ நிலையங்களில் 3 ஆயிரத்து 29 நிலையங்களே பதிவு செய்யப்பட்டவை என இலங்கையின் தனியார் வைத்திய சேவைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அதன் பணிப்பாளர் காந்தி ஆரியசிங்க தெரிவித்துள்ளதாவது,

பதிவு செய்யப்படாத வைத்திய நிலையங்கள் மற்றும் மருத்துவமனைகள் தொடர்பில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு எமக்கு சுகாதார அமைச்சு பணித்துள்ளது.

பதிவுகளை மேற்கொள்ளுமாறு அறிவித்தல்கள் விடுக்கப்பட்ட போதும் பலர் அதனை மேற்கொள்ளவில்லை.

எதிர்வரும் நாட்களில் பதிவுசெய்யப்படாத மருத்துவ நிலையங்கள் தொடர்பில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# கரையோர நிலப்பரப்பை விஸ்தரிக்கும் செயற்றிட்டம்

(கொழும்பு)

காலிமுகத்திடல் தொடக்கம் வெள்ளவத்தை வரையான கரையோர நிலப்பரப்பு 300 தொடக்கம் 400 ஏக்கர் வரை விஸ்தரிப்பதற்கான செயற்றிட்டம் நேற்று முன்தினம் பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. துறைமுக அபிவிருத்தி பிரதிய மைச்சர் ரோஹித அபேகுணவர்த்தன சமர்ப்பிக்கப்பட்ட இச்செயற்றிட்டம் ஐநூறு மீற்றர் வரையான கடலை உள்வாங்கும் விதத்தில் விஸ்தரிக்கப்படவுள்ளது.

இத்திட்டத்திற்காக சுமார் 300 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவாகும் எனவும் இதனைப் பூர்த்திசெய்ய 3 தொடக்கம் 5 ஆண்டுகள் வரையான காலம் செலவாகும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பிலான வள ஆய்வுகளை தற்போது துறைமுக அதிகார சபை மற்றும் மொரட்டுவ பல்கலைக்கழக விஞ்ஞானிகள் குழு என்பன இணைந்து ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றன.

(ஸ்ரீ-2)

# பயணிகள் பேருந்து விபத்து மூவர் பலி; 20 பேர் காயம்

(கொழும்பு)

பசறை நமுனுகுல பிரதேசத்தில் நேற்று முன்தினம் மாலை 3 மணியளவில் பயணிகள் பேருந்து ஒன்று விபத்துக்குள்ளாகியுள்ளது.

இதன் காரணமாக 3 பேர் பலியாகியுள்ளதாக பசறை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இதன்காரணமாக 20 பேர் வரை காயமடைந்துள்ளதாகவும் காயமடைந்தவர்களில் 12 பேர் பசறை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான பேருந்து பசறையில் இருந்து மேனகந்துரை வரை சேவையில் ஈடுபட்டதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஸ்ரீ-2)



யா/இருபாலை சி.சி.த.க.பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் அதிபர் உரையாற்றுவதையும் அருகில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பாரம்பரிய கைத்தொழில்கள் மற்றும் சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி அமைச்சர் கே.என்.டக்ளஸ் தேவானந்தா, சிறப்பு விருந்தினரான வலி.கிழக்கு கோப்பாய் பிரதேச செயலர் ம.பிரதீபன் மற்றும் கௌரவ விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.( படம்:-இருபாலை செய்தியாளர்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





DMI Computer Education இனால் யாழ்.புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்தில் நடாத்தப்பட்டு வரும் சிறார்களுக்கான கணனி பயிற்சி மையத்தில் பயிற்சியை நிறைவுசெய்த மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பாடசாலை அதிபர் அருட்சகோதரி மரியஜீவந்தி உரையாற்றுவதையும் யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் என்.சண்முகலிங்கன் மாணவி ஒருவருக்கு சான்றிதழ் வழங்குவதையும் சான்றிதழ் பெற்ற மாணவர்களுடன் விருந்தினர்கள் அமர்ந்திருப்பதையும் படங்களில் காணலாம்.

# தென்னிலங்கை வைத்தியசாலைகளைப் போன்று யாழ்.போதனா வைத்தியசாலையும் தரமுயர்த்தப்படும்

## சுகாதார அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

தென்னிலங்கையிலுள்ள பிரபல வைத்திய சாலைகளைப் போன்று யாழ்.போதனா வைத்தியசாலையும் தரமுயர்த்தப்படும் என சுகாதார அமைச்சின் மேலதிக செயலாளர் எஸ்.மகிபால தெரிவித்துள்ளார்.

யாழ்.போதனா வைத்தியசாலையில் புனரமைப்புச் செய்யப்பட்ட கண் சத்திரசிகிச்சை நிலையத்தை நேற்று முன்தினம் திறந்து வைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில்,

யாழ்.போதனா வைத்தியசாலையைத் தரமுயர்த்தும் நோக்குடன் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. அதன் ஒரு கட்டமாகவே இந்த கண் சிகிச்சை நிலையம் திறந்து வைக்கப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தில் உள்ளவர்களின் நலனைக் கருத்திற்கொண்டு நவீன முறையில் வைத்தியசாலை புனரமைப்புச் செய்யப்பட்டு வருவது அனைவரும் அறிந்ததே.

சுகாதார அமைச்சின் பணிப்பிற்கமைய 25 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமான செலவில் இந்த கண்சத்திர சிகிச்சை நிலையம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது.

இவைதவிர கண் பரிசோதனைக்காக அதி நவீன உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன. இவற்றின் பெறுமதி 10 இலட்சம் ரூபாவிற்கும் அதிகமாகும்.

மக்களின் தேவைகளைக் கருத்திற்கொண்டு இவ்வாறான அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ஸ்ரீ-6)

# தடகளப் போட்டி

பருத்தித்துறை பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பதிவு செய்யப்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலான தடகளப் போட்டிகள் இன்றும் நாளையும் காலை 6 மணிக்கு பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச செயலாளர் இரா.வரதீஸ்வரன் அறிவித்துள்ளார். (ஸ்ரீ-3-24)

# இசுறு பாடசாலை திட்டத்திற்கு கிழக்கு மாகாணத்தில் 105 பாடசாலைகள் தெரிவு

(கொழும்பு)

நாடுபூராகவும் உள்ள ஆயிரம் பாடசாலை நிர்வாக உட்கட்டமைப்பிற்கான அபிவிருத்திகள் மஹிந்த சிந்தனை திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்படவுள்ளன. இதற்கான விசேட கலந்துரையாடல் கல்வி அமைச்சர் பந்துல குணவர்த்தன தலைமையில் கடந்த புதன்கிழமை பாராளுமன்றக் கட்டடத் தொகுதியில் நடைபெற்றது.

இதில் அமைச்சர்கள், பாராளுமன்ற உறுப்பினர்கள், அனைத்து மாகாணங்களையும் சேர்ந்த கல்வி அமைச்சர்கள், மாகாணசபை உறுப்பினர்கள் கல்வி அதிகாரிகள் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.சந்திரகாந்தன் தலைமையில் வலயக் கல்விப் பணிப்பாளர்கள், அதிகாரிகளினால் கிழக்கு மாகாணத்திலுள்ள மிகவும் பின்தங்கிய பாடசாலைகள் பற்றிய விபரங்கள் முன்கூட்டியே சேகரிக்கப்பட்டிருந்தன. இவற்றில் கல்வி அமைச்சினால் 105 பாடசாலைகள் சிபாரிசு செய்யப்பட்டு தெரிவு செய்யப்பட்டன. (ஸ்ரீ-2)

# கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபன திட்டத்தில் அரசியல் நோக்கம் கிடையாது

## அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவிப்பு



(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றங்கள் தனித்து நின்று தீர்க்க முடியாத மக்கள் பிரச்சினைகளை கூட்டு முயற்சியாகத் தீர்த்துக் கொள்ளவே கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனம் உருவாக்கப்படவுள்ளதாகவும் அதில் அரசியல் நோக்கம் கிடையாதெனவும் சுற்றாடல் பாதுகாப்பு அமைச்சர் அநுரபிரியதர்ஷன யாப்பா தெரிவித்தார்.

அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பு நேற்று பிற்பகல் அரசாங்க தகவல் திணைக்களத்தில் நடைபெற்றபோதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இங்கு அவர் மேலும் கூறுகையில்,

தலைநகரில் நெருக்கமாக வாழும் மக்களுக்கு அடிப்படை வசதிகள் மற்றும் சிறந்த சுகாதார வசதிகளை வழங்கும் நடவடிக்கைகளை இலகுபடுத்தவே இப்புதிய திட்டம் அமுல்படுத்தப்படவுள்ளது. அபிவிருத்தியடைந்து வரும் இந்தியா மற்றும் சிங்கப்பூர் போன்ற நாடுகளில் இத்திட்டம் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

கொழும்பு-தெஹிவளை-கல்கிசை, ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டே-கொலொன்னாவ போன்ற மாநகர சபைகளும் கொட்டிகாவத்தை மற்றும் முல்லேரியா பிரதேச சபைகளும் இந்த கொழும்பு தலைநகர் கூட்டுத்தாபனத்திட்டத்தில் உள்வாங்கப்படும் என்றும் அமைச்சர் கூறினார். (ஸ்ரீ-2)




★1199 - இங்கிலாந்து மன்னன் முதலாம் ரிச்சார்ட் பிரான்சை முற்றுகையிடும் போது படுகாயமடைந்தான். 11 நாட்களின் பின்னர் இவன் இறந்தான்.

★1431 - பிரெஞ்சு வீராங்கனை 19 வயது ஜோன் ஒஃப் ஆர்க் மீதான முன் விசாரணைகள் ஆரம்பமானது.

★1552 - குரு அமர் தாஸ் சீக்கியரின் மூன்றாவது மதகுருவானார்.

★1812 - வெனிசுவேலாவின் கரக்காஸ் நகர் நிலநடுக்கத்தில் அழிந்தது.

★1871 - இலங்கையில் முதலாவது மக்கள் தொகைக் கணக்கெடுப்பு இடம்பெற்றது. 24 இலட்சத்து 5 ஆயிரத்து 287 பேர் பதிவாகினர்.

★1872 - கலிபோர்னியாவில் லோன் பைன் என்ற இடத்தில் 7.2 ரிக்டர் அளவு நிலநடுக்கம் பதிவு செய்யப்பட்டது.

★1917 - முதலாம் உலகப் போர்: காசாப் பகுதியில் இடம்பெற்ற முதலாவது சமரில் பிரித்தானியப் படைகளின் முன்னேற்றம் சுமார் 17,000 துருக்கியர்களால் தடுக்கப்பட்டது.

★1934 - ஐக்கிய இராச்சியத்தில் வாகன ஓட்டுநர்களுக்கான பரீட்சை அறிமுகப்படுத்தப்பட்டது.

★1942 - இரண்டாம் உலகப் போர்: போலந்தில் அவுஷ்லிட்ஸ் வதை முகாமில் முதற்தடவையாக பெண்கள் சிறைக்கைதிகளாயினர்.

★1945 - இரண்டாம் உலகப் போர்: ஜப்பானுடனான இவோ ஜீமா சண்டை முடிவுக்கு வந்ததாக ஐக்கிய அமெரிக்கா அறிவித்தது.

★1953 - ஜொனாஸ் சால்க் தனது போலியோ தடுப்பூசியை அறிமுகப்படுத்தினார்.

★1958 - ஐக்கிய அமெரிக்க இராணுவம் எக்ஸ்புளோரர் 3 விண்கலத்தை ஏவியது.

★1971 - கிழக்கு பாகிஸ்தான், பாகிஸ்தானிடம் இருந்து விடுதலையை அறிவித்தது. வங்காள தேச விடுதலைப்போர் ஆரம்பமானது.

★1979 - இஸ்ரேல்-எகிப்து அமைதி ஒப்பந்தம் வோஷிங்டனில் கைச்சாத்தானது.

★1997 - சுவர்க்கத்தின் வாயில் என்ற மதக் குழுவில் தற்கொலை செய்துகொண்ட 39 பேரின் உடல்கள் கலிபோர்னியாவில் கண்டெடுக்கப்பட்டன.

★1998 - அல்ஜீரியாவில் 2 அகவைக்குட்பட்ட 32 குழந்தைகள் உட்பட 52 பேர் கத்திகளாலும் வாள்களாலும் வெட்டப்பட்டுப் படுகொலை செய்யப்பட்டனர்.

★2006 - முதலாவது அறிவியல் தமிழ் மாநாடு சென்னையில் நடைபெற்றது.

★2006 - மியான்மாரின் புதிய தலைநகராக நாய்பிடோ என்ற புதிய நகரம் இராணுவ ஆட்சியாளர்களால் அறிவிக்கப்பட்டது.

★2007 - கொழும்பில் கட்டுநாயக்கா விமானப் படைத்தளம் மீது விடுதலைப் புலிகளின் விமானங்கள் தாக்குதல் நடத்தின.

### பிறப்புகள்

★1874 - றொபேட் ஃபுறொஸ்ட், அமெரிக்கக் கவிஞர் (இ. 1963)

★1913 - பால் ஏர்டோசு, அங்கேரிய கணிதவியலாளர். (இ. 1996)

★1916 - கிறிஸ்டியன் ஆன்பின்சன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர் (இ. 1995)

★1938 - அந்தனி லெகெட், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1940 - நான்சி பெலோசி, அமெரிக்க அரசியல்வாதி

★1941 - ரிச்சர்ட் டாக்கின்ஸ், படிவளர்ச்சி உயிரியலாளர்

★1951 - கார்ல் வைமன், நோபல் பரிசு பெற்ற அமெரிக்கர்

★1962 - ஜான் ஸ்டாக்டன், அமெரிக்கக் கூடைப்பந்து ஆட்டக்காரர்

### இறப்புகள்

★1827 - லுடுவிக் ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கிந்திய செவ்விசை இயற்றுநர் (பி. 1770)


★1892 - வால்ட் விட்மான், அமெரிக்கக் கவிஞர் (பி. 1819)



2000- விளாடிமீர் புடின் ரஷ்யாவின் ஜனாதிபதியாகத் தெரிவானார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆனந்தம் என்பது என்ன?



## ஆனந்தத்தின் ஆபத்து

எதற்காக மக்கள் மது அருந்துகிறார்கள்? ஏன் உறவில் இவ்வளவு ஈடுபாடு காட்டுகிறார்கள்? போதைப் பொருளை ஏன் தேடுகிறார்கள். சிலர் விளையாட்டு என்று கயிறு கட்டி மலை உச்சியிலிருந்து கீழே விழுகிறார்கள்... எதற்காக இத்தகைய அபாயகரமான செயல்களில் ஈடுபட வேண்டும்? வயிற்றில் வண்ணத்துப் பூச்சிகள் பறப்பது போன்ற உணர்வைப் பெறவா இத்தனை பிரயத்தனம்?

இதெற்கெல்லாம் என்ன காரணம் என்றால், வாழ்வை இன்னும் ஆழமாக அனுபவிக்க வேண்டுமென்ற உந்துதல் ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் உள்ளது. இந்த ஆழமான அனுபவத்திற்கான தேடல் அனைவரிடமும் உள்ளது. அதை அடைய அவர்கள் தொடர்ந்து முயன்று கொண்டிருக்கிறார்கள். இவர்கள் யோக மையத்திற்கு வந்தாலும் சரி; அல்லது மதுக் கூடத்தை நோக்கிச் சென்றாலும் சரி; வேறு எங்கே சென்றாலுமே இன்னும் ஆழமான அனுபவத்தைத் தேடித்தானே செல்கிறாங்கள், இல்லையா?

ஆனால் எங்கு சென்றாலுமே ஒரு ஆபத்து இருக்கிறது. மதுக் கடைக்குச் செல்லும்போதெல்லாம் வாழ்வில் எதையோ பணயம் வைக்கிறீர்கள். நீங்கள் யோக மையத்திற்கு வந்தால்கூட வாழ்வில் ஏதோ ஒன்றைப் பணயம் வைத்துத்தானே வருகிறீர்கள். துரதிர்ஷ்டவசமாக பெரும்பாலான மக்களுக்கு வலிதான் ஆழமான அனுபவமாக இருக்கிறது. வாழ்வில் ஆனந்தம் என்பதை மேலோட்டமானதாகவே அவர்கள் உணர்ந்திருக்கிறார்கள். ஆனால் வேதனையோ அவர்களின் ஆழமான அனுபவமாக உள்ளது.

இதனால்தான் கலைஞர்கள் பலர் துயரத்தை மையமாக வைத்தே தம் படைப்புக்களை உருவாக்குகிறார்கள். இசைக்கலைஞர்கள், ஓவியர்கள், நடனக்கலைஞர்கள் எப்போதுமே துயரத்தையே தங்கள் படைப்பின் கருவாகத் தேர்ந்தெடுக்கின்றனர். இது ஏன் என்றால், அவர்களின் ஆழமான அனுபவமாக வலிமட்டும்தான் உள்ளது.

ஆனந்தத்தை அதன் ஆழத்தில் அவர்கள் உணரவே இல்லை. துயரத்தினால் அவர்கள் படைப்பு இனிமையற்றது. இருந்தாலும் கூட அதில் ஆழமாவது உள்ளது. ஆழமான அனுபவம் தேடி எங்கு சென்றாலுமே வாழ்க்கையை பல வழிகளில் பணயம் வைத்துத் தானே செல்கிறீர்கள் இல்லையா?

## ஆனந்தமான முட்டாள்

ஆனந்தத்திற்கும் புத்திக்கும் என்ன தொடர்பு? நீங்கள் உங்களை உண்மையிலேயே ஆனந்தமாக வைத்துக் கொண்டால் நிச்சயமாக நீங்கள் புத்திசாலித் தனமான மனிதர்தான். ஏனென்றால் வாழ்வின் அடிப்படையான நோக்கத்தை நீங்கள் நிறைவேற்றிவிட்டீர்கள்.

ஆனந்தமாக இருப்பது என்பது இறுதியான நோக்கமாக இல்லாமல் இருக்கலாம்; ஆனால் அந்த அடிப்படையான நோக்கத்தையாவது நீங்கள் பூர்த்திசெய்து விட்டீர்கள்.

இந்த உலகத்தில் யாரைப் புத்திசாலியென்று கூறுவீர்கள்? யார் தான் செய்யநினைத்ததை வெற்றிகரமாகச் செய்து முடித்தாரோ எவர் ஒருவர் தனக்கென ஒரு பாதையைத் தேர்ந்தெடுத்து அதில் வெற்றியும் அடைந்தாரோ? யார் அவர் விரும்பிய விளையாட்டில் வெற்றியும் பெற்றாரோ? இவர்களைத்தானே நாம் புத்திசாலி என்கிறோம். ஆக ஒவ்வொரு மனிதனும் ஆனந்தமாக இருக்க முயற்சிக்கும் போது அவர்களில் ஒருவர் இயல்பாகவே ஆனந்தமாக இருந்தால் நிச்சயமாக அவர் புத்திசாலிதான்.

ஆனந்தமாக இருக்கும் இவர் முட்டாளாகச் சிலருக்குத் தோன்றலாம். ஆனந்தத்தில் திளைத்திருக்கும் இவர் தனக்கென ஒரு தொழில், பணம், நல்ல உடைகள் ... போன்ற இவைகளைப்பற்றிய கவலை இல்லாமல் இருக்கலாம். ஆனால் நல்ல உடை அணிந்து பெரும் பணம் சேர்த்து துளியும் ஆனந்தம் இல்லாத ஒருவர் இவரைப் பார்த்து கந்தல் உடைகளோடு தெருவில் ஆனந்தமாகச் சுற்றித்திரிகிறான் முட்டாள் என்று நினைக்கலாம். ஆனால் உண்மையான முட்டாள் யார் என்று உங்களுக்கே தெரியும்!

ஆனந்தமாக இருப்பதற்குத்தானே வாழ்வில் மிகவும் சிரமப்பட்டு பலவற்றைச் சேகரித்து வைத்தீர்கள். இப்போது ஆனந்தமாக இருக்கிறீர்களா? இல்லை தானே...? ஆக நீங்கள் முட்டாள்தானே...? யாரோ ஒருவர் எதுவுமே செய்யாமல் இயல்பாகவே ஆனந்தமாக இருக்கிறார். இவரா முட்டாள்? சமுதாயத்தின் பார்வை எப்படி வேண்டுமானாலும் இருக்கலாம். ஆனால் பிரபஞ்சத்தில் ஆனந்தமான மனிதனே உண்மையில் புத்திசாலியான மனிதன். ஆனால், உலகத்தில் ஆனந்தமற்ற மனிதர்கள் பலர் புத்திசாலி என்று பெயர் வாங்கி போயிருக்கிறார்கள். ஏனென்றால் இவர்கள் மனதில் பல துயரமான கேள்விகளும் குழப்பங்களும் நிறைந்திருந்தது.


துரதிர்ஷ்டவசமாக, தேவையற்ற இந்த மனக்குழப்பங்கள் உருவாக்கும் துயரமும் பாரமுமே புத்திசாலித் தனம் என்று போற்றப்பட்டுவிட்டது. ஆனால் இது புத்திசாலித்தனம் கிடையாது. உண்மையான புத்திசாலித்தனம் என்பது எண்ணங்கள் அற்ற நிலையில் முழுவதும் விழிப்பாய் இருப்பதே இந்த நிலையில் உங்கள் புத்திவேறு பரிமாணத்தில் இயங்கத் தொடங்குகிறது.

ஆன்மீகம் 05

சத்குரு ஜக்கி வாசுதேவ்

# இலங்கையில் தமிழியல் ஆய்வு: பண்பாடு

05



பேராசிரியர் அ.சண்முகதாஸ்

"கொழும்பில் நடைபெற்ற சர்வ தேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக்கட்டுரை"

ஈழத்தின் பண்டைய கோயிலாகிய திருக்கேதீச்சரம் பற்றி வி.சிவசாமி "திருக்கேதீச்சரம் மரபுகளும் ஐதீகங்களும்" (1976 என்னும் கட்டுரையை) எழுதியுள்ளார். சி.க.சிற்றம்பலம் "Cola Temples of Sri Lanka -A Study" (1985), "திருக்கோயில்கள்" (1985) என்னும் கட்டுரைகளை எழுதியுள்ளார். தங்கம்மா அப்பாக்குட்டி "ஆலயங்களும் ஆராதனைகளும்" (1986) என்னும் கட்டுரையினையும் பு.புஷ்பரட்ணம் "சோழர் கால மண்ணித் தலைச் சிவாலயம்" (1990) என்னும் கட்டுரையினையும் எழுதியுள்ளனர்.

யாழ்ப்பாணத்திலே பிரசித்தி பெற்ற கோயில்களினுடைய சிறப்புக்குரிய காரணம் என்னவென்பதைக் கா.சிவத்தம்பியின் "Divine Presence and Social Prominence-An Inquiry into the Social Role of the Places of Worship in Yalppanam Society"(1990) என்னும் கட்டுரை ஆராய, வி.சிவசாமி "யாழ்ப்பாணக் குடாநாட்டிலுள்ள பிரதான விநாயகர் ஆலயங்களும் வழிபாடும்" (1993) என்னும் கட்டுரையை எழுதியுள்ளார்.

கி.பத்மநாதனின் பின்வரும் வெளியீடுகள் கோயில்கள் பற்றியன: யாழ்ப்பாணத்தில் பிரசித்தி பெற்ற நல்லூர்க் கந்தசுவாமி கோயில் பற்றி "Murukar, The Divine Child: The Kantasami Temple at Nallur" (Lanka, 1990) என்னும் கட்டுரை ஆராய்கின்றது.

Temples of Siva in Sri Lanka (Ed. 1999) இலங்கையின் சிறப்பான இந்துக் கோயில்கள் பற்றிய கட்டுரைகளைக் கொண்டுள்ளது.

கோயிற் கிரியைகள் தொடர்பாகப் பல ஆய்வு வெளியீடுகள் வந்துள்ளன. இத்தகைய ஆய்வுகளின் தொடக்கமாகப் பேராசிரியர் கா. கைலாசநாதக் குருக்களின் சைவத் திருக்கோயிற்கிரியைநெறி (1963) என்னும் நூல் அமைகின்றது. பின்னர் தங்கம்மா அப்பாக் குட்டி அவர்களின் சைவக்கிரியைகளும் விரதங்களும் (1997) என்னும் நூல் வெளிவந்தது.

கோப்பாய் சிவத்தினுடைய சைவாலயங்கள்-கிரியைகள் ஒரு கையேடு (1986) என்னும் நூல் சுருக்கமாகக் கிரியைகள் பற்றிக் கூறுகின்றது. கோயில்களில் உயிர்ப்பலியிடல் பற்றி கலைவாணி இராமநாதன் "ஆலயமும் உயிர்ப்பலியும் பண்பாடு" (1998:19) என்னும் கட்டுரையினை எழுதியுள்ளார். "சமயச் சடங்குகள் உயிரோட்டமுள்ள வாழ்க்கைப் படிமங்கள்" என்னும் கட்டுரையினை இரா.வை. கனகரத்தினம் பண்பாடு (1999:21) இதழில் எழுதியுள்ளார்.

### 2.1.3 சைவசித்தாந்தம்

சைவசித்தாந்த ஆய்வுகள் பன்னெடுங்காலமாக இலங்கை அறிஞர்களாலே மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளது. 1964க்குப் பின்னர் வெளிவந்த ஆய்வுகளின் விபரம் இங்கு தரப்படுகின்றது. பண்டிதர் மு.கந்தையாவினுடைய சித்தாந்தச் செழும் புதையல்கள் 1978 இல் வெளியாயிற்று.

அவர் சிவஞானசித்தித் திறவுகோல் (1992), சைவசித்தாந்த விளக்க விருத்தியியல் யாழ்ப்பாண அறிவியல் மேதையின் சுவடுகள் (1994) என்னும் நூல்களையும் எழுதியுள்ளார். பண்டிதமணி ச.கணபதிப்பிள்ளையின் அத்வைத சிந்தனை 1985 இல் வெளியிட்டு அவர் சைவசிந்தாத்தக் கருத்தினைப் பண்டைத் தமிழர் இலக்கியக் கோட்பாடாகிய அன்பினைந்திணை (1983) என்னும் நூலையும் எழுதியுள்ளார்.

இ.சுப்பிரமணியம் அவர்களின் வேதாந்தத் தெளிவாம் சைவசித்தாந்தம் என்னும் நூல் 1987இல் வெளியிடப்பட்டது. தொடர்ந்து கலைவாணி இராமநாதனின் வேத பாரம்பரியமும் சைவ சித்தாந்தமும் (1992), திரு.ம. ஞானசம்பந்தப் பிள்ளையின் சைவசிந்தாந்த விளக்கம் (1993), மு.ஞானப்பிரகாசம் அவர்களின் Sankhya Thought -A Saiva View Point (1994) இரா.ஞானகுமரனின் சைவசித்தாந்தத் தெளிவு (1994) என்னும் நூல்கள் வெளிவந்தன. காசிவாசி செந்திநாதையர் என்றொரு தொகுப்பு நூல் 1978 இல் வெளியிடப்பட்டது.

சைவசித்தாந்த அடிப்படைக் கோட்பாடு ஊடுபாவாக அமைய தன்னாத்மாவைத் தேடி அலையும் மனிதன் என்னும் நூல் 1994 இல் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வெளியீடாக வந்தது.

உளமருத்துவத்துறைத் தலைவர் கலாநிதி தயாசோமசுந்தரம் பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரையாக வழங்கியதே இந் நூலாக வடிவம் பெற்றது.

சோ. கிருஷ்ணராஜாவால் "சைவ சித்தாந்த அறிவுக் கொள்கை-காட்சி" (1976), "நீலகண்ட பாஷ்யத்தில் முப்பொருள் உண்மை" (1990), "மெய்கண்ட சாத்திரங்களுக்கு முற்பட்ட சைவசித்தாந்த அறிவாராய்ச்சியியல் -ஓர் அறிமுகம்" (1993) ஆகிய கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன. கலைவாணி இராமநாதன் "நாவலரும் சைவசித்தாந்தமும்" (1983) என்னும் கட்டுரை எழுதியுள்ளார். நா.சுப்பிரமணியனின் "சைவசித்தாந்த சிந்தனை மரபு" 1994 இல் பேராசிரியர் செல்வநாயகம் நினைவுப் பேருரையாக வழங்கப்பட்டது.

நா.ஞானகுமாரனின் "சுயாதீன சித்தமும் சைவசித்தாந்தமும்" (1993) " Concept of Brahman According to Sankaracarya" (1993), என்பனவும் இத்துறை சார்ந்தன. பண்டிதர் மு.கந்தையாவின் "ஈழத்துச் சைவசித்தாந்த தொன்மை மேன்மைகள்" (1995) என்னும் கட்டுரையும் வெளிவந்துள்ளது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அ.தி.மு.க.வுடன் கூட்டணி வைத்ததால் ஏற்பட்ட பழி துடைக்கப்பட்டுவிட்டது

## ம.தி.மு.க.பொதுச்செயலாளர் வைகோ விகடனுக்கு செவ்வி

ம.தி.மு.க பொதுச் செயலாளர் வைகோ ஆனந்த விகடன் இதழுக்கு வழங்கிய நேர்காணல் இங்கு தரப்படுகிறது.

'பல்வேறு கட்சிகள் வருவதால் 23 தொகுதிகளாவது ஒதுக்கச் சொன்னோம். 7 தொகுதிகள் தருவதாகச் சொன்னார்கள். அதன் பின்னர், 8தொகுதிகள் தருவதாகச் சொன்னார்கள். பின்னர் அவர்களே, 8 தொகுதிகள் தர முடியாது, 7 தொகுதிகள் தான் முடியும் என்றார்கள். பின், 8 தொகுதிகள் தர முடியும் என்றார்கள். அதன் பின்னர் 9 இடங்கள் தருவதாகச் சொல்லி, கையெழுத்து போட வரச் சொன்னார்கள்.

ஜெயலலிதா சொல்லி அனுப்பிய எண்ணிக்கைகள் அவரது மன ஊசலாட்டத்தைக் காட்டுவதாக மட்டும் இல்லை. எதைச் சொன்னால் நான் ஏற்க மாட்டேனோ, அதைச் சொல்லி என்னைக் கோபப்படுத்த நினைத்தார். நானாகவே வெளியேறிவிடுவேன் என்று திட்டமிட்டார்.

'நீ இன்னுமா இருக்கிறாய்?' என்று ஜெயலலிதா கேட்பதுபோல இருந்தது. எங்களுக்கும் அவருக்குமான பிரச்சினைக்கு எண்ணிக்கை காரணம் அல்ல... எண்ணமே காரணம்!

**"ஜெயலலிதாவுக்கு உங்கள் மீது கோபம் வர என்ன காரணம்?"**

"2006ஆம் ஆண்டு அ.தி.மு.க-வுடன் கூட்டணிவைக்கும் முடிவைக் கனத்த இதயத்துடன் நான் எடுத்தேன். பொடாவில் என்னை 19 மாதங்கள் சிறைவைத்த ஜெயலலிதாவுடன் அணி சேரத் தயங்கினேன். ஆனால், குறைவான இடங்களை கலைஞர் ஒதுக்கினார். எனவே, அ.தி.மு.க. கூட்டணி தான் சரியானது என்று கட்சி முன்னணியினர் முடிவெடுத்தார்கள். அதற்கு, நான் கட்டுப்பட்டேன்.

அப்போது நான், 'அரங்கேற்றம்' படத்தின் கதாநாயகி, தனது தம்பியைப் படிக்க வைக்கக் கெட்டுப்போவதைப் போல, கட்சி நலனுக்காக இதற்கு உடன்படுகிறேன்!" என்றேன். அ.தி.மு.க. கூட்டணிக்கு என்னைக் கட்டாயப்படுத்தி அழைத்துப் போனவர்கள் இன்று தி.மு.க-வில் போய்ச் சேர்ந்துவிட்டார்கள்!

அந்த சட்டமன்றத் தேர்தலில், அடுத்து வந்த உள்ளூராட்சித் தேர்தலில், சட்டமன்ற நடவடிக்கைகளில், இடைத் தேர்தல்களில் எல்லாம் அ.தி.மு.க-வுடன் எந்த முரண்பாடும் இல்லை. நாடாளுமன்றத் தேர்தலில் நாங்கள் கேட்காத நெல்லை, தஞ்சாவூரை ஜெயலலிதா ஒதுக்கினார். போராடித்தான் நான்கு தொகுதிகள் வாங்கினேன். அதிலும் நாங்கள் கேட்காத நீலகிரி, தஞ்சையைத் தந்தார். கொடுத்ததை வாங்கிக்கொள்ளவில்லை என்ற கோபத்தில், தீவுத்திடல் கூட்ட மேடையில் என்னிடம் ஜெயலலிதா பேசவில்லை. அன்று அவரது வீட்டில் விருந்துக்கு ஏற்பாடு செய்யப்பட்டது. நான் போனேன். வாசலில் முறையான வரவேற்பு இல்லை. ஆனால், மற்ற தலைவர்களை வாசலில் வந்து வரவேற்று அழைத்துச் சென்றிருப்பதை ஜெயா டி.வி-யில் பார்த்தபோது, 'இந்த சோற்றைத்தின்றிருக்க வேண்டாம்!' என்று நினைத்தேன். அது தனிப்பட்ட வைகோவுக்கு இழைக்கப்பட்ட அவமானம். தாங்கிக்கொண்டேன். ஆனால், இன்று, 6, 7, 8, 9... என்பது ம.தி.மு.க - வுக்கு ஏற்பட்ட அவமானம். என்னைவிட இயக்கம் தான் பெரிது.

சிறையில் இருப்பது மட்டும் தியாகம் அல்ல. நிந்தனைக்கும் பழிக்கும் ஆளாகும் நிலையை எடுப்பதும் தியாகம்தான். அதன் பின்னரும் அவமானம்தான் பரிசு என்றால், ஏன் அதைத் தாங்கிக் கொள்ள வேண்டும்?"



**"குறைவாக இருந்தாலும், வெற்றி பெறும் தொகுதிகளை வாங்கி, அதில் மட்டும் நின்று இருக்கலாமே?"**

"21 இடங்கள்... அதுவும் நாங்கள் கேட்ட இடங்கள் கொடுத்தாலும் ஜெயலலிதாவுடன் கூட்டணி சேர்ந்து போட்டியிடுவது தவறு என்பதைக் கடந்த 10 நாட்களின் சம்பவங்கள் எனக்கு உணர்த்திவிட்டன!

48 ஆண்டுகள் பொது வாழ்க்கை உடையவன் நான். திராவிட இயக்கத்தின் வழித்தோன்றல் நான். இந்த அனுபவத்தில் சொல்கிறேன். 'ஜெயலலிதா இன்னும் திருந்தவில்லை... திருந்தவும் மாட்டார்' என்பதை இந்த 10 நாட்கள் உணர்த்திவிட்டன. ஜெயலலிதாவின் அணுகுமுறையில், காலம் தந்தபடிப்பினைகளால் மாற்றம் ஏற்பட்டு இருக்கும் என்று நம்பியது முற்றிலுமாகப் பொய்த்துவிட்டது. அவருடைய போக்கிலும் அணுகுமுறையிலும் எத்தகைய மாற்றமும்



ஏற்படவில்லை. அகந்தையும், ஆணவமும், தன்னிச்சையான அணுகுமுறையும், இன்னமும் போகவில்லை. அவருடன் இணைந்து கூட்டணியில் தொடர்வதும் வாக்காளர்களைச் சந்திப்பதும் எந்த வகையிலும் சரியானது அல்ல.

ம.தி.மு.க.-வைச் சேர்ந்தவர்கள் சட்டமன்ற உறுப்பினர்களாக ஆக வேண்டும் என்பதற்காக, திருந்தாத ஜெயலலிதாவுக்கு நான் வாக்கு கேட்டுச் செல்வது, 'வைகோ நல்லவன் என்று நம்பும் தமிழ் மக்களுக்குச் செய்யும் மாபெரும் துரோகம். என்னுடைய மனசாட்சிக்குச் செய்யும் துரோகம். தேர்தலில் வெற்றி பெறுவதற்கு முன்பே, இவ்வளவு ஆணவம் தலை தூக்குமானால், இப்படிப்பட்டவர் கையில் ஆட்சி போனால் என்ன ஆகும்? முதலமைச்சர் நாற்காலியில் உட்கார்ந்த ஜெயலலிதா செய்யும் தவறுகளைக் கண்டிக்க, பிரசாரம் செய்ய எனக்கு யோக்கியதை உண்டா? உன்னைச் சேர்ந்தவர்களை எம்.எல்.ஏ ஆக்க, ஜெயலலிதாவை நல்லவர் என்று சொல்லி, எங்களை முட்டாள் ஆக்கினீர்களா?' என்று பொதுமக்கள் கேட்க மாட்டார்களா?

என்னைப் பொறுத்தவரையில், மக்களின் நம்பகத்தன்மையை மட்டும்தான் சொத்தாக நினைக்கிறேன்!"

**"மூன்றாவது அணியாவது அமைக்க முயற்சித்து இருக்கலாமே?"**

"தமிழகத்தைப் பொறுத்தவரை மூன்றாவது அணி சாத்தியம் இல்லை. பண பலம்கொண்ட இரண்டு அணிகளை எதிர்த்தால், மூன்றாவது அணி... மூன்றாவது இடத்தில்தான் வரும்!"

**"தனியாக நிற்பது...?"**

"ஒரு தரப்பை வீழ்த்த, இன்னொரு தரப்பிடம் பணம் வாங்கினேன் என்ற பழிச் சொல் மட்டும்தான் அதனால் கிடைக்கும்!"

**தேர்தல் அரசியலில் நம்பிக்கை கொண்ட ஒரு கட்சி தேர்தலைப் புறக்கணிப்பது சரியானது அல்லவா?"**

"நாங்கள் இந்தத் தேர்தலை மட்டும்தான் புறக்கணித்து இருக்கிறோம். இனி, தேர்தலில் நிற்கவே மாட்டோம் என்று சொல்லவில்லையே! ஒரு குழப்பமான சூழ்நிலை ஏற்பட்டபோது, மேற்கு வங்கத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி ஒரு தேர்தலில் பங்கேற்கவில்லை. சூழ்நிலைகளைச் சரிப்படுத்தி, கட்சியைப் பலப்படுத்திவிட்டு தேர்தலைச் சந்தித்தது. சீனாவில் மாசேதுங், தனது செம்படையைத் திடீரென்று கலைத்தார். எல்லோரும் இதைக் கடுமையாகக் கண்டித்தார்கள். ஆனால், ஓர் ஆண்டுக்குப் பின்னர் மீண்டும் அதை உருவாக்கி வென்று காட்டினார்.

ஒரு பக்கம்... தன்னுடைய சுயநலத்தால் தி.மு.க-வைக் கபளீகரம் செய்து தமிழினத்தைக் காட்டிக் கொடுத்த கருணாநிதி, இன்னொரு பக்கம் ஆணவப் போக்குகொண்ட ஜெயலலிதா - இந்த இருவர் மீதும் கோபம்கொண்ட பொதுமக்கள்தான் நாட்டில் அதிகம். அந்த வெற்றிடத்தை நாங்கள் நிரப்புவோம். எனக்கு அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும், 'தன்மானத்தை இழந்துவிடாதீர்கள்... சுயமரியாதையை இழந்துவிடாதீர்கள்!' என்றே சொல்கின்றன. இழக்கவில்லை என்பதைத் தேர்தல் புறக்கணிப்பு மூலம் நிரூபித்து இருக்கிறேன்!"

**"பதவிகள், பொறுப்புகளுக்காக கட்சிக்குள் வருபவர்கள் ஏமாந்து போவார்கள். கட்சி மாறிவிடுவார்களே?'**

"எல்லா சூழ்ச்சிகளையும் தாண்டித்தான் ம.தி.மு.க இயங்கிக் கொண்டு இருக்கிறது. இலட்சங்களைக் காட்டி பொதுக் குழு உறுப்பினர்க ளைப் பிரித்து, 'நாங்கள்தான் உண்மையான ம.தி.மு.க' என்று ஒரு கும்பல் சதித் திட்டம் தீட்டியபோதே, எங்கள் உறுப்பினர் எவரும் போகவில்லை. இலட்சியத்தைப்பற்றி நான் பேசுவதால் மட்டுமே அவர்கள் இருக்கிறார்கள்!"

**"யாருக்கு வாக்களிப்பது என்பதைச் சொல்வீர்கள் தானே?"**

"ம.தி.மு.க தொண்டனின் மனசாட்சியே அதை முடிவு செய்யும்!"

**"இத்தனை ஆண்டு காலப் பொது வாழ்வில் இந்த இரண்டு வாரங்களில் நீங்கள் பெற்ற படிப்பினை என்ன?"**

"சிகாகோவில் உள்ள மே நாள் நினைவு அரங்கில், 'மௌனம் சில வேளைகளில் சப்தத்தைவிட வன்மையானது' என்று எழுதப்பட்டுள்ளது. ஒரு பேச்சாளனான நான், இது சத்தியமானது என்பதை உணர்ந்து கொண்டேன். இந்த இரண்டு வாரமும் நான் மௌனமாக இருந்தேன். ஆனால், ஆயிரம் கூட்டங்கள் பேசினால் கிடைக்கும் பெருமையையும், நற்பெயரையும் இந்த மௌனம் எனக்கு வாங்கித் தந்திருக்கிறது. கடந்த முறை அ.தி.மு.க-வுடன் கூட்டணிவைத்ததால், பழிக்கு ஆளானேன். அந்தப் பழி துடைக்கப்பட்டுவிட்டது. காலம் எனக்குச் செய்திருக்கும் அருட்கொடை இது!"

**"என்றும் நான் உங்கள் அன்புச் சகோதரிதான்!' என்று ஜெயலலிதா ஒரு கடிதம் அனுப்பியிருக்கிறாரே?"**

"ம.தி.மு.க-வுக்கு ஒதுக்க வேண்டிய தொகுதிகளுக்கும் சேர்த்து வேட்பாளர் பட்டியலை அறிவித்ததும் அதே அன்புச் சகோதரிதானே! ம.தி.மு.க. நடத்தப்பட்ட விதம் குறித்து, பொதுமக்கள் மத்தியில் கோபமும் அ.தி.மு.க. தொண்டர்கள் மத்தியில் எனக்கு ஏற்பட்ட அனுதாபத்தையும் பார்த்துப் பயந்துபோன ஜெயலலிதா, இப்படி ஒரு கடிதத்தை அனுப்பி நீலிக் கண்ணீர் வடிக்கிறார்!"

**"இந்தத் தேர்தல் களத்தில் நீங்கள் இல்லை... வருத்தமாக இல்லையா?"**

"தேர்தலுக்குப் பின்னர் நிச்சயம் இருப்போம்!"

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும்

## ஜனாதிபதி தெரிவிப்பு



(கொழும்பு)

நாட்டில் நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்று ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்தார்.

மாத்தறை பாலட்டுவ குணரத்ன மகா வித்தியாலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தை ஜனாதிபதி நேற்று முன்தினம் உத்தியோகபூர்வமாக அங்குரார்ப்பணம் செய்து வைத்து, உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில், ஆசிரியர்கள் கற்பித்தலில் மேலும் கவனம் செலுத்தினால் பிரத்தியேக வகுப்பு யுகத்துக்கு முற்றுப்புள்ளிவைக்க முடியும்.

பாடசாலை கல்விக்குப்பின் பல்கலைக் கழக வாய்ப்புக்கிட்டாத 95 வீதமான மாணவர்களின் எதிர்காலத்தை சுபீட்சமாக்குவதற்கான வேலைத்திட்டங்களை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

நாடளாவிய ரீதியில் 45 ஆயிரத்திற்கு மேற்பட்ட ஆசிரியர்நியமனங்களை அரசாங்கம் வழங்கியுள்ளபோதும் தற்போது நிலவும் ஆசிரிய வெற்றிடங்களை நிரப்ப உரிய நடவடிக்கை எடுக்கப்படும். கற்பித்தலில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டால் மாத்திரமே சர்வதேச மட்டத்திற்கு மாணவர்களை உருவாக்க முடியும்.

பாடசாலை கற்பித்தலில் குறைபாடுகள் இருப்பதால்தான் மாணவர்கள் பிரத்தியேக வகுப்பு செல்கின்றனர். கற்பித்தலில் ஆசிரியர்கள் மென்மேலும் கவனம் செலுத்துவது அவசியம்.

அரசாங்கம் பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற துறைகளுக்கு வழங்கும் முக்கியத்துவத்தைப் போன்றே கல்விக்கும் முக்கியத்துவமளிக்கின்றது. அதற்காக பெருந்தொகை நிதியையும் செலவிட்டு வருகிறது. பாடசாலைகளை முன்னேற்றுவதில் நாம் கூடுதல் கவனம் செலுத்தி வருகிறோம். ஆசிரியர் பற்றாக்குறை பற்றி பேசப்பட்டாலும் தற்போதுள்ள ஆசிரியர்களை முறையாக பகிர்ந்தால் இப்பிரச்சினைக்குத் தீர்வு கிட்டும் என்பது எனது நம்பிக்கை.

நாம் தேசிய மட்டத்தில் மட்டுமன்றி உலக தரத்துக்கு எமது மாணவர்களை உருவாக்க வேண்டிய தேவையுள்ளது என்பதை ஆசிரியர்கள் கருத்திற்கொண்டு கற்பித்தலை மேற்கொள்வது அவசியம் என்றார். (ஸ்ரீ-2)

# 24ஆவது ஆண்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும்

(புன்னாலைக்கட்டுவன்)

குப்பிளான் தெற்கு மயிலங்காடு ஞான கலா சனசமூக நிலையத்தின் 24 ஆவது ஆண்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும் இன்று சனிக்கிழமை இரவு 7 மணிக்கு சனசமூக நிலைய முன்றலில் நடைபெறும்.

இந்நிகழ்வின் பிரதம விருந்தினராக புன்னாலைக்கட்டுவன் இராணுவத்தளபதி, சிறப்பு விருந்தினர்களாக கருமாரி ஆலயத் தலைவர் வி. தங்கராசா, வலிகாம கொத்தணித் தலைவர் கே. மெய்யழகன், இச்சன சமூக நிலைய விளையாட்டுக்கழகத் தலைவர் பி. தவராசா மற்றும் செயலாளர் ரி.சதீஸ் குமார், முன்பள்ளி ஆசிரியர்களான எஸ். ராதா மற்றும் செல்வி எஸ்.ரஞ்சிதா, ஞான வைரவர் ஆலய பரிபாலன சபைத் தலைவர் பி. உதயகுமார் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர்.

அத்துடன் பரிசளிப்பு விழாவும் இரவு கலை நிகழ்ச்சிகளும் நடைபெறவுள்ளன. (ஸ்ரீ-2-78)

# கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரி அறவிடப்படுவதால் வடபகுதி மக்கள் பாதிப்பு

## சிறிதரன் எம்.பி.தெரிவிப்பு


கையடக்கத் தொலைபேசிகளுக்கு வரி அறவீடு செய்யப்படுவதனால் வடக்கு மக்கள் அதிகம் பாதிக்கப்படுவதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன் தெரிவித்துள்ளார்.

வடக்கு- கிழக்கில் நிலையான தொலைபேசிகளின் பயன்பாட்டை விடவும் கையடக்கத் தொலைபேசிகளின் பயன்பாடு அதிகம் என அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கையடக்கத்தொலைபேசிகளுக்கு கட்டணம் அறவீடு செய்வதனால் வடக்கு- கிழக்கு மக்கள் அதிகம் பாதிக்கப்படலாம் என அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை இந்திய மீனவர்கள் தலைமன்னாரில் மீன்பிடியில் ஈடுபட்டு வருவதாக குறிப்பிட்ட அவர், சிங்கள மீனவர்கள் சுதந்திரமான மீன்பிடியில் ஈடுபட்ட போதிலும் தமிழ் மீனவர்கள் சுதந்திரமாக மீன்பிடிப்பதில் சிக்கல் நிலைமை காணப்படுவதாக தெரிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# முன்னாள் பிரதம நீதியரசருக்கு எதிரான வழக்கு தள்ளுபடி



(கொழும்பு)

முன்னாள் பிரதம நீதியரசர் சரத் என் சில்வாவிற்கு எதிராக தொடுக்கப்பட்டிருந்த வழக்கினைநீதிமன்றம்தள்ளுபடிசெய்துள்ளது.

முன்னாள் பிரதம நீதியரசர் தமது அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்ததாகவும் சொந்தப் பகையை தீர்த்துக்கொள்ள முயற்சித்ததாகவும் தெரிவித்து அடிப்படை உரிமை மீறல் மனுதாக்கல் செய்யப்பட்டிருந்தது.

கண்டி பஹிரவகந்த பிரதேசத்தைச் சேர்ந்த பி.கே.ஏ.பத்மசிறி பாலசூரிய என்பவரினால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

சட்டத்திற்கு முரணான வகையில் சரத் என் சில்வா கைது செய்து தடுத்து வைத்திருந்ததாக பாலசூரிய குற்றம் சுமத்தியிருந்தார். எவ்வாறெனினும் குறித்த குற்றச்சாட்டுக் கள் அடிப்படையற்றவைஎனத்தெரிவித்துநீதிமன்றம் வழக்கை தள்ளுபடி செய்துள்ளது. (ஸ்ரீ-2)

# மூத்தபிரஜைகள் அனைவருக்கும் முதியோர் அடையாள அட்டை

## சமூக சேவைகள் அமைச்சு நடவடிக்கை

(கொழும்பு)

முதியோர் அடையாள அட்டையை நாடளாவிய ரீதியில் மூத்தபிரஜைகள் அனைவருக்கும் வழங்க நடவடிக்கை எடுக்கப் பட்டுள்ளதாக சமூக சேவைகள் அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

நாடு பீலிக்ஸ் முழுவதும் 10 ஆயிரம் கிராமிய முதியோர் சங்கங்கள் உள்ளதாகவும் இது தவிர 206 பிரதேச சங்கங்கள், 17 மாவட்ட முதி யோர் 4 மாகாண முதியோர் சங்கங்கள் என் பனவும் காணப்படுகின்றன.

முதியோருக்கு வழங்கப்படும் முதியோர் அடையாள அட்டைகள் அனைத்து அரச நிறுவனங்களிலும் ஏற்றுக் கொள்ளப்படும் என மேலும் தெரிவித்தார். பாராளுமன்றத்தில் சாந்த பண்டார எம்.பி எழுப்பிய கேள்விக்கு பதில் அளிக்கும் வகையில் அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார். (ஸ்ரீ-2)

# மேல்முறையீட்டு நீதிமன்ற பதில் தலைவர் நியமனம்

மேல் முறையீட்டு நீதிமன்றத்தின் சிரேஷ்ட நீதியரசர் எஸ்.சிறிஸ்கந்தராஜா மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் பதில் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ முன்னிலையில் அவர் நேற்று முன்தினம் சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார். (ஸ்ரீ-2)



# கொழும்பு மாவட்டத்தில் வாக்காளர் மோசடி மேலதிகமாக 40 ஆயிரம் பேர் பதிவு

கொழும்பு மாவட்டத்தில் சுமார் 40 ஆயிரம் வாக்காளர்கள் மேலதிகமாக பதிவு செய்யப் பட்டுள்ள மோசடி கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் தினேஷ் குணவர்தன பாராளுமன்றத்தில் தெரிவித்துள்ளார்.

தேசிய அடையாள அட்டை வாக்களிப் பதற்கு கட்டாயமாக்கப்பட்டதன் பின்னர் இந்த மோசடி கண்டுபிடிக்கப்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டார்.ஐ.தே.க.எம்.பி.ஜோன் அமர துங்க நேற்று முன்தினம் சபை ஒத்தி வைப்பு வேளை பிரேரணையில் கலந்து கொண்டு பேசும்போது இந்தியாவைப் போன்று இலத் திரனியல் வாக்களிப்பு முறையை ஏன் கொண்டுவர முடியாது? இப்போது வாக் களிப்பில் முறைகேடுகள் நடைபெறுகின்றன த் தெரிவித்தார். இதற்குப் பதிலளிக்கும் வகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இலத்திரனியல் வாக்களிப்பு முறையை கொண்டுவருவதற்கு முயற்சித்தோம். ஐ.தே.க அதனை விரும்பவில்லை. இது தொடர்பாக நான் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்துக்கு பல தடவைகள் ஏறி இறங்கினேன். எனினும் நீங்கள் எவரும் ஆதரவளிக்கவில்லை.

இதேபோன்று தேசிய அடையாள அட்டையை வாக்களிப்பதற்கு கட்டாயமாக்கும் ஆலோசனை முன்வைக்கப்பட்டபோதும் ஐ.தே.க.அதற்கும் எதிர்ப்பை தெரிவித்தது. எனினும் வாக்களிக்கும் போது அடையாள அட்டை கட்டாயமாக சமர்ப்பிக்கவேண்டும் என்ற திருத்தம் அரசினால் கொண்டுவரப்பட்டதன் பின்னர் கொழும்பு மாவட்டத்தில் மட்டும் 40 ஆயிரம் வாக்காளர்களை மேலதிகமாக பதிவு செய்யப்பட்டிருந்த மோசடி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது என்றும் கூறினார். (ஸ்ரீ-2)

# கூட்டம்

(யாழ்ப்பாணம்)

வட்டுக்கோட்டை ஸ்ரீ கணேச வாசிக சாலையின் வாசகர் வட்டத்தினால் சமூக கலாசார மேற்பாட்டிற்கான விழிப்புணர்வூட்டும் கூட்டம் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3.30 மணிக்கு இச்சனசமூக நிலைய கேட்போர் கூடத்தில் தலைவர் மு.க.மாசிலாமணி தலைமையில் நடைபெறும் (ஸ்ரீ-2)

# சான்றிதழ் வழங்கும் நிகழ்வு

(யாழ்ப்பாணம்)

லண்டன் வர்த்தக சங்கம் மற்றும் யாழ். பல்கலைக்கழகத்தின் ஏற்பாட்டில் தொழில் வாய்ப்பு திறமை மேம்பாட்டு பாடத்திட்டத்தினை பூர்த்தி செய்த 100மாணவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் நிகழ்வு இன்று பிற்பகல் 3மணிக்கு யாழ். பல்கலைக்கழக கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக இலங்கை மற்றும் சென்னை மகாபோதி சங்கத்தலைவர் வானதல உபதிஸ்ஸதேரர் கலந்து கொள்ளவுள்ளார். (ஸ்ரீ-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாற்பொருட்கள், காய்கறிகள், குடிநீர் அனைத்திலும் கதிர்வீச்சு கலப்பு

## திண்டாட்டத்தில் ஜப்பான் மக்கள்



(டோக்கியோ)

ஜப்பானின் புகுஷிமா அணு மின் நிலையத்தில் இருந்து வெளியேறும் கதிர்வீச்சு குடிநீர் குழாய்களில் கலந்துள்ளதால் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரை மக்கள் பயன்படுத்துகின்றனர். இதனால் தண்ணீர் போத்தல்களுக்கு ஜப்பானில் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

புகுஷிமா அணு மின் நிலையத்தில் உள்ள ஆறு உலைகளுக் கும் தற்போது மின் இணைப்பு கொடுக்கப்பட்டு அதன் மூலம் நீரை உட்செலுத்தி குளிரூட்டும் முறைகள் நடந்து வருகின்றன.

இந்நிலையில் அணு உலைகளில் இருந்து தொடர்ந்து வெளியேறி வரும் கதிர்வீச்சு 240 கி.மீ. தெற்கில் உள்ள டோக்கியோ நகரம் வரை பரவியுள்ளது. குழந்தைகளுக்கான எச்சரிக்கை அளவை விட குடிநீரில் இரண்டு மடங்கு கதிர்வீச்சு அயோடின் கலந்திருப் பது கண்டறியப்பட்டுள்ளது.

இதையடுத்து குழாயில் வரும் குடிநீரை குழந்தைகளுக்கு வழங்க வேண்டாம் என எச்சரிக்கை விடப்பட்டது. இதனால் டோக்கியோ உள்ளிட்ட நகரங்களில் மக்கள் போத்தல்களில் அடைக்கப்பட்ட தண்ணீரை பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில் நேற்று முன்தினம் பல நகரங்களில் தண்ணீர் போத்தல்கள் கிடைக்காததால் மக்கள் அவதிக்குள்ளாயினர். புகுஷிமா அணு மின்நிலையத்தில் கேபிள்களை பதிக்கும் பணியில் ஈடுபட்டிருந்த மூன்று ஊழியர்கள் அதிகப்படியான கதிர்வீச்சு தாக்குதலால் பாதிக்கப்பட்டனர். இவர்கள் தற் போது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

கீரை உள்ளிட்ட காய்கறிகளிலும் கதிர்வீச்சு கலந்திருப்பதால் பாற்பொருட்கள் , காய்கறிகள், பழங்கள் ஆகிய உணவுப் பொருட்களை இறக்குமதி செய்ய அமெரிக்கா, கனடா , அவுஸ்திரேலியா, ரஷ்ய நாடுகள் தடை விதித்துள்ளன. (ஸ்ரீ-2)

## சிக்கன நடவடிக்கை தோல்வி போர்த்துக்கல் பிரதமர் ராஜினாமா

(லிஸ்பன்)

பொருளாதார நெருக்கடியால் நாடு தள்ளாடுவதாக எழுந்த புகாரையடுத்து போர்த்துக்கல் பிரதமர் ஜோஸ் சாக்ரட்டீஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார். அதிபருடன் அனிபால் கேவ கோ சில்வாவுடனான 20 நிமிட சந்திப்பிற்கு பின் பேசிய பிரதமர் ஜோஸ் சாக்ரட்டீஸ் நாட்டில் சிக்கன நடவடிக்கையினால் மட்டுமே பொருளாதார வீழ்ச்சியிலிருந்து காப்பாற்றமுடியும் என வலியுறுத்தினேன். எனினும் ஐரோப்பிய யூனியன் கடும் நிதி நெருக்கடியைச் சந்தித்து வரும் வேளையில் நான் கொண்டு வந்த சிக்கன நடவடிக்கைத் திட்டத்தை நாடாளுமன்றத்தில் எதிர்க்கட்சிகள் நிராகரித்தன என்றார்.

இதனால் பிரதமர் தனது பதவியை இராஜினாமா செய்தார். ஜனாதிபதி நெருக்கடி சூழ்நிலையை சமாளிப்பதற்கான வாய்ப்பை எதிர்க்கட்சிகள் நிராகரித்து விட்டன. இதனால் இராஜினாமா கடிதத்தை அதிபரிடம் அளித்துள்ளேன் என்றும் பிரதமர் கூறினார். (ஸ்ரீ-2)




## ஜேர்மன் ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் இராணுவம் இரண்டு பிரிவாகி மோதல்

ஜேர்மனில் அந்நாட்டு ஜனாதிபதி அலி அப்துல்லாவுக்கு எதிரான போராட்டம் வலுவடைந்துள்ளது. இராணுவத்தினரிடையே ஜனாதிபதிக்கு ஆதரவானவர்கள் எதிர்க்கட்சி ஆதரவாளர்கள் என்று இரு பிரிவு ஏற்பட்டுள்ளது. இந்த இருபிரிவினரும் அங்குள்ள முகால்லா நகரில் நேற்று முன்தினம் மோதலில் ஈடுபட்டனர். இதில் இராணுவ அதிகாரி உட்பட பலர் காயமடைந்துள்ளதாகத் தெரிகிறது.

ஜனாதிபதிக்கு எதிராக போராட்டம் நடைபெற்று வரும் சூழ்நிலையில் இராணுவத்திலும் பிளவு ஏற்பட்டுள்ளதால் ஜேர்மனியில் அடுத்த சில நாட்களில் தாக்குதலில் இறங்கினால் உயிரிழப்பு அதிகம் இருக்கும் என்றும் அல் ஜசீரா தொலைக்காட்சி செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மத்தியகிழக்குப்பகுதியில் அமைந்துள்ள அரபு நாடான சிரியாவிலும் ஜனாதிபதி பஷர் அல்-ஆசாத்துக்கு எதிராக மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். அங்குள்ள டாரா நகரில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தின் போது பொலிஸார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் ஒருவர் கொல்லப்பட்டார். அவரது இறுதிச் சடங்கு நேற்று முன்தினம் நடைபெற்றது.

இதில் சுமார் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்டு அரசுக்கு எதிராக கோஷம் எழுப்பிச் சென்றனர். இதனால் அரசுக்கு எதிரான போராட்டம் அங்கும் தீவிரமடைந்துள்ளது. (ஸ்ரீ-2)

## மியன்மாரில் நிலநடுக்கம் 25 பேர் பலி;பலர் படுகாயம்

(யாங்கூன்)



மியன்மார் நாட்டில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி 25 பேர் பலியாகினர். பலர் படுகாயமடைந்துள்ளனர். ஆயிரக்கணக்கான மக்கள் வீடுகளை இழந்துள்ளனர்.

மியன்மார் -தாய்லாந்து எல்லையில் மையம் கொண்டிருந்த நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.8 ஆக பதிவாகியிருந்தது. நிலநடுக்கத்தின் தாக்கம் சீனாவின் சில பகுதிகளிலும் உணரப்பட்டதாக புவியியல் ஆராய்ச்சி மையம் தெரிவித்துள்ளது.

இதுவரை 10 ஆண்கள் ,ஒரு சிறுவன், 13 பெண்கள் ஆகியோரின் சடலம் மீட்கப்பட்டுள்ளது. மீட்பு பணிகள் முழுவீச்சில் முடுக்கி விடப்பட்டுள்ளதாக மியன்மார் நாட்டு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். (ஸ்ரீ-2)

## பாகிஸ்தானில் தற்கொலை தாக்குதலில் 7 பேர் பலி

(ஹங்கு)

பாகிஸ்தானில் கைபர் -பக்துன் கவா மாகாணத்தில் ஹங்கு பகுதி உள்ளது. அங்குள்ள தோபா பொலிஸ் நிலையத்தின் மீது வெடி குண்டுகளை நிரப்பிய ஒரு கார் பயங்கரமாக மோதியது. இதனால் அப்பகுதி முழுவதும் பயங்கரசத்தத்துடன் வெடித்தது.

இதில் பொலிஸ் நிலையம் மற்றும் அதையொட்டியிருந்த 4 வீடுகள், 6 கடைகள் இடிந்து தரைமட்டமாகின. இந்தத் தாக்குதலில் 7 பேர் பலியாகினர். 25 பேர் படுகாயமடைந்தனர். அவர்களில் 10 பேர் பொலிஸ்காரர்கள். இவர்கள் அனைவரும் உடனடியாக மீட்கப்பட்டு அங்குள்ள இராணுவ வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர். (ஸ்ரீ)

## லிபியா மீதான தாக்குதல் தொடர்கிறது; அந்நாட்டின் தரைப்படைகளை தாக்க வியூகம்

லிபிய விமானப்படை தாக்குதலை முறியடித்துள்ள அமெரிக்கா தலைமையிலான கூட்டணி படைகள் தற்போது அந்நாட்டின் தரைப் படைகளை தாக்க வியூகம் வகுத்துள்ளன.

லிபியாவை 30 ஆண்டுகளுக்கும் மேலாக ஆண்டு வரும் கடாபியை பதவி விலகக் கோரி எதிர்க்கட்சியினர் போராட்டம் நடத்தினர். போராட்டக்காரர்கள் மீது லிபிய விமானப் படை விமானங்கள் குண்டு வீசியதால் நூற்றுக்கணக்கானவர்கள் பலியாகினர். கடாபியை பதவி விலகும்படி அமெரிக்கா உள்ளிட்ட நாடுகள் வற்புறுத்தின.

இதற்கிடையே ஐ.நா. வின் ஒப்புதலோடு அமெரிக்கா மற்றும் பிரிட்டன் உள்ளிட்ட மேற்கத்திய நாட்டுப் படைகள் லிபியா மீது தாக்குதலை நடத்தி வருகின்றன.

இந்தத் தாக்குதலில் லிபியாவின் விமானப்படை தாக்குதல் ஒடுக்கப்பட்டுவிட்டது. இதையடுத்து போராட்டக்காரர்கள் மீது தாக்குதல் நடத்தும் பீரங்கி மற்றும் ஏவுகணைகளை தவிடுபொடியாக்க அமெரிக்கா தலைமையிலான படைகள் திட்டமிட்டுள்ளன.

ஐந்தாவது நாளாக ஜின்டான், ஜாவியா, மிஸ்ரட்டா, அஜ்தாபியா ஆகிய நகரங்களில் கடாபி இராணுவத்தின் தாக்குதல் நேற்று முன்தினம் தொடர்ந்தது. (ஸ்ரீ-2)




லிபியா மீது தாக்குதல் நடத்துவதற்கு துருக்கி நாடு ஆதரவு தெரிவித்ததற்கு அந்நாட்டின் கம்யூனிஸ்ட் கட்சிகள் எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டங்களை நடத்துவதைப் படத்தில் காணலாம்.

## சிரியாவில் மக்கள் கிளர்ச்சியில் நூற்றுக்கும் மேற்பட்டோர் பலி

(நிகோஸியா)

சிரியாவில் அரசுக்கெதிராக மக்கள் போராட்டம் தீவிரமடைந்து வருகிறது. நேற்று முன்தினம் நாட்டின் தென்பகுதி நகரான தாராவில் ஐய்மான்-அல்-அஸ்வாத் என்ற மனித உரிமை அமைப்பினர் போராட்டம் நடத்திக் கொண்டிருந்தனர். அவ்வேளையில் ஏற்பட்ட கலவரத்தில் பாதுகாப்புப் படையினர் மேற்கொண்ட நடவடிக்கையால் 100 இற்கும் மேற்பட்டோர் கொல்லப்பட்டிருக்கலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. கடந்த 18 ஆம் திகதி முதல் பொதுமக்கள் ஆங்காங்கேசிறிய அளவில் போராட்டம் நடத்தி வந்தனர். தற்போது தாஹரா நகரில் ஏற்பட்ட சம்பவத்தினை தொடர்ந்து நாட்டின் தலைநகரமான டமாஸ்கஸிலும் மக்கள் போராட்டம் பரவியுள்ளது.

இதில் 75 ஆயிரம் பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நாட்டில் புதிய சீர்திருத்த சட்டம் கொண்டுவர நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் போராட்டத்தை மக்கள் கைவிட வேண்டும் எனவும் அதிபர் பஷீர் ஆசாத் கேட்டுக் கொண்டுள்ளார். (ஸ்ரீ-2)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை அகதிகள் தமிழகத்தில் கௌரவமாக வாழ நடவடிக்கை

## அ.தி.மு.க. தேர்தல் அறிக்கை

(திருச்சி)

அ.தி.மு.க. செயலாளர் ஜெயலலிதா நேற்று முன்தினம் திருச்சியில் 11 மணிக்கு ஸ்ரீரங்கம் தொகுதியில் போட்டியிடுவதற்காக வேட்பு மனுத்தாக்கல் செய்தார்.

இதனையடுத்து அவர் 12 மணிக்கு செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவர் அ.தி.மு.க. தேர்தல் அறிக்கையை வெளியிட்டார். குறித்த அறிக்கையிலிருந்து முக்கியமான அம்சங்களைக் குறிப்பிட்டார்.

அவர், இலங்கைத் தமிழ் அகதிகளின் மறுவாழ்வு, தரமான மருத்துவ வசதிகள், கல்வி உதவிகள், சிறப்பு வேலைவாய்ப்புப் பயிற்சி அளிக்கப்படும், அகதிகள் அனைவரும் தமிழகத்திலேயே கௌரவமாக வாழ நடவடிக்கை எடுக்கப்படும் என்று தெரிவித்தார். (ஸ்ரீ-2)



இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள மைக்கிரோசொப்ற் நிறுவுநர் பில்கேட்ஸ், அவரது மனைவி மெலின்டா கேட்ஸ் ஆகியோர் பீகார் மாநிலம் பாட்னாவிலுள்ள ஜாம்சாட் கிராமத்திற்குச் சென்று அங்குள்ள மக்களுடன் உரையாடினர். அங்கு குழந்தையொன்றைக் கொஞ்சி மகிழ்வதைப் படத்தில் காணலாம்.

# பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பி.க்கு பத்மபூஷண் விருது

## ஜனாதிபதி பிரதீபா பட்டீல் வழங்கினார்



டில்லியில் நடைபெற்ற விழாவில் பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியத்திற்கு பத்மபூஷண் விருதை ஜனாதிபதி பிரதீபா பட்டீல் வழங்கியுள்ளார். இதில் நடிகர் ஜெயராம், நடிகை தபு, வி.வி.எஸ்.லட்சுமணன் ஆகியோர் பத்மஸ்ரீ விருதுபெற்றனர்.

ஜனாதிபதி மாளிகையில் அசோகா மண்டபத்தில் பத்ம விருதுகள் வழங்கும் வைபவம் நடைபெற்றது. ஜனாதிபதி பிரதீபா பட்டீல் இந்த விருதுகளை வழங்கினார். துணை ஜனாதிபதி அமீது அன்சாரி, பிரதமர் மன்மோகன் சிங், காங்கிரஸ் தலைவி சோனியா காந்தி, மத்திய மந்திரிகள் உள்ளிட்ட பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

நாட்டின் இரண்டாவது பெரிய விருதான பத்மவிபூஷண் விருதை முன்னாள் ஆளுநர் ஏ.ஆ.கித்வாய், இலக்கியவாதி ஒ.என்.வி. குருப், வாஜ்பாய் அரசில் தேசிய பாதுகாப்பு ஆலோசகராக இருந்த பிரஜேஷ் மிஸ்ரா மற்றும் மூத்த அறிஞர் கபிலா வாத்சயன் ஆகியோருக்கு ஜனாதிபதி வழங்கினார்.

பிரபல பின்னணி பாடகர் எஸ்.பி.பாலசுப்பிரமணியம், இந்தி நடிகை வகீதா ரஹ்மான், மூத்த விஞ்ஞானி எஸ்.இராமச்சந்திரன், இசையமைப்பாளர் கய்யாம் உள்ளிட்டோர் பத்மபூஷண் விருதுபெற்றனர்.

நடிகர் ஜெயராம், நடிகை தபு, கிரிக்கெற் வீரர் வி.வி.எஸ்.லட்சுமணன், விண்வெளி விஞ்ஞானி எம்.அண்ணாமலை, பளு தூக்கும் வீராங்கனை குஞ்சாராணி தேவி, பரத நாட்டிய குரு எம்.கே.சரோஜா மற்றும் இந்தியாவில் சோதனைக்குழாய் உருவாக்கத்தில் முன்னோடியான மகப்பேற்று நிபுணர் இந்திரா ஹிந்துஜா உள்ளிட்டோர் பத்மஸ்ரீ விருது பெற்றனர். (ஸ்ரீ-2)

# நாமல் தலைமையிலான குழுவினர் முல்லைத்தீவுக்கு விஜயம்

முல்லைத்தீவு மாவட்டத்திற்கு நேற்று நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

முள்ளியவளை கலைமகள் வித்தியாலயத்திற்கு நேற்று காலை விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் இம்மாவட்டத்தில் கடந்த வருடங்களில் நடைபெற்ற 5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியெய்திய 23 மாணவர்களுக்கு புலமைப் பரிசில் காசோலையினை வழங்கியுள்ளார்.

அதேவேளை பிரதிக் கல்விப்பணிப்பாளர்கள், உதவிக்கல்விப் பணிப்பாளர்கள் ஆகியோருக்கு 5 மோட்டார் சைக்கிள்களையும் வழங்கியுள்ளார்.

அன்றைய தினம் முள்ளியவளை வித்தியானந்தா கல்லூரிக்கு விஜயம் செய்த நாடாளுமன்ற உறுப்பினர் அப்பாடசாலையைப் பார்வையிட்டதுடன், விளையாட்டுப் போட்டிகளில் உயரம் பாய்வதற்கு பயன்படும் மெத்தை ஒன்றையும் அதிபரிடம் வழங்கியுள்ளார்.

அத்துடன் முள்ளியவளை மகா வித்தியாலயத்திற்கு சென்ற அவர், அங்கு அமைக்கப்பட்ட வகுப்பறைக் கட்டடம் ஒன்றையும் திறந்து வைத்துள்ளார்.

அத்துடன் அன்று மாலை தர்மபுரம் அ.த.க.பாடசாலைக்கு சென்று அங்குள்ள பாடசாலைக் கட்டடம் ஒன்றைத் திறந்து வைத்துள்ளார்.

அத்துடன் 20 விவசாயிகளுக்கு உழவு இயந்திரங்களை முல்லைத்தீவு மாவட்டச் செயலகத்தில் இடம்பெற்ற நிகழ்வில் வைத்து வழங்கியுள்ளார்.

இந்நிகழ்வில் வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ.சந்திரசிறி, உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர் திருமதி. விஜயலட்சுமி ரமேஷ், பாராளுமன்ற உறுப்பினர்களான சிறிரங்கா மற்றும் பஸ்நாயக்க, வடமாகாண பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எஸ்.இராசநாயகம், முல்லை வலய கல்விப்பணிப்பாளர் எஸ்.கிருஷ்ணகுமார் எனப்பலரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (ஸ்ரீ-2)

# சுதேச மருத்துவ அமைச்சினால் ஆயுர்வேத சேவைக்கு ஆட்சேர்ப்பு

ஆயுர்வேதத் திணைக்களத்தின் மருத்துவ உத்தியோகத்தர் பிரிவின் ஆரம்பத் தரத்தைச் சேர்ந்த மருத்துவ உத்தியோகத்தர் பதவிக்கு தகைமையுடைய இலங்கைப் பிரஜைகளிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

இவ்விண்ணப்பப் படிவம் இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசு வர்த்தமானிப் பத்திரிகையில் கடந்த 18ஆம் திகதியில் வெளியிடப்பட்டுள்ளது. இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதி எதிர்வரும் ஏப்ரல் மாதம் 15ஆம் திகதியென யாழ்.பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியகலாநிதி செல்வி சி.சிவராணி அறிவித்துள்ளார். (ஸ்ரீ-2)

# அனுருத்த ரத்வத்தைக்கு எதிரான வழக்குகள் வாபஸ் பெறப்படவுள்ளன

(கொழும்பு)

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ள இலஞ்ச ஊழல் வழக்கில், அவரின் சாட்சியங்களை விசாரிக்காது, வழக்கில் இருந்து ரத்வத்தையை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்றத்தில் கோரிக்கை விடுக்கப்பட்டது.

இந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போது, அனுருத்த ரத்வத்த நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்தார். இதன்போதே ரத்வத்தவின் சட்டத்தரணி இந்த கோரிக்கையை விடுத்தார். இந்தக் கோரிக்கையை கவனத்தில் கொள்ள தீர்மானித்த நீதிபதி சுனில் ராஜபக்ஷ, மேலதிக தகவல்களை எதிர்வரும் 9ஆம் திகதி முன்வைக்குமாறு உத்தரவிட்டார்.

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர், மூன்று கோடிக்கு மேல் சம்பாதித்த, சொத்துக்களை எப்படி சம்பாதித்தார் என்பதை வெளியிட தவறியமைக்கு எதிராக, இலஞ்ச ஊழல் விசாரணை ஆணைக்குழு இந்த வழக்கை தாக்கல் செய்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ)

# வடமாகாண அமைச்சின் கேட்போர்கூடம் திறப்பு

(கொழும்புத்துறை)

யாழ்ப்பாண பொது நூலக சிற்றுண்டிச் சாலை இயங்கி வந்த கட்டடம் வட மாகாண அமைச்சின் கேட்போர் கூடமாக மாற்றப்பட்டுள்ளது.

மேற்படி மண்டபத்தில் ஊடகவியலாளர்கள் சந்திப்பு, மக்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்குகள், பயிற்சி வகுப்புக்கள் மற்றும் செயலமர்வுகள் என்பன இடம்பெறவுள்ளன. வடமாகாண அமைச்சின் சகல பணிமனைகளும் யாழ்ப்பாணத்திற்கு மாற்றப்பட்டிருப்பதால் அமைச்சின் செயலாளர்களால் மேற்படி நிகழ்வு ஏற்பாடுகள் நடைபெறவுள்ளன.

மேற்படி கேட்போர் கூடத்தினை வடமாகாண ஆளுநர் மேஜர் ஜெனரல் ஜி.ஏ. சந்திரசிறி சம்பிரதாய பூர்வமாக அண்மையில் திறந்து வைத்தமை குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீ-3-5)



கனகராயன் குளம் ஏ-9 வீதியில் பொருட்களை ஏற்றிக் கொண்டு பயணித்த பாரவூர்தி ஒன்று குடைசாய்ந்திருப்பதைப் படத்தில் காணலாம்.


**குப்பிளான் தெற்கு, மயிலங்காடு ஞானகலா சனசமூக நிலையத்தின் 24ஆவது ஆண்டு விழாவும் கலை நிகழ்ச்சிகளும்**

காலம்:- 26.03.2011 (சனிக்கிழமை) நேரம்:- இரவு 7.00 மணி

இடம்:- சனசமூக நிலைய முன்றல்

பிரதம விருந்தினர்

புன்னாலைக்கட்டுவன் இராணுவத் தளபதி

சிறப்பு விருந்தினர்கள்

திரு. V. தங்கராசா (குருமாரி ஆலயத் தலைவர்)

திரு. K. மெய்யழகன் (வலிகாமம் கொத்தணித் தலைவர்)

திரு. P. தவராசா (ஞானகலா வி.க.தலைவர்)

திரு. T. சதீஸ்குமார் (ஞானகலா வி.க.செயலாளர்)

செல்வி. S. ராதா (முன்பள்ளி ஆசிரியர்)

செல்வி. S. ரஞ்சினி (முன்பள்ளி ஆசிரியர்)

திரு. P. உதயகுமார் (ஞானவைரவர் ஆலய பரிபாலனசபைத் தலைவர்)

நிர்வாகத்தினர், ஆசிரியர்கள்.

(க-2797)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு ஆட்டுக் கூட்டத்திற்கு சிங்கம் தலைமை வகிக்கலாம். ஆனால் சிங்கக் கூட்டத்திற்கு ஆடு தலைமை வகிக்கக் கூடாது. – டானியல் டீஃபோ

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

# மாப் புளிக்கிறது அப்பம் சுட யார் உளர்

'இந்த உலகம் அறிஞர்களால் ஆளப்பட வேண்டும்'. இவ்வாறு கூறியவர் கிரேக்க நாட்டு தத்துவமேதை சோக்கிரட்டிஸ். அறிஞர்களின் ஆட்சியிலேயே உலகம் மீட்சி பெற முடியும் என்பது அவரின் நிலைப்பாடாக இருந்தது.

எனினும் சோக்கிரட்டிஸின் கருத்து நிலைபெறுவதற்கான சந்தர்ப்பம் தற்போதில்லை.

இதைக் கூறுவதற்கு நாம் சோக்கிரட்டிஸிற்கு எதிரானவர்கள் என்று நீங்கள் நினைத்து விடக் கூடாது.

அறிஞர்களின் ஆளுமையில் உலகம் இருப்பது நல்லது. ஆனால் யார் அறிஞர் என்பதே இப்போது இருக்கக் கூடிய சிக்கல்.

அறிஞர்களை தெரிவு செய்வதே சிக்கலாகிவிட்ட இந்தக் காலகட்டத்தில் அறிஞர்களின் ஆட்சி என்பது சாத்தியமற்றதாகும்.

ஆனாலும் கிரேக்க தத்துவஞானியின் கருத்தை அடியோடு கைவிடுவதற்கும் நாம் தயாரில்லை.

எனவே, சோக்கிரட்டிஸின் கருத்தை சற்று மாற்றியமைத்து, யார் ஆட்சியில் இருந்தாலும்–யார் பிரதிநிதித்துவத்தை வகித்தாலும் அவர்கள் நேர்மையான அறிஞர்களின் அறிவுரைப்படி இயங்க வேண்டும்.

அதுவே மக்கள் சமூகம் உயர்நிலையில், கௌரவமாக வாழ்வதற்கு வழி சமைக்கும்.

அந்த வகையில் இலங்கையில் தமிழினத்தின் விடயத்தில் அறிஞர்களின் அறிவுரைப்புகளும் வழிகாட்டல்களும் அவசியமாகின்றன.

யார் வேண்டுமானாலும் நாடாளுமன்ற பிரதிநிதித்துவத்தை பெறமுடியும் என்ற நிலைப்பாட்டில் அதனை மாற்றியமைக்க நினைப்பது அல்லது கருத்துரைப்பது காலவிரயமாகும்.

ஆதலால் அதனை அப்படியே விட்டுவிடலாம்.

ஆனால், எங்களின் எதிர்காலம் தொடர்பில் அறிஞர்கள் வியூகம் அமைத்து, தமிழினத்தின் விடிவிற்கான திட்டத்தை தீட்டவேண்டும்.

முப்பது வருடங்கள் கிடைக்காததை எப்படி சாதிக்க முடியும் என்ற கேள்விகள் தேவையற்றவை.

முப்பது வருடத்தில் கிடைக்காததை மூன்று மணித்தியாலத்தில் பெற்றுக் கொண்ட நிகழ்வுகளும் இந்த உலகின் அனுபவங்களில் நிறையவே உண்டு.

ஆதலால்தான் தமிழினத்தின் உரிமை தொடர்பில், இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பில், அறிஞர்களின் ஆக்கபூர்வமான–இராஜதந்திரமான ஆலோசனைகள் தேவைப்படுகின்றன.

லிபியா மீது நடத்தப்படும் தாக்குதலைக் கண்டித்து கொழும்பில் நடைபெறும் ஆர்ப்பாட்டங்கள் மாவைப் புளிக்க வைக்கும் போல் தெரிகிறது.

ஓ! எனதருமை தமிழ் அறிஞர்களே! அப்பம் சுடுவதற்கு நீங்கள் ஆலோசனைகளை கூறத் தயாரானால் 'அந்த மூன்று மணித்தியாலங்கள்' என்றொரு தலைப்பை ஈழத்தமிழ் மக்கள் தங்கள் வரலாற்று இதிகாசமாக எழுதிக் கொள்வர்.

# கருணா குழுவினர் பிடித்துச் சென்ற எனது மகனை மீட்டுத் தாருங்கள்

## ஆணைக்குழு முன் தாயார் சாட்சியம்

(அம்பாறை)

கருணா குழுவினைச் சேர்ந்த 4பேரால் கடந்த 2008ஆம் ஆண்டு செப்டம்பர் 29ஆம் திகதி காலை 5.30மணியளவில் எனது வீட்டிலிருந்து பலவந்தமாக அழைத்துச் செல்லப்பட்ட எனது மகன் இதுவரை விடுவிக்கப்படவில்லை.

எனது மகன் தொடர்பில் ஒருமுறை திருக்கோவிலிலுள்ள கருணாகுழு அலுவலகத்தின் பொறுப்பாளரான பாரதியிடம் நான் கேட்டேன். என்னுடைய மகனை அவர்கள் அழைத்து வந்ததை ஒப்புக் கொண்டார். தயவு செய்து எனது மகனை மீட்டுத் தருவதற்கு உதவுங்கள்.

இவ்வாறு திருக்கோவில் விநாயகபுரம் பிரதேசத்தைச் சேர்ந்த காசிப்பிள்ளை மரகதமணி என்பவர் நேற்று அம்பாறை மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு முன்னிலையில் சாட்சியமளிக்கையில் வேண்டுகோளொன்றினை முன்வைத்தார்.

தனது மகன் கடத்தப்பட்ட விடயம் தொடர்பாக ஆணைக்குழு முன்னிலையில் மேற்படி காசிப்பிள்ளை மரகதமணி மேலும் தெரிவிக்கையில்,

எனது மகனைக் கடத்தியவர்களிடம் அவரை எங்கே அழைத்துக் கொண்டு போகிறீர்கள் எனக் கேட்டேன். எனது மகன் தொடர்பில் சில பிரச்சினைகள் உள்ளதாகவும் அவை தொடர்பில் விசாரணை செய்துவிட்டு விடுவிப்பதாகவும் அவர்கள் கூறினார்கள்.

எனது மகன் அழைத்துச் செல்லப்படுவதை நான் தடுத்தேன். அப்போது அவர்கள் என்னைத் தள்ளிவிட்டு வானத்தை நோக்கித் துப்பாக்கியால் மூன்று தடவை சுட்டனர். பின்னர் எனது மகனை முச்சக்கர வானமொன்றில் அழைத்துச் சென்றார்கள்.

எனது மகன் 1985ஆம் ஆண்டு பிறந்தவர் இந்த சம்பவம் நடைபெற்ற போது அவருக்கு 23வயது.

எனது மகனுடன் இன்னும் இரண்டு பேரையும் பிடித்துச் சென்றார்கள். அவர்களில் ஒருவர் எனது பக்கத்து வீட்டுப் பையன். அவர் தம்மை பிடித்துச் சென்றவர்கள் கருணா குழுவினர்தான் என அவர் தெரிவித்தார்.

இதனையடுத்து நான் திருக்கோவிலிலுள்ள கருணா குழுவினரின் அலுவலகத்திற்கு ஒவ்வொரு நாளும் சென்று எனது மகன் குறித்து விசாரித்து வந்தேன். அப்போது , உங்கள் மகனிடம் இன்னும் விசாரணை நடந்துகொண்டிருக்கின்றது முடிந்தவுடன் அனுப்பி விடுவோம் என்று அவர்கள் எனக்கு பதிலளித்தார்கள்.

கருணா குழுவினரின் திருக்கோவில் அலுவலகத்திற்கு பாரதிதான் பொறுப்பாக இருந்தார். அவரின் கீழ் இயங்கிய சீலன், ஜுட்டு போன்றோர்தான் எனது மகனை பிடித்துக் கொண்டு சென்றார்கள்.

ஒருமுறை பாரதியை சந்திக்க கருணா அலுவலகம் சென்றேன். அங்கு எனது மகனைப் பிடித்துச் சென்ற சீலனும் அங்கிருந்தார். நான் பாரதியிடம் சென்று எனது மகன் எங்கே எனது மகனைப் பிடித்துக் கொண்டு வந்த சீலனும் இங்கேதானே இருக்கிறார். விசாரித்துச் சொல்லுங்கள் எனக் கேட்டேன். அதற்கு பாரதி, சீலனிடம் கேளுங்கள் என்றார்.

நான் சீலனிடம் எனது மகன் எங்கே எனக் கேட்டன். உனது மகனைப் பிடித்துக் கொண்டுவரச் சொன்னார்கள் நான் பிடித்துக் கொடுத்து விட்டேன். மேலதிக தகவல்களை அண்ணனிடம் (பாரதியிடம்) கேள் என்று சீலன் பதிலளிததார்.

பின்னர் எனது மகனை இராணுவத்தினரிடம் ஒப்படைத்துவிட்டதாக பாரதி என்னிடம் கூறினார்.

அப்போது நான் பாரதியிடம் எனது கணவரும் 1990 களில் இறந்து விட்டார். எனக்கு ஒரேயொரு மகன்தான். யாரும் எனக்கு உதவிக்கு இல்லை. எனது மகனை விட்டு விடுங்கள் என்றேன்.

பாரதி இன்னும் உயிருடன்தான் இருக்கிறார் அவரை ஜனாதிபதியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளர் என்று சொல்வார்கள். அவருடைய முழுப் பெயர் இனிய பாரதி.

எனது மகன் விடயமாக 2010ஆம் ஆண்டு, 11ஆம் மாதம், 02ஆம் திகதி நல்லிணக்க ஆணைக்குழுவினருக்கு நான் கடிதமொன்றினையும் அனுப்பி வைத்தேன். ஆனால் அதற்கு இதுவரை ஒருபதிலும் எனக்கு கிடைக்கவில்லை. தயவு செய்து எனது மகனை மீட்டுத் தாருங்கள் என்றார். (ந-5)

# சுவாமி விவேகானந்தரின் அறிவுரைகள்



நாம் இப்போது இருக்கும் நிலைமைக்கு நாமே பொறுப்பாளிகள். நாம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும்என விரும்புகின்றோமோ அப்படி நம்மை அமைத்துக் கொள்ளும் ஆற்றல் நம்மிடமே இருக்கிறது. நாம் இப்போது இருக்கும் நிலை நம்முடைய முன்வினைகளின் பலன் என்றால் எதிர்காலத்தில் நாம் எப்படியெல்லாம் இருக்க வேண்டும் என்று விரும்புகிறோமோ அதை நமது தற்போதைய செயல்களால் உண்டாக்கி கொள்ள முடியும் என்பது வெளிப்படை.

இந்த உலகம் மிகப்பெரிய ஓர் உடற்பயிற்சிக் கூடம். இங்கு நாம் நம்மை வலிமையுடையவர்களாக்கி கொள்வதற்காக வந்திருக்கிறோம். மக்கள் பொதுவாக வாழ்க்கையில் உள்ள குறைபாடுகளையெல்லாம் தங்களுடன் வாழ்பவர்கள் மீதோ அல்லது அது தவறினால் தெய்வத்தின் மீதோ சுமத்துகிறார்கள். அல்லது புதிதாக அவர்கள் ஏதோ பேய் பிசாசு என்று கற்பித்துக்கொண்டு அதை தலை விதி என்று சொல்கிறார்கள். விதி என்றால் என்ன? அது எங்கே இருக்கிறது? எதை விதைத்தோமோ அதைத்தான் அறுவடை செய்கிறோம். நமது விதியை நாமே வகுத்துக் கொள்கிறோம். எனவே அதன் பொருட்டு தூற்றுவதற்கும் ஒருவரும் இல்லை. பாராட்டுவதற்கும்ஒருவருமில்லை.

# ஆன்மீகத் தேடலை வழிப்படுத்தும் தவக்காலம்

## ஒப்புரவின் மனநிலையைத் எம்மில் உருவாக்குவோம் (லூக்கா 15:1–3,11–32)

நமக்கு நன்கு அறிமுகமான ஊதாரி மைந்தன் உவமை வழியாக இன்று நம் வாழ்வின் மனநிலையை சற்று ஆய்வு செய்ய அழைக்கிறது. இன்றைய இறைவார்த்தை. இதனை, 'ஊதாரித்தந்தை உவமை' என்றும் அழைக்கலாம் என்கின்றனர் சில விவிலிய அறிஞர்கள். ஏனெனில் மகன் செல்வத்தைச் செலவழிப்பதில் ஊதாரியாக இருந்தான் என்றால், தந்தை அன்பிலும் மன்னிப்பிலும் ஊதாரியாக, தாராளமானவராக கணக்குப் பார்க்காமல் செலவழிப்பவராக இருந்தார். எனவே, அவரை 'ஊதாரித் தந்தை' என்று அழைப்பதால் என்ன தவறு.

இந்த உவமையில் வருகிற தந்தை, ஊதாரிமைந்தன், அவனது சகோதரன் மூன்று பேருமே மூன்று மன நிலைகளைப் பிரதிபலிக்கின்றார்கள். தந்தை அன்பின், பரிவின், நிபந்தனையற்ற மன்னிப்பின் மன நிலையைப் பிரதிபலிக்கிறார். நாம் அவ்வாறு வாழ முடியுமா? நமக்கு எதிராகச் செயற்பட்டவர்களைக் கூடப் பரிவுடன், பாசத்துடன் பார்க்க முடியுமா? மன்னித்து ஏற்றுக் கொள்ள முடியுமா? அவர்களின் ஒப்புரவை மகிழ்ந்து கொண்டாட முடியுமா? முயல்வோம்.

ஊதாரி மைந்தன் இங்கு நேர்மையான மனத்துயரைப் பிரதிபலிக்கின்றான் எனவும் நாம் பார்க்கலாம். அறிவுத் தெளிவு பெற்றதும் தந்தையிடம் திரும்பி வந்தான். அத்துடன், மகனாக அல்ல, வேலையாளாகப் பணி செய்ய முன் வந்தான். நாமும் நமது குறைகளை, பாவங்களை மனதார ஏற்றுக் கொள்ள முன்வருகிறோமா? நமது குற்றங் களுக்கேற்ற பரிகாரத்தை, தண்டனையை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கிறோமா? முயற்சி செய்வோம்.

மூத்த மகன் குறை காணும் மன நிலையை, பொறாமையை, நன்மையை ஏற்றுக்கொள்ளாத மனதை, தீர்ப்பிடும் மனநிலையை பிரதிபலிக்கின்றான். நாமும் பல நேரங்களில் அவ்வாறு பிறரைத் தீர்ப்பிடுகிறோம். பிரிவின் பார்வையை புறக்கணித்து தீர்ப்பிடும் பார்வையால் பிறரைப் பார்க்கின்றோம். சட்டத்தின் பார்வையில், மனித நீதியின் அடிப்படையில் செயற்படுகிறோம். நம் பார்வையை மாற்றுவோமா? எங்களுடைய மன நிலையை மாற்றி, தந்தையின் பரி வின் மனநிலையையும், மகனின் ஒப்புரவின் மனநிலையைஎம்மீது உருவாக்குவோம்.

ம. பிரான்சிஸ்,
கத்தோலிக்க சுதந்திர பத்திரிகையாளர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011

பெப்ரவரி 19 - ஏப்ரல் 02

ICC Cricket World Cup 2011

## மைக் 1...2...3...

## 'சகல துறையிலும் மிரட்டிவிட்டார்' யுவராஜுக்கு தோனி புகழாரம்




அவுஸ்திரேலிய அணியுடனான காலிறுதிப்போட்டியில் வெற்றி பெற்ற இந்திய அணித்தலைவர் தோனி கருத்துத் தெரிவிக்கையில்,

யுவராஜ்சிங்-ரெய்னா ஆகியோர் 50 ஓவர்கள் வரை களத்தில் நின்றதால் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை இருந்தது.

அவர்களும் சிறப்பாக செயற்பட்டு அசத்தி விட்டனர். இந்த ஆட்டத்தில் களத்தடுப்பு சிறப்பாக இருந்தது.

யுவராஜ் சிங் துடுப்பாட்டம், களத்தடுப்பு, பந்துவீச்சு என அனைத்திலும் மிரட்டி விட்டார்.

அரையிறுதியில் பாகிஸ்தானை எதிர்கொள்கிறோம். இதனால் நெருக்கடி அதிகமாக இருக்கும். நெருக்கடி ஒன்றும் புதிதல்ல. அதை எப்படி கையாள வேண்டும் என்பதை வீரர்கள் நன்கு அறிந்துள்ளனர். இவ்வாறு தோனி கூறினார்.



பத்தாவது உலகக்கிண்ணத் தொடரை நடத்தும் நாடுகளில் ஒன்றான பங்களாதேஷில் நேற்று நடை பெற்ற தென்னாபிரிக்க-நியூசிலாந்து அணிகளுக்கிடையிலான காலிறுதியாட்டம் அந்நாட்டில் நடைபெற்ற கடைசி போட்டியாகும். இந்நிலையில் போட்டிநிறைவடைந்ததும் மிர்பூர் மைதானத்தில் வானவேடிக்கையை காணலாம்

## சிதைந்து விட்டேன் பொன்டிங் குமுறல்

இந்திய அணியுடனான காலிறுதிப் போட்டியில் தோல்வி அடைந்தது தொடர்பில் அவுஸ்திரேலிய அணித்தலைவர் பொன்டிங் கருத்துத் தெரிவிக்கையில்,



இந்த தோல்வி என்னை சிதைத்து விட்டது. மிகுந்த எதிர்பார்ப்புடன் வந்தோம். எல்லாம் வீணாகிவிட்டது. சிறந்த இணைப்பு ஆட்டம் எங்களுக்கு அமையவில்லை.

பந்து வீச்சிலும் போதுமான வகையில் நாங்கள் நெருக்கடி கொடுக்கவில்லை. துடுப்பாட்டத்தில் 15முதல் 20 ஓட்டங்கள் குறைவாக எடுத்துவிட்டோம். எல்லாவற்றையும் விட இந்திய அணி சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தியது. காம்பீர், சச்சின், யுவராஜ் அருமையாக ஆடி அரைச்சதம் விளாசினர். சகீர்கான் பவர்பிளேயில் எங்களை ஓட்டங்கள் எடுக்க விடாமல் திணற செய்தார். ஒட்டுமொத்த அணியாக அசத்தியுள்ளனர்.

இதேபோன்று ஆடினால் இந்திய அணியை எந்த அணியும் வீழ்த்துவது கடினம். அரையிறுதியில் பாகிஸ்தானை, இந்திய அணி வீழ்த்தும். இவ்வாறு பொன்டிங் கூறினார்.

## துளித்துளியாய்...

• அவுஸ்திரேலியாவுக்கு எதிராக நேற்று முன்தினம் நடந்த காலிறுதியாட்டம் தோனியின் அணித்தலைமையில் 100ஆவது ஆட்டமாகும். விக்கெட் காப்பாளர், அணித்தலைவர் இரண்டு பணியையும் ஒரே வீரர் கவனித்த வகையில் இதுவும் ஒரு சாதனையாகும்.

இதற்குமுன்பு அதிகபட்சமாக சிம்பாவே விக்கெட் காப்பாளர் அன்டி பிளவர் 46 ஆட்டங்களுக்கு அணித்தலைவராக இருந்ததே அதிகபட்சமாகும்.

தோனியின் தலைமையில் இந்திய அணி 57இல் வெற்றியும், 35இல் தோல்வியும் ஒன்றில் சமநிலையும் கண்டுள்ளது. 7 ஆட்டம் முடிபில்லை.

• ஒன்றரை ஆண்டுகள் இடைவெளிக்குப்பின்னர் முதல் முறையாக டெண்டுல்கர் நேற்று முன்தினம் பந்துவீசினார். 2 ஓவர்கள் பந்துவீசிய அவருக்கு விக்கெட் எதுவும் கிடைக்கவில்லை. இதற்கு முன்பு கடைசியாக 2009ஆம் ஆண்டு நவம்பர் மாதம் கவுகாத்தியில் நடந்த அவுஸ்திரேலியாவுக்கு எதிரான ஆட்டத்தில் பந்துவீசியிருந்தார்.

• அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கிப் பொன்டிங் 18 இன்னிங்ஸ் இடைவெளிக்குப் பின்னர் சதமடித்திருந்தார்.

ஆனால் அவரது 30ஆவது சதத்துக்கு பலன் கிடைக்கவில்லை அவர் சதம் விளாசியும் அவுஸ்திரேலிய அணி தோற்பது இது 5ஆவது முறையாகும்.

இந்திய வீரர் காம்பீர் ஓட்டங்கள் கணக்கைத் தொடங்குவதற்கு முன் பாகஸ்கொயர்லெக்திசையில் அடித்த பந்தை அவுஸ்திரேலிய அணித்தலைவர் ரிக்கி பொன்டிங் டைவடித்து பிடி எடுத்தார் என்று முறையிட்டார். ஆனால் பந்து தரையில் பட்டது போல் நடுவர்களுக்கு சந்தேகம் ஏற்பட்டது. ஆனால் பொன்டிங் தனக்கு அதுபற்றி தெரியவில்லை என்றார்.

இதையடுத்து டி.வி. ரீப்பிளேயில் பார்த்தபோது பொன்டிங் பிடி செய்வதற்கு முன்பாக பந்து தரையில் பிட்ச்யாகுவது தெளிவாகத் தெரிந்தது. பொன்டிங்கின் செயல் மீண்டும் ஒரு முறை அதிருப்தியடைய செய்தது.

### அவுஸ்திரேலியா இழந்த பெருமைகள்

• உலகக்கிண்ண அரங்கில் 24 ஆண்டுகளாக இந்தியாவிடம் தோற்றதில்லை. என்றபெருமையை இழந்தது.

• 1992ஆம் ஆண்டுக்குப் பின்னர் முதன்முறையாக இறுதிப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை பறி கொடுத்தது.

• பொன்டிங் தலைமையில் அவுஸ்திரேலியா கடந்த இரண்டு உலகக் கிண்ண தொடர்களை வென்றிருந்தது.

தனது அணித்தலைமையில் ஹட்ரிக்சாதனை படைக்கவேண்டும் என்ற அவரது கனவும் சிதைந்தது.

## பாகிஸ்தானில் கொண்டாட்டம்

(கராச்சி)

உலகக் கிண்ண காலிறுதியில் தங்கள் அணி பெற்ற வெற்றியை, பாகிஸ்தான் மக்கள் பெரிய அளவில் கொண்டாடி வருகின்றனர். பங்களாதேஷில் நடந்த மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கு எதிரான உலகக் கிண்ண காலிறுதியில் பாகிஸ்தான் ரசிகர்கள் பெரும் உற்சாகம் அடைந்துள்ளனர்.

இளம் ரசிகர்கள், ரசிகைகள், குடும்பத்தின் மூத்த உறுப்பினர்கள் என அனைவரும் வீதியில் இறங்கி உலகக் கிண்ணம் எங்களுக்கே என குரல் எழுப்பி உற்சாகமாக நடனமாடி கொண்டாடினர்.



ரசிகர்களின் வேண்டுகோளிற்கிணங்க உலகக்கிண்ண இறுதியாட்ட விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படும் திகதி ஒரு வார காலத்திற்கு நீடிப்புச் செய்யப்பட்டுள்ளது.

## உலகக்கிண்ண கிரிக்கெட்-2011

சம்பியனாகும் நாடு?..............................................

தொடர் நாயகன் விருது யாருக்கு?...............................

சரியான விடையை எழுதி கீழுள்ள கூப்பனை பூரணப்படுத்தி 28.03.2011 இற்கு முன்னர் அனுப்புபவர்களில் குலுக்கல் மூலம் தெரிவாகும் வெற்றியாளர்களுக்கு பெறுமதி வாய்ந்த பரிசில்கள் வழங்கப்படும்.

பெயர்........................................

முகவரி........................................

தொலைபேசி........................................

தே.அ.அ.இல........................................

'உலகக்கிண்ணம்'
வலம்புரி
இல.3, 2-ம் ஒழுங்கை
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.

இன்னும் பல பரிசுகள்

Midea Electro Mart
No:1-1, 1-H, STANLEY ROAD, JAFFNA.

ESPN
இ.ச.பே. நாகரத்தினம் சக நிறுவனம்
52,54, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

JAFFNA ELECTRICAL
94(6), Stanley Road, Jaffna.
Tel: 021 222 2353
Fax: 021 222 4302
E-mail:matheesan16@yahoo.com

SINGER-Manipay
Alady Junction, Manipay.
T.P.:021 225 5343
077 6139592


PCS PC SOLUTIONS TECHNOLOGIES (PVT) LTD
305, Kasthuriyar Road, Jaffna.
T.P:021 2221101,021 2229644
email:- pcsjaffna@sltnet.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உலகக் கிண்ண கிரிக்கெட் திருவிழா 2011
பெப்ரவரி 19 - ஏப்ரல் 02
ICC Cricket World Cup 2011

# நியூசிலாந்து அணி எழுச்சி

# தென்னாபிரிக்கா அதிர்ச்சி



(மிர்பூர்)

ஜெசி ரைடரின் துணிச்சலான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

முன்னணி வீரர்களின் சொதப்பலான துடுப்பாட்டத்தின் மூலம் 49 ஓட்டங்களால் தோல்வியடைந்த தென்னாபிரிக்க அணி இம்முறையும் அதிர்ஷ்டமின்றி தொடரிலிருந்து வெளியேறியது.

பத்தாவது உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் இந்தியா, இலங்கை, பங்களாதேஷ் ஆகிய நாடுகளில் நடைபெற்று வருகிறது.

இதில் பங்களாதேஷ் தலைநகர் டாகா சிறி பங்களா தேசிய மைதானத்தில் நடைபெற்ற மூன்றாவது காலிறுதி ஆட்டத்தில் தென்னாபிக்க - நியூசிலாந்து அணிகள் மோதின.

இப் போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணித்தலைவர் டானியல் விக்டோரி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தார்.

இதனடிப்படையில் களமிறங்கிய நியூசிலாந்து அணிக்கு ஆரம்பம் அதிர்ச்சியளித்தது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் பிரண்டன் மக்குலம் 4 ஓட்டங்களுடன் பீற்றர்சனின் சுழலிலும் குப்தில் ஒரு ஓட்டத்துடன் ஸ்ரையனின் வேகத்திலும் வெளியேற நியூசிலாந்து அணி 6 ஓவர்களில் 16 ஓட்டங்களை எடுத்து 2 விக்கெட்டுக்களை பறிகொடுத்த நிலையில் தடுமாறியது.

எனினும் மூன்றாவது விக்கெட்டுக்காக இணைந்த ரைடர்-ரெய்லர் ஜோடி பொறுப்பான ஆட்டத்தை வழங்கினர்.

இந்த ஜோடி நிதானமாக ஆட ஓட்ட எண்ணிக்கை ஆமை வேகத்தில் நகர்ந்தது.

இதில் அதிரடியைத் தொடர்ந்த ரைடர் 70 பந்துகளில் அரைச்சதம் பெற நியூசிலாந்து அணி 27.1 ஓவர்களில் 100 ஓட்டங்களைத் தொட்டது.

இந்த ஜோடி மூன்றாவது விக்கெட்டுக்காக 114 ஓட்டங்களை இணைப்பாட்டமாகப் பகிர்ந்த போது ரோஸ் ரெய்லர் 72 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 43 ஓட்டங்களை எடுத்து தாகீரின் சுழலில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய ஸ்கொட் ஸ்ரைரிஸ் 16 ஓட்டங்களுடன் மோர்கலின் பந்தில் ஆட்டமிழந்து ஏமாற்றினார்.

அடுத்து வில்லியம்ஸன் சிறப்பாக ஆட மறுமுனையில் ஜெசி ரைடர் 121 பந்துகளில் (8 பவுண்டரிகள் உட்பட) 83 ஓட்டங்களை எடுத்து தாகீரின் பந்தில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து களமிறங்கிய நதன் மக்குலம் 06, ஓரம் 07, விக்டோரி 06 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தனர்.

எனினும் வில்லியம்ஸனின் சிறப்பான ஆட்டத்தின் மூலம் நியூசிலாந்து அணி 50 ஓவர்களில் 8 விக்கெட்டுக்களையிழந்து 221 ஓட்டங்களை எடுத்தது.

இதில் வில்லியம்ஸன் 41 பந்துகளில் (ஒரு பவுண்டரி, ஒரு சிக்ஸர் உட்பட) 38 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் எடுத்தார்.

பந்துவீச்சில் மோர்னி மோர்கல் 3 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன், இம்ரான் தாகீர் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும் பீற்றர்சன் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு 50 ஓவர்களில் 222 ஓட்டங்களை எடுத்தால் வெற்றி என்ற இலகுவான இலக்கை விரட்டிய தென்னாபிரிக்க அணி ஆரம்பத்தில் தடுமாறியது.

ஆரம்பத்துடுப்பாட்ட வீரர் அம்லா 7 ஓட்டங்களுடன் முதல் ஓவரிலேயே ஆட்டமிழந்தார்.

அடுத்துவந்த அனுபவவீரர் கலிஸ் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் அணித்தலைவர் சிமித் 28 ஓட்டங்களை எடுத்து ஓரமின் பந்தில் ஆட்டமிழந்தார்.

எனினும் கலிஸிடன் இணைந்த டிவில்லியர்ஸ் சிறப்பான ஆட்டத்தை வழங்கி அறுதலளித்தார்.

இதில் ஜக் கலிஸ் 75 பந்துகளில் (3 பவுண்டரிகள் உட்பட) 47 ஓட்டங்களை எடுத்த நிலையில் சவுத்தியின் பந்தில் சிக்ஸர் அடிக்க முற்பட்டு எல்லைக் கோட்டிற்கு அருகே களத்தடுப்பில் ஈடுபட்ட ஓரமின் அருமையான பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து நதன் மக்குலம் வீசிய ஆட்டத்தின் 28 ஆவது ஓவரில் தென்னாபிரிக்க அணிக்கு இரட்டையடி விழுந்தது.

இந்த ஓவரின் 4ஆவது பந்தில் டுமினி 3 ஓட்டங்களுடன் போல்ட் முறையில் ஆட்டமிழந்தார்.


அடுத்து 6ஆவது பந்தில் ஓட்டமெடுக்க முற்பட்ட டி வில்லியர்ஸ் ரன் அவுட் முறையில் ஆட்டமிழந்தார்.

இதில் வில்லியர்ஸ் 40 பந்துகளில் (4 பவுண்டரி உட்பட) 35 ஓட்டங்களை எடுத்தார்.

தொடர்ந்து களமிறங்கிய டு பிளிஸஸ் பொறுப்பான ஆட்டத்தை வழங்க மறுமுனையில் விக்கெட்டுக்கள் சரிந்தன.

இதில் போத்தா 2 ஓட்டங்களுடனும் பீட்டர்சன் பூச்சியத்துடன் ஸ்ரையன் 8 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து ஏமாற்றமளித்தனர்.

இந் நிலையில் டு பிளிஸஸும் 43 பந்துகளில் (3 பவுண்டரிகள், ஒரு சிக்ஸரும் உட்பட) 36 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழக்க தென்னாபிரிக்க அணி 43.2 ஓவர்களில் 172 ஓட்டங்களை மாத்திரம் எடுத்து சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.



இதன் மூலம் 49 ஓட்டங்கள் வித்தியாசத்தில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி அரையிறுதிக்கு முன்னேறியது.

பந்து வீச்சில் ஜேக்கப் ஓரம் 4 விக்கெட்டுக்களையும் நதன் மக்குலம் 3 விக்கெட்டுக்களையும் சௌத்தி, வூட்டுக் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இப்போட்டியில் பந்துவீச்சில் ஜொலித்து நியூசிலாந்தின் வெற்றிக்கு திருப்பு முனையமைத்த ஜேக்கப் ஓரம் ஆட்ட நாயகனாகத் தெரிவானார்.

இம் முறை அரையிறுதிக்கு முன்னேறிய நியூசிலாந்து அணி புது அவதாரம் எடுத்துள்ளது. இன்று நடக்கும் இலங்கை-இங்கிலாந்து அணிகளுக்கிடையிலான போட்டியில் வெற்றிபெறும் அணியுடன் நியூசிலாந்து அணி எதிர்வரும் 29 ஆம் திகதி கொழும்பில் நடைபெறும் அரையிறுதியில் சந்திக்கும்.

### ஆறாவது முறை

நேற்று தென்னாபிரிக்காவை வீழ்த்திய நியூசிலாந்து அணி உலகக்கிண்ண அரங்கில் ஆறாவது முறையாக (1975,79,92,99, 2007,2011) அரையிறுதிக்கு முன்னேறியது.

ஆனால் கடந்த ஐந்து முறையில் ஒரு முறை கூட இறுதிப்போட்டிக்கு முன்னேறவில்லை. கடந்த 1983, 87இல் முதல் சுற்றோடு வெளியேறிய நியூசிலாந்து அணி 1996 இல் காலிறுதி வரையிலும் 2003 இல் சுப்பர்-6 சுற்று வரையிலும் முன்னேறியது.

## அதிக பாதுகாப்பு வேண்டும்

அரையிறுதி போட்டியில் பங்கேற்க இந்தியா செல்லும் வீரர்களுக்கு ஐ.சி.சி. அதிகபட்ச பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என பாகிஸ்தான் கிரிக்கெட் சபை(பி.சி.பி) வேண்டுகோள்விடுத்துள்ளது.

உலகக்கிண்ணத் தொடர் அரையிறுதிப் போட்டியில் பங்கேற்க மூன்று ஆண்டுகளுக்குப்பின் இந்தியா வருகிறது பாகிஸ்தான் அணி. இவர்களுக்கு மும்பை, சிவசேனா கட்சி சார்பில் ஏற்கனவே மிரட்டல் விடுக்கப்பட்டுள்ளது.

இது குறித்து பி.சி.பி நிர்வாகம் ஐ.சி.சியிடம் முறையிட்டுள்ளது. அதில், 2008 மும்பைத்தாக்கு தலுக்குப் பின் எங்கள் அணி இந்தியா செல்லவில்லை. இதனால் அரையிறுதியில் பங்கேற்கும் வீரர்களுக்கு அதிகபட்ச பாதுகாப்பை ஏற்பாடு செய்து எவ்வித சிக்கலும் இல்லாமல் விளையாட ஏற்பாடு செய்ய வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நல்லிணக்க ஆணைக்...

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க ஆகியோரிடம் சாட்சியங்களை பெறுவதில் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு ஆர்வமாக இருந்தது.

ஆனால் இதுவரை அவர்கள் சாட்சியமளிக்காத நிலையில் ஆணைக்குழுவினால் இறுதி அறிக்கையை தயாரிக்க முடியாதுள்ளது எனக் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அண்மையில் தெரிவித்திருந்தது.

இந்நிலையில் இனங்களை ஐக்கியப்படுத்தவும் மக்களின் பிரச்சினைகளுக்கு தீர்வு காணவுமே இந்த ஆணைக்குழு அமைக்கப்பட்டது. ஆனால் ஆணைக்குழு இந்த நோக்கங்களை நிறைவேற்றுவதில் ஆர்வமாக இல்லை என ஐக்கிய தேசியக் கட்சியின் பொதுச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க கூறினார்.

எமது தலைவர் ரணில் விக்கிரமசிங்க ஆணைக்குழுமுன் சாட்சியமளிக்கமாட்டார் எனவும் அவர் கூறினார்.

இந்த ஆணைக்குழுவிற்காக பல மில்லியன் ரூபாய் தேவையின்றி செலவிடப்பட்டுள்ளது. ஆனால் இறுதி அறிக்கை வெளிவர ஒரு வருடம் தேவைப்படுகின்றது எனவும் திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்.

இதேவேளை ஸ்ரீலங்கா காங்கிரஸின் பொதுச் செயலாளர் ஹசன் அலி மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பொதுச் செயலாளர் மாவை சேனாதிராஜா ஆகியோர் தமது கட்சிகளின் தலைவர்கள் வெளிநாட்டில் இருப்பதாகவும் அவர்கள் நாடுதிரும்பியதும் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுடன் தொடர்பு கொள்வர் என தெரிவித்தனர்.

அடுத்தமாதம் ஆணைக்குழு தமது அறிக்கையை ஜனாதிபதியிடம் சமர்ப்பிக்கும் என கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் செயலாளர் தெரிவித்துள்ளார். (ந-5)

# தமிழ்க் கட்சிகளின்...

பேச்சுவார்த்தைகள் நடத்தப்பட்டுள்ளன.

எவ்வாறெனினும் இதுவரையில் எந்தவித யோசனைத் திட்டங்களும் முன்வைக்கப்படவில்லை. சிறுபான்மை மக்களின் அபிலாசைகள் பற்றி உரிய கவனம் செலுத்தப்படும்.

பல வருடங்களுக்கு முன்னர் கொழும்பில் 95 சதவீதமான சிங்கள மக்கள் வாழ்ந்தனர். எனினும் தற்போது 27 சதவீதமான சிங்களவர்களே கொழும்பில் வாழ்கின்றனர். இப்போது கொழும்பில் ஏனைய இன மக்கள் அதிகரித்துள்ளனர்.

இவ்வாறு இனங்கள்யாவும் ஒற்றுமையுடன் வாழும்போது அரசியல்வாதிகளே தமது அரசியல் நோக்கத்திற்காக பிரச்சினைகள் இருப்பதாக வெளிக்காட்டுகின்றனர்.

வடக்கில் சகல பொலிஸ் நிலையங்களிலும் குறைந்தபட்சம் தமிழ் மொழி பேசும் ஒரு பொலிஸ் உத்தியோகத்தரையேனும் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படும். வடக்குப் பிராந்திய நீதிமன்றங்களில் நிலவும் வெற்றிடங்களுக்கும் தமிழ் உத்தியோகத்தர்கள் நியமிக்கப்படுவர் என குறிப்பிட்ட ஜனாதிபதி,

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவம் தொடர்பாகக் கருத்துரைக்கையில்,

தலைவராக வருவதற்கு முன்னர் ஒருவருக்கு நன்றிக்கடன் செலுத்தும் தன்மையும் பொறுப்பை ஏற்றுக்கொள்ளும் தன்மையும் இருக்கவேண்டும்.

ரணசிங்க பிரேமதாஸ ஜனாதிபதியாக இருந்தபோது ரணில் விக்கிரமசிங்க செய்த நற்காரியங்களுக்கு சஜித் பிரேமதாஸ நன்றிக்கடன் செலுத்த தவறிவிட்டதைச் சுட்டிக்காட்டும் கருத்துப்படவே ஜனாதிபதி இதைத் தெரிவித்தார். (ந-5)




லிபியாவில் மேற்குலக நாடுகள் மேற்கொண்டுவரும் தாக்குதலுகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்து கொழும்பில் நேற்று நடைபெற்ற ஆர்ப்பாட்டதில் அமெரிக்க ஜனாதிபதி ஒபாமாவின் உருவப்பொம்மை எரிக்கப்பட்ட போது...

# புலனாய்வுத்...

அரசுடன் கூட்டு அரசியலுக்கு தயாராகிவிட்டன எனும் அரசின் சர்வதேச பிரசாரங்களுக்கு உலக அரங்கில் பெரும் சவாலாக புலம் பெயர் தமிழர்களும் அவர்களுக்கு தலைமை தாங்கும் நாடுகடந்த தமிழீழ அரசாங்கமும் பெரும் இடைஞ்சலாக அமைவதாக குறிப்பிட்டிருக்கும் கொழும்பு ஊடகம் இதனை தடுத்து நிறுத்தும் முயற்சியில் அரசு தீவிரமாக இறங்கியுள்ளதாக அந்த ஊடகம் தெரிவித்துள்ளது. (ந-5)

# முஸ்லிம்களின்...

தெரிவிக்கையில்,

முஸ்லிம்களின் சுயாட்சியை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் ஏற்றுக்கொண்டிருந்தார். வட்டுக்கோட்டை தீர்மானத்தில் இது ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது.

வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களும் இடம்பெயர்ந்த தமிழ் மக்களுடன் மீளக் குடியமர்த்தப்பட வேண்டும். அப்பகுதியில் முஸ்லிம்களுடன் இணைந்து வாழ்வதற்கு தமிழ் மக்கள் தயாராகவுள்ளனர் என அவர் தெரிவித்தார். (ந-5)

# ஆஸியில்...

பர்மாவின் நான்கு பேர் அவுஸ்திரேலியாவில் தடுத்துவைக்கப்படுள்ள நிலையில் மன அழுத்தம் காரணமாக தற்கொலைக்கு முயற்சித்ததாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-5)

# அமெரிக்காவைக் கண்டி...

ஆர்ப்பாட்டக்காரர்கள் கொள்ளுப்பிட்டி ஜும்மாப் பள்ளிவாசலிலிருந்து அமெரிக்கத் தூதரகத்தை நோக்கி பேரணியாகச் செல்ல முற்பட்டபோதிலும் காலி வீதியில் பொலிஸார் தடுப்பு வேலிகளை அமைத்து ஆர்ப்பாட்டக்காரர்கள் அமெரிக்கத் தூதரகத்தை நோக்கிச் செல்லவிடாது தடை விதித்தனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவித்த ஐக்கிய தேசியக் கட்சியின் மேல் மாகாணசபை உறுப்பினர் முஜிபூர் ரஹமான்,

அமெரிக்கா உள்ளிட்ட மேற்குலக நாடுகள் லிபியா மீது தாக்குதலை நடத்தி வருகின்றன. இவ்வாறான தாக்குதல்கள் உடனடியாக நிறுத்தப்படவேண்டும்.

பலஸ்தீன மக்களுக்கு எதிராக இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகின்றது. இது குறித்து அமெரிக்கா எந்தவித அக்கறையும் கொள்வதில்லை.

ஆனால் லிபியாவின் விடயத்தில் அமெரிக்கா தலையிடுகிறது. லிபியாவில் உள்ள உள்நாட்டுப் பிரச்சினையே நிலவுகிறது. அந்த நாட்டின் உள்நாட்டுப் பிரச்சினையை அந்த நாட்டு மக்களே தீர்க்கவேண்டும். லிபியாவின் உள்நாட்டுப் பிரச்சினையில் அமெரிக்கா தலையிடுவதற்கான எந்தவிதமான அதிகாரமுமில்லை.

இந்த நிலையில் அமெரிக்காவின் ஏகாதிபத்தியம் ஒழிக்கப்படவேண்டும் என்றார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் அமைச்சர்களான ரிஷாத் பதியுதீன், வாசுதேவ நாணயக்கார, பிரதியமைச்சர் பைஸர் முஸ்தபா, மேல் மாகாண ஆளுநர் அலவி மௌலானா உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர். (ந-5)

# தேர்தல் முடி...

இச் சந்திப்பில் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை கொழும்பில் 05 உள்ளூராட்சி சபைகளை ஒன்றிணைத்து அமைக்கப்பட்டுள்ள கொழும்புப் பெருநகர கூட்டுத்தாபனத்தினால் உள்ளூராட்சிசபைத் தேர்தல்கள் நடைபெறுவதற்கு எவ்வித தடையும் ஏற்படாது என அவர் கூறியுள்ளார்.

கொழும்பு மாநகர சபை, தெகிவளை- கல்கிசை மாநகர சபை, சிறி ஜெயவர்த்தனபுரக் கோட்டை மாநகரசபை, கொலன்னாவை நகரசபை, கொட்டிகாவத்தை- முல்லேரியாப் பிரதேசசபை ஆகிய ஐந்து உள்ளூராட்சி சபைகளையும் இணைத்து கொழும்பு பெருநகரக் கூட்டுத்தாபனம் ஒன்றை உருவாக்குவதற்கான அங்கீகாரத்தை அமைச்சரவை வழங்கியுள்ளது. (ந-5)


## விற்பனைக்கு

மெசின் மூலம் அரிந்த கொங்கிறீற் கற்கள், கிணற்றுக் கற்கள், கொங்கிறீற் தூண்கள், வேலித் தூண்கள், அலங்காரத் தூண்கள், அலங்காரக் கற்கள் மற்றும் கட்டட மூலப் பொருட்கள் அனைத்தையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

தொடர்பு:- பாலா என்ரபிறைசஸ்
554, கண்டி வீதி, அரியாலை.
(ஸ்ரீ பார்வதி வித்தியாலயம் அருகில்)
T.P 0214922804 (4222)

அரச அலுவலர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள் மற்றும் உயர்கல்வி மாணவர்களுக்கான MyWay யின்

இரண்டு நாள் இலவச ஆங்கில வகுப்பு

காலம் : 26, 27 ஆம் திகதிகள் (சனி, ஞாயிறு)
பிரிவுகள் : காலை 8- 9, 9-10, 10-11, 11-12
மாலை 1-2, 2-3, 3-4, 4-5, 5-6
(ஏதாவதொரு பிரிவில் கலந்துகொள்ளலாம்)

அனுமதி மற்றும் பயிற்சி புத்தகம் இலவசம்

தனியார் அலுவலர்கள், இளைஞர் யுவதிகளுக்கு அனுமதி இல்லை

MyWay 182 1/5, STANLEY ROAD, JAFFNA
077 33 63 456 021 222 9505

STUDYING UK
April 2011 Intake

ஏப்ரல் மாதத்தில் ஏற்பட இருக்கும் மாற்றத்திற்கு முன் மாணவர்கள் செல்வதற்கான அனுமதி பதிவுகளுக்கு முந்திக்கொள்ளுங்கள்

ENGLAND

O/L அல்லாதவர்களுக்கும் LONDON செல்லும் ஓர் அரிய வாய்ப்பு

லண்டன் விசாக்கள் 100% விசா உத்தரவாதம்

குறைந்தபட்ச தகமை G.C.E (O/L) போதுமானது.
IELTS தேவையில்லை, விசேட ஆங்கில பயிற்சி வழங்கப்படும்.
Sponsor (Bank Arrangement) வசதி செய்து தரப்படும்.
20 மணி நேர பகுதி நேர வேலைவாய்ப்பு உறுதி.

கடைசியாக சென்றவர்களில் சிலர்:

S. Keerthiya, Urumpirai West, Urumpirai.
Lavakumaran., Wellvattithurai, Jaffna
V. Vijitharan, Pointpedro, Jaffna
Nanthagopal, Kokuvil, Jaffna
Dinojkumar, Trincomalee
Vinson Amalathas, Pointpedro, Jaffna
T. Kiruthikka, Kantharmadam, Jaffna
A.J.Jackshan, Batticaloa
Jonis Amalraj, Pointpedro, Jaffna
Mr. Aron Thusanth, Pointpedro, Jaffna
R. Sanjeevan, Achuveli, Jaffna
Asker Ali, Main Street, Sammanthurai
V.Pushpakumar, Delf - Jaffna
Mr. A. Ravi, Nallur, Jaffna
Miss. Bavatharani, Chavakacheri, Jaffna
T.Asok Kumar, Adyapatham, Jaffna
R.Dinesh, KKS Road, Jaffna
Vikneswaran, Wattala, Colombo
Mr. Skywin, Batticolla
J.I. Niroshini, Batticalloa
R.Riffan, Colombo-13
C. Staford, Colombo-13
Miss. Deffni, Negambo
Anoshanth, Jaffna
Krishnashanthy, Thunnalay, Jaffna
M.Usaith, Sammanthurai
Rubamerikka, Vellvettithurai, Jaffna
P. Mathu, Tillainagar, Tricomelle

உறுதியான பயணம் உயர்வான கல்வி நிறைவான சேவை

WIHE Westminster International Institute of Higher Education

WESTMINSTER INSTITUTE OF HIGHER STUDIES
No. 03, Ramanathan Road, Kalatti Junction, Jaffna.
No. 23, Thamaraikeni Road, Batticaloa.
Telephone: 0213207778 - 0653064810 - 0113056888.
Hot line : 0771919192 - 0772229286


இப்பத்திரிகை வலம்புரி அன்.கோஸ்தாபனத்தாரால் இல.3.2 ஆம் ஒழுங்கை, ... உள்ள அவர்களது அச்சகத்தில் 26.03.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org